# தமிழரசு

1-3-1978 50 காசு.





# மதுவை ஒழித்து மகிழ்ச்சி நிலவச் செய்வோம்!



"சாராயம் நம் உடலையும், நடத்தையையும், அறிவையும் பாழாக்குகிறது!"

**"மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும், கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்."**

— அண்ணல் காந்தியடிகள்

"மதுவிலக்கு இல்லையேல் அரிசனங்களுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் விமோசனம் இல்லை!"

— பேரறிஞர் அண்ணா



வெளியீடு :—
இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

## இந்த இதழில்....

வணக்கம்.

தமிழக அரசின் 1978-79—ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சட்ட மன்றப்பேரவை முன் வைத்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய முழு உரை இவ்விதழில் இடம் பெறுகிறது. சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பயன் தரும் நல்வாழ்வுத் திட்டங்கள் அடங்கியதாக விளங்கும் தமிழக அரசின் வரவு செலவுத் திட்டத்தின் சிறப்புக் கூறுபாடுகளும் சுருக்கமாகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. நாட்டின் முதுகெலும்பான கிராமங்கள் தன்னிறைவு அடையவும், கிராமங்களின் வருமானத்தைப் பெருக்கவும் 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்' தொடங்கப்பட உள்ளது என்பது நிதிநிலை அறிக்கையின் தலையாய அம்சங்களில் ஒன்றாகும்.

'வளரும் தமிழகம்' என்ற தொடரில், வானொலியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் 19-2-'78-அன்று ஆற்றிய உரையில், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்றி வரும் பணிகளைக் கோடிட்டுக் காட்டி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் நேரடித் தேர்வு முறையின் பயன்களையும் எடுத்துக் கூறியுள்ளார்கள்.


'அண்ணா எனும் இலக்கியவாதி' என்ற தொடர் கட்டுரையின் மூன்றாவது பகுதி இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. எழுத்துலக வேந்தன் அண்ணாவின் எழுத்து வன்மையை—புதிய கோணத்தில் நின்று திறனாய்வு செய்கிறார் கட்டுரையாசிரியர்.

அறிவுக் கேணிகளாகத் திகழும் பள்ளிகளின் சீரமைப்பு இயக்கம் தமிழகத்தில் எவ்வாறு மலர்ந்துள்ளது என்பதைப் படம் பிடித்துக் காட்டுகிறார் 'பள்ளிச் சீரமைப்பு' என்ற கட்டுரையில், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள்.

நீரிழிவு நோய் (DIABETES) என்றாலே நெஞ்சுடைந்து போனவர்களுக்குப் புதுத் தெம்பினை ஊட்டுகிறது 'நீரிழிவு நோய்' என்ற பேட்டிக் கட்டுரை. கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் நீரிழிவு ஆராய்ச்சிச் சிறுகுழு ஆற்றும் அரிய பணிகள் பற்றித் தெரிந்துகொள்வதுடன், நீரிழிவு நோய் என்றால் அஞ்சத் தேவையில்லை; அதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட முடியும், என்ற நம்பிக்கையையும் ஆழமாகப் பதியவைத்து விடுகிறது, இப்பேட்டிக் கட்டுரை.

சேமிப்பின் அவசியத்தை வலியுறுத்துகிறது, 'சீரான வாழ்வுக்குச் சேமிப்பு'.

'அறிவியல் அரங்கம்' என்ற புதுத் தொடரில், 'வண்ண வண்ண மலரே' என்ற அறிவியல் கட்டுரைதான், 'அட்டை சொல்லும் கதை'.




# தமிழரசு

மலர் : 8 இதழ் : 17

1—3—1978


**உள்ளே...**


தமிழ்நாடு அரசின் 1978-79-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை .. 2

தமிழகத்தில் பள்ளிச் சீரமைப்பு .. 19

படமும் செய்தியும் .. 23

நீரிழிவு நோய் .. 26

வளர்ச்சியும் தேவையும் .. 33

சீரான வாழ்வுக்குச் சேமிப்பு .. 35

மலரே வண்ண மலரே! .. 39

சத்துணவுச் சமையலுக்குக் காய்கறிகள் .. 41

அண்ணா எனும் இலக்கியவாதி .. 47




# தமிழ்நாடு அரசின் 1978-79 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை

## நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் உரை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1977-78-ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளையும் 1978-79-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை மதிப்பீடுகளையும் இம் மன்றத்தின் முன் ஒப்புதலுக்காக வைக்கிறேன்.

வரும் நிதி ஆண்டு, முழு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை இந்த அரசு தயாரித்து அவைக்கு அளிக்கும் முதல் ஆண்டாகும். நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் ஏழு மாதங்களுக்கு முன் அவையில் வைக்கப்பட்டது. இந்த இடைவெளியில், அக்டோபர், நவம்பர் மாதங்களில் இயற்கையின் கொடுமை, கடும் புயலாய், பெரும் வெள்ளமாய், தொடர் மழையாய் தமிழகத்தைத் தாக்கியது. இந்தத் தாக்குதலை உறுதியுடனும் துணிவுடனும் நாம் சமாளித்திருக்கிறோம். இப்பெருந்துயரை நம் மக்கள் மனந்தளராது தன்னம்பிக்கையுடன் தாங்கி, தங்களுக்கே உரித்தான மனத் திண்மையை மீண்டும் வெளிப்படுத்தினர். அரசைப் பொறுத்தமட்டில், மறுவாழ்வு, நிவாரண வேலைகளிலும், சேதமடைந்த சொத்துக்களைச் செம்மைப்படுத்துவதிலும் நிதிப்பற்றுக்குறையைப் பொருட்படுத்தாமல் செயல்பட்டுள்ளோம். எனினும், புயல்-வெள்ள நிவாரணப் பணிகளில் இவ்வரசு எடுத்துக் கொண்டுள்ள பல்வேறு முயற்சிகள் தமிழக மக்களின் அனைத்துப் பிரிவினர், தனியார் தொண்டு நிறுவனங்கள், பொறுப்புணர்ச்சியுள்ள அரசியல் கட்சிகள், பல நிலைகளிலுமுள்ள அரசு அலுவலர்கள், மத்திய அரசு ஆகியோரின் மன மார்ந்த ஒத்துழைப்பின்றி வெற்றி பெற்றிருக்க மாட்டா. இவ்விதம் இயற்கையின் சீற்றத்தைச் சமாளிப்பதில் நமக்கு உறுதுணையாயிருந்த தனிப்பட்ட மக்களுக்கும், நிறுவனங்களுக்கும், ஏனைய மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் நன்றியைத் தெரிவிப்பது எனது தலையாய கடமையாகும்.




வேலை வாய்ப்பைப் பெருக்குதல், வறுமை நிலையை அகற்றுதல், கிராமப்புற வளர்ச்சி, சமுதாயத்தில் அடித்தள மக்களின் மேம்பாடு ஆகியவையே நமது அடிப்படைக் குறிக்கோள்கள். சொல்லப்போனால், இவையே தற்போது தேசிய அளவிலும் குறிக்கோள்களாக விளங்குகின்றன. கிராம

மக்கள் மேம்பாடு, சிறு தொழில், குடிசைத் தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்பு, மதுவிலக்கு ஆகிய அடிப்படை அம்சங்களில் மத்திய அரசிற்கும் மாநில அரசிற்கும் கொள்கை அளவில் ஒற்றுமை இருப்பது திருப்தியையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. இவ்வாறான ஒருமித்த குறிக்கோள்களின் பின்னணியில்தான் தமிழகத்தின் வளர்ச்சி குறித்து மத்திய அரசும் மாநில அரசும் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியம்.

நாட்டின் இன்றையப் பொருளாதார நிலைமையைக் கவனிக்குங்கால், உணவு தானியங்களும், அன்னியச் செலாவணியும் பெரும் அளவில் இருப்பது அரிய வாய்ப்பாகும். விலைவாசிகளில் ஓரளவு ஏற்றம் இருப்பினும், இது அச்சமுறுமளவுக்கு இல்லையென்றே சொல்ல வேண்டும். நம் மாநிலத்திலும் ஆந்திரத்திலும், புயலால் நெற்பயிர் பெரும் சேதம் அடைந்துள்ளது. மாநிலங்களுக்கிடையேயான உணவு தானியப் போக்குவரத்து சம்பந்தப்பட்ட தடைகள் அனைத்திந்திய முறையில் நீக்கப்பட்டுள்ளன. இருப்பினும் உணவுப் பொருள்கள் நியாயமான விலையில், போதிய அளவு கிடைக்கும்படிச் செய்திருக்கிறோம். உணவு தானியங்களைக் கொள்முதல் செய்தும், வெளிச் சந்தையில் விலைக்கு வாங்கியும் மத்திய அரசிடம் பெற்றும், பொது வினியோகத்தைப் பராமரிக்க மட்டுமல்லாமல், விரிவுபடுத்தவும் முயன்றுள்ளோம். மின் உற்பத்திக்குப் பயன்படும் அணைகளில் நீர் அளவு நன்றாக உள்ளது. தென் மேற்குப் பருவ மழை இயல்பாக இருந்தால், வரும் ஆண்டில் மின் வெட்டு ஏதும் இராதென்று எதிர்பார்க்கலாம். வேளாண்மைக்குத் தேவையான இடுபொருள்களின் இருப்பு திருப்திகரமாக உள்ளது. தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருள்களிலும் பற்றாக்குறை ஏதும் இல்லை. தொழிலாளர் நலத் துறையில் பல பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு, பெருமளவிற்கு அமைதி நிலவுகிறது. இந்த அரிய வாய்ப்புகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டு, வளர்ச்சியின் வேகம் ஊக்குவிக்கப்பட வேண்டும். நிறைவேறத் தயாராயுள்ள நல்ல திட்டம் எதுவும், நிதிப் பற்றாக்குறையின் காரணமாகத் தடங்கலோ தாமதமோ அடையக் கூடாது. இந்த அடிப்படையில், மத்திய அரசு, மாநிலங்களுக்குப் போதிய நிதி உதவி செய்து, அவர்களுடன் தோளோடு தோள் நின்று செயல்பட வேண்டுமென்பதே நம்முடைய விருப்பமும் வேண்டுகோளுமாகும். சீரிய, சிக்கனக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது நமது பொறுப்பு. அதே நேரத்தில், தமிழக மக்களின் நல்வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் வேண்டிய நியாயமான தேவைகளை மத்திய அரசு மனமுவந்து நிறைவு செய்ய வேண்டும் என எதிர்பார்ப்பதும் நமது உரிமையாகும்.

## ஆண்டுத் திட்டம்

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இந்த ஆண்டுடன் முடித்து, 1978-79-ஆம் ஆண்டிலிருந்து புதிய ஐந்தாண்டு விரிவடையும் திட்டம் ( Rolling Plan ) ஒன்று தொடங்கப்படும் என்று தேசிய அளவில் எடுக்கப்பட்டுள்ள முடிவை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவர். வரும் ஐந்தாண்டுத் திட்டத்தை வகுக்கும் முன்னர், 1978-79ஆம் ஆண்டுத் திட்டம், 1974-75-லிருந்து செயற்படுத்தப்பட்டு வந்த ஐந்தாவது திட்டத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## நிதிநிலை அறிக்கை சிறப்புக் கூறுபாடுகள்

* கிராமங்கள் தன்னிறைவு அடையவும், கிராமங்களின் வருமானத்தைப் பெருக்கவும் 'கிராமத் தன்னிறைவுத் திட்டம்'.
* கிராமப்புற வீட்டு வசதிக்காக மூன்று கோடி ரூபாய்!
* ஏழு புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.
* குடிநீர் வசதிக்காக 7.9 கோடி ரூபாய்.
* நியாய விலைக்கடைகள் இல்லாத வருவாய்க் கிராமங்களில் நியாய விலைக் கடைகள் தொடங்கும் திட்டத்திற்காக, 2 கோடி ரூபாய்.
* நூற்றுப்பதினொன்று கோடி ரூபாய் அளவில் ஏரி, குளங்களை நவீனப்படுத்தும் திட்டம்.
* சிறுதொழில்களை ஊக்குவிக்க, ஏழு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்கள்.
* கூட்டுறவுத் துறையில் மேலும் இரு சர்க்கரை ஆலைகள்.
* மின்சக்தி வளர்ச்சிக்கு 114 கோடி ரூபாய்.
* வரும் ஆண்டில் 35 ஆயிரம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு.
* மூன்றாவது ஊதியக்குழுவின் பரிந்துரைகள் வரும் ஏப்ரல் திங்கள் முதல் தேதி முதல் அமலாக்கப்படும்.
* அரசு அலுவலர்களின் பணி விதிகளை எளிதாக்கிப் புதுமைப்படுத்தப் பணிக்குழு.
* தமிழ்ப்பண்பாடு வளர்ச்சிக்கான புதுத்திட்டங்கள்
  சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம்.
  மதுரையில் இசைக் கல்லூரி.
* பேருந்து விபத்தில் இறப்போர் குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாய்.

1978 - 1979

தமிழ்நாட்டிற்கு 1974 முதல் 1979 வரையிலான ஐந்து ஆண்டுத் திட்ட அளவை 1,122 கோடி ரூபாய் எனத் தேசிய வளர்ச்சிக் குழு நிர்ண யித்து இருந்தது. இந்தக் கால அளவில், நடப் பாண்டுடன் முடிவடையும் நான்கு ஆண்டுகளில், நமது திட்டச் செலவு 864 கோடி ரூபாயாக இருக்கும். வரும் ஆண்டில், திட்ட அளவு 305 கோடி ரூபாயாக இருக்கும். இது நடப்பாண்டிற்கு ஒப்புக்கொள்ளப்பட்ட திட்ட அளவான 260 கோடி ரூபாய்க்கு மேல்; 45 கோடி ரூபாய் அளவில் அதாவது 17 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. இது, திட்டச் செலவை மேம்படுத்துவதில் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு அறிகுறியாகும் என்று சொல்ல விரும்புகிறேன். 1974 முதல் 1979 வரை நமது திட்டச் செலவு 1,169 கோடி ரூபா யாக, அதாவது தேசிய வளர்ச்சிக் குழு நிர்ண யித்த அளவுக்கு மேலாகவே இருக்கும்.




கிராமப் பகுதிகளுக்கும் நலிந்த பிரிவினருக் கும் முன்னுரிமை கொடுத்து, வளர்ச்சிப் பணி களுக்கான ஒதுக்கீடுகளை இந்த வரவு-செலவுத் திட்டத்தில் மேலும் உயர்த்துவது நமது அடிப் படை நோக்கம் ஆகும். திட்டத்தில் முக்கிய துறை களுக்கான ஒதுக்கீடுகள் பின்வருமாறு; மின்சாரம் 114 கோடி ரூபாய், பாசனம் 24.9 கோடி ரூபாய், விவசாயமும் அதனைச் சேர்ந்த துறைகளும் 44.6 கோடி ரூபாய், தொழில் 13.5 கோடி ரூபாய், போக்குவரத்தும் சாலை வசதியும் 28.3 கோடி ரூபாய், குடிநீர் வழங்கலும் கழிவுநீர் அகற்றலும் 27.3 கோடி ரூபாய், கல்வி 16.7 கோடி ரூபாய், ஏனைய சமூக-பொருளாதாரப் பணிகள் 35.7 கோடி ரூபாய். இந்த ஒதுக்கீடுகளில், புயலினாலும் வெள் ளத்தினாலும் சேதம் அடைந்த சாலைகள், பாசன ஆதாரங்கள், மண் மேடிட்ட நிலங்கள் ஆகிய வற்றைச் சீரமைக்கத் தேவையான 10.5 கோடி ரூபாயும் அடங்கும்.



## வேளாண்மையும் தொடர்புள்ள துறைகளும்


காவிரி பாசனப் பகுதியில் போதிய அளவு தண்ணீர் வருவதை உறுதிப்படுத்த இந்த அரசு மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, வழக்கம் போல் 4 இலட்சம் ஏக்கரில் குறுவைப் பயிர் நட முடிந்ததை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனை வரும் அறிவர். குறுவை விளைச்சல் மிகச் சிறப் பாக இருக்குமென எதிர்பார்த்தோம். ஆனால், புயல், வெள்ளம் காரணமாக விளைபயிருக்கு ஏற் பட்ட சேதத்தால் நாம் எதிர்பார்த்தது நடக்க வில்லை. இருப்பினும், ஊக்கமும் செயல்திறனும் மிக்க நமது விவசாயிகள், அரசு அளித்த நிவாரண உதவிகளைப் பயன்படுத்தி, பாதிக்கப்பட்ட பகுதி களில் மீண்டும் பயிரிட முன்வந்தனர். எனவே, நடப்பாண்டில் வேளாண்மை உற்பத்தி நாம் முதலில் எதிர்பார்த்த இலக்கினைவிட ஓரளவே குறையும். 1978-79ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 87 இலட்சம் டன், கரும்பு (வெல்ல) உற்பத்தி 14.3 இலட்சம் டன், எண்ணெய் வித்துக்கள் 15.7 இலட்சம் டன், பருத்தி 4.2 இலட்சம் பொதிகள் இருக்க வேண்டுமென இலக் கிட்டுள்ளோம். விவசாயிகளை ஊக்குவிக்கும் முறை யில், தமிழ்நாட்டில் குவிண்டாலுக்கு மோட்டா ரகத்திற்கு 90 ரூபாய் என்ற விலையிலும் நடுத்தர ரகத்திற்கு 95 ரூபாய் என்ற விலையிலும் வெளிச் சந்தை வியாபார அடிப்படையில் விவசாயிகளிடம் நேரடியாக நெல் வாங்க அரசு முடிவெடுத்துள் ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

1978-79ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக் கான மொத்தத் திட்டச் செலவு 15.57 கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும். விதைப் பண்ணைகளை மேம்படுத்துவது, பயறுகள், புன்செய் தானியங்கள் உற்பத்தியைப் பெருக்குவது, கன்னியாகுமரி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் மாவட்டங் களில் தீவிர தென்னை வளர்ப்பை மேற்கொள்வது, சேலத்திலும் தென் ஆர்க்காட்டிலும் பெரிய அள வில் பழத் தோட்டங்களை ஏற்படுத்துவது முத லான வேளாண்மை மேம்பாட்டுப் பணிகள் பல வற்றிற்கும் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு கள் செய்யப்பட்டுள்ளன. இராமநாதபுரம், சேலம், நீலகிரி மாவட்டங்களில் புதிதாக உழவர் பயிற்சி நிலையங்களைத் தொடங்க உத்தேசித்துள் ளோம். இத்துடன் தமிழகத்தில் எல்லா மாவட் டங்களிலும் இத்தகைய நிலையங்கள் செயல்படும். விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படும் விதைகள் தரமானவையாக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு, விதை சான்றளிப்பு அமைப்பு ஒன்று தனித்துச் செயல்படும். கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பினைப் பெருக்கும் மண்வளப் பாது காப்புத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளித்து, இதற்கென வரவு-செலவுத் திட்டத்தில் 3.34 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். வறண்ட பகுதி களில், மண்வளப் பாதுகாப்புடன்கூட, கசிவுநீர் குட்டைகள், ஊருணிகள் அமைத்தும், வேறு புதிய முறைகளைக் கடைப்பிடித்தும் நீரைச் சேமித்துச் செவ்வையாகப் பயன்படுத்தத் திட்டங்கள் வகுத் துச் செயற்படுத்தப்படும். கரும்பு பயிரிடு பகுதி களில் சாலை வளர்ச்சிக்கென 1.1 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.


விவசாயிகளின் வருமானத்தை உறுதிப் படுத்துவதிலும் உயர்த்துவதிலும் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் நேரடிப் பயனைத் தரவல் லன. 16 கால்நடை வளர்ச்சி வட்டாரங்களைத் தொடங்கவும், 10 கால்நடை மருத்துவ நிலையங் களைத் தொடங்கவும், 7 கால்நடை மருத்துவ நிலை யங்களையும் மருந்தகங்களையும் கூடுதல் வசதி களுடன் தரமுயர்த்தவும், கால்நடை நோய் பற் றிய தகவல் திரட்டும் பிரிவுகள் இரண்டினை ஏற் படுத்தவும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக் கீடுகள் செய்யப்பட்டுள்ளன. திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, மதுரை மாவட்டங் களில் செயல்பட்டுவரும் தீவிரக் கால்நடை மேம் பாட்டுத் திட்டம், வரும் ஆண்டில் திருச்சிராப் பள்ளி மாவட்டத்துக்கு விரிவுபடுத்தப்படும்.



பால்பண்ணை வளர்ச்சியின் கீழ், திருச்சி-ஸ்ரீரங்கத்திலும், சேலத்திலும் இயங்கும் கூட்டுறவுப் பால்வழங்கு சங்கங்களை விரிவுபடுத்துவதற்காக, 16.5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், நம் மாநிலத்தின் இரண்டு முக்கிய நகரங்களில் வழங்கப்படும் பால் அளவைப் பெருக்க இயலும்.




மீனளத் துறைக்குத் திட்டத்தில் 1.43 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். நம் மாநிலத்தின் பல்வேறு நீர்த்தேக்கங்களில் மீனளத்தைப் பெருக்குவதற்குச் செய்துள்ள கணிசமான நிதி ஒதுக்கீடுகள் இதில் அடங்கும். மீனவர்களுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதிப்படுத்தும் நமது கொள்கைக்கிணங்க, மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனமாகவும் கடன், மானிய உதவித் தொகையாகவும் மொத்தம் 3.25 இலட்சம் ரூபாய் வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கியுள்ளோம். இயந்திரப் படகுகளைக் கட்டி வழங்குவதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு மீனள வளர்ச்சி நிறுவனத்துக்கு 92.4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நியாய விலைகளில் மீன் விற்பதற்காக, நம் மாநிலம் முழுவதிலும் சில்லறை விற்பனைக் கடைகள் பலவற்றை மீனள வளர்ச்சி நிறுவனம் ஏற்படுத்தும். இத் திட்டத்தால் மீனவர்களுக்கு விற்பனை வசதிகள் சீராகக் கிடைப்பதுடன், பரவலாக வேலைவாய்ப்பும் கிட்டும். மீனவர் வீட்டு வசதித் திட்டத்துக்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.




காடுகள் இயற்கைச் செல்வமாக இருப்பதோடன்றி, காடுபடுபொருள் விற்பனை மூலம் அரசுக்கு நல்ல வருவாயும் தருகின்றன. வரும் ஆண்டில் காடு வளர்ப்புத் திட்டங்களுக்காக 4.2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சந்தனக் கட்டை, பிற காடுபடு பொருட்களை மூலப்பொருள்களாகக் கொண்டு, தொழில்கள் தொடங்க உத்தேசித்துள்ளோம். இவை வருவாய் தருவதோடு, பலருக்கு வேலைவாய்ப்பும் அளிக்கும். காட்டுப் பகுதிகளில் சாலைகள் அமைக்கவும் பணியாளர் குடியிருப்புகள் கட்டவும் 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவன்றி, அரசினர் சின்கோனா தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு 100 வீடுகள், 8 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்படும்.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை பலதிறப்பட்டதாக வளர்ச்சி அடைந்துள்ளது. உற்பத்திக் கடன், நில மேம்பாட்டுக் கடன், செலவுக் கடன் எனப் பலவகையான கடன் வழங்கு நடவடிக்கைகளில் கூட்டுறவுக் கடன் வசதி அமைப்பு ஈடுபட்டுள்ளது. மொத்த வணிகத்திலும் சில்லறை வணிகத்திலும், கிராமப் பகுதிகளில் கிடங்குகள் அமைப்பதிலும், வேளாண்மைப் பொருள்களைப் பதப்படுத்துவதிலும், உர வினியோகம் செய்வதிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபடுகின்றன. வீட்டு வசதி, கைத்தறி, தொழில், நூற்பு, நெசவு, சர்க்கரை உற்பத்தி ஆகியவை கூட்டுறவு இயக்கம் வேரூன்றியுள்ள முக்கியமான பிற துறைகளாகும். இத் துறைக்கெனத் திட்டத்தில் 7.41 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். மாநில நிலவள வங்கியின் கடன் அளிக்கும் திட்டத்தில் அரசின் பங்காக 1.6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் 19 கோடி ரூபாய் அளவுக்கு அவ் வங்கி கடன் வழங்க இது வசதியளிக்கும். நகையின் பேரிலான சொந்தச் செலவுக் கடன், கடந்த ஆண்டில் 40 கோடி ரூபாய் அளவுக்கே இருக்க, வரும் ஆண்டில் 70 கோடி ரூபாயாக உயருமென எதிர்பார்க்கிறோம். கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதன அமைப்பினை வலுப்படுத்தவும், அவை, நகையின் பேரில் வழங்கும் கடன் அளவைப் பெருக்குவதற்கு வசதியாகப் பாதுகாப்பு அறைகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் அவ்வப்போது பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வசதி பெற, கூட்டுறவுக் கடன் அமைப்பின் சொந்த நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும். இதன் பொருட்டு, கூட்டுறவுக் கடன் வழங்கு நிறுவனங்களின் வேளாண்மைக் கடன் நிவாரண, உத்தரவாத நிதிகளுக்கு 'அரசு உதவித் தொகை' யாக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.


நியாயவிலைக் கடைகள் இல்லாத வருவாய் கிராமங்கள் அனைத்திலும், அக் கடைகள் தொடங்குவது என்ற இந்த அரசின் கொள்கையை அவையினர் அறிவர். இத் திட்டம், நடப்பாண்டில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் நிறைவேற்றப்படும். படிப்படியாகப் பிறமாவட்டங்களிலும் விரிவுபடுத்துவதற்காக வரவு-செலவுத் திட்டத்தில் 2 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.



## பாசனம்

நடப்பாண்டில், 7 பாசனத் திட்டங்கள் நிறைவுறுமென எதிர்பார்க்கிறேம். இவற்றல், சுமார் 32,500 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசன வசதி பெறும்; மேலும், ஏற்கெனவே பாசன வசதி பெற்றுவரும் 1,13,500 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படும். தற்போது நடுத்தரப் பாசனத் திட்டங்கள் பல, குறிப்பாக, பெண்ணூறு, வைப்பாறு வடிநிலப் பகுதிகளில் ஆய்விலுள்ளன. வறட்சிப் பகுதிகளான தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள், இவற்றல் பயனடையும். ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் புதுத் திட்டங்களுக்காக, வரவு-செலவுத் திட்டத்தில் முதற் கட்டமாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

தமிழ்நாட்டில் ஆற்று நீரைப் பெரும்பாலும் பயன்படுத்திவிட்டபடியால், புதிய பெரிய-நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு வாய்ப்புகள் அதிகமில்லை. எனவே, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரைத் தமிழ்நாட்டுடன் பகிர்ந்து கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக, கேரள அரசுடன் ஏற்பட்டுள்ள உடன்பாடு, நடப்பாண்டில் நாம் எய்திய முக்கியமானதொரு சாதனையாகும். தமிழ்நாட்டில் வருங்காலத்தில்





பழைய பாசன அமைப்புகளைச் சீரமைத்து நவீனப்படுத்துவது, இயன்ற அளவு ஆயக்கட்டினை விரிவுபடுத்துவது, சிறு பாசன ஆதாரங்களிலுள்ள நீரைச் செவ்வையாகவும் சிக்கனமாகவும் பயன்படுத்துவது ஆகியவற்றில் முனைப்பாக நாட்டம் செலுத்த வேண்டும். காவிரி கழிமுகப் பகுதியில் கால்வாய்களைச் சீரமைக்கும் பணி 2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டுடன் அடுத்த ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். பெரியாறு-வைகை பாசன அமைப்பு மேம்பாட்டுத் திட்டம் உலக வங்கி உதவியுடன் நிறைவேறி வருகிறது. இத் திட்டத்திற்காக, 1978-79-ல் 10.94 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்-ஆளியாறு கால்வாய் ஏற்பாட்டுக்காகவும் அதன்கீழ் ஆயக்கட்டினை விரிவுபடுத்திடவும் 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி, குளங்களைத் தூர் வாரிச் சீரமைக்கவும், வரவு செலவுத் திட்டத்தில் 4.21 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் ஏரி, குளங்களைச் சீரமைத்து நவீனப்படுத்தும் முக்கிய திட்டம் ஒன்றைப் புதிதாக மேற்கொள்ள இருக்கிறேம். 500 ஏக்கருக்குக் குறையாத ஆயக்கட்டு உடைய பெரிய ஏரிகளின் நீர்கொள் அளவையும் திறனையும் பெருக்குவதற்காக, பல்வேறு வேலைகள் இத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். இத்துடன், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தவும், விவசாயிகள் தங்களுடைய வயல்களில் நீரைப் பயன்படுத்தும் முறைகளில் முன்னேற்றம் காணவும், கிடைக்கின்ற நீரைக் கொண்டு முழுப் பயன் பெற விஞ்ஞான ரீதியிலும் பொருளாதார வகையிலும் ஆலோசனைகள் நல்குவதற்கும் வழிவகை செய்யப்படும். இதற்காக, 111 கோடி ரூபாய் செலவில் பெருந் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். இத் திட்டத்தைச் செயற்படுத்த, உலக வங்கியினர் அக்கறை காட்டியுள்ளனர்; அவர்களை நிதி உதவிக்காக அணுகவிருக்கிறேம். 1978-79ஆம் ஆண்டில் முதற்கண் 12 ஏரிகளில் இப்பணி, முன்னேடித் திட்டமாக மேற்கொள்ளப்படும். நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டு வருகின்ற சூழ்நிலையில், உழவர் பலரும் உபயோகிக்கும் முறையில், பொதுப் பாசனக் கிணறுகள் மூலம் நிலத்தடி நீரைப் பகிர்ந்து கொள்வது பற்றி ஆராய்வது அவசியம். இது குறித்த முன்னேடித் திட்டம் ஒன்று கிழக்கு இராமநாதபுரத்தில் வரும் ஆண்டு தொடங்கப்படும். பல உழவர்கள் பாசன நீரைத் தங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளும் ஏற்பாடு, நிலத்தடி நீரைச் சிக்கனப்படுத்தும் நோக்கில் மட்டுமின்றி, சிறு சிறு நில உடைமைகளிருக்கின்ற பகுதிகளில் கூட்டுறவுச் சாகுபடிக்கும் எதிர்காலத்தில் வழி வகுக்கும். ஆகவே, இது ஒரு முக்கியமான முயற்சியாகும்.

## மின்சக்தி

வரும் ஆண்டுத் திட்டத்தில் மின்சாரத்திற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இது 95 கோடி ரூபாயாக இருக்க, 1978-79 ஆம் ஆண்டில் இத் தொகை 114 கோடி ரூபாயாக உயரும். ஒவ்வொன்றும் 210 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள், 141 கோடி ரூபாய் மொத்தச் செலவில் தூத்துக்குடியில் அமைக்கப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களை விரைவுபடுத்துவதுடன் அதே உற்பத்தித் திறனுள்ள மற்றெரு பிரிவை 71 கோடி ரூபாய் முதலீட்டில் அமைக்க மத்திய அரசின் ஒப்புதல் பெற்று, நடப்பாண்டில் பணி தொடங்கியுள்ளோம். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்று பிரிவுகளுக்கும் 56.04 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு மின் திட்டத்தில் அடங்கியுள்ளது. முதல் பிரிவு அடுத்த ஆண்டில் செயல்படத் தொடங்கும். இரண்டாவது பிரிவு 1979-80ஆம் ஆண்டிலும், மூன்றுவது பிரிவு 1980-81ஆம் ஆண்டிலும் நிறைவேற்றப்படும். தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் பயனை, தென் மாவட்டங்களில், குறிப்பாகப் பின்னடைந்துள்ள பகுதிகளில், சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்கும், நில நீரைப் பயன்படுத்துவதற்கும், கிராமப்புற மின் வசதிக்கும் பெருமளவில் ஊக்கம் ஏற்படும். மின்சக்தியைக் கொண்டு செல்வதற்கும் வழங்குவதற்கும் 32.5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த முதலீட்டினுல் மின் வழங்கும் தன்மையும் திறனும் மேம்படும்; மின் செல் வழியில் ஏற்படும் இழப்பும் குறையும். மின் சக்தித் துறையின் மற்றெரு முக்கியமான நிதி ஒதுக்கீடு, கிராம மின் வசதித் திட்டத்திற்காகச் செய்துள்ள 11.5 கோடி ரூபாய் ஆகும். இத்துடன் வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்று, அடுத்த ஆண்டில் ஏறக்குறைய 35,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க இயலும்.

அறுநூற்று முப்பது மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்கும் பொருட்டு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளவிருப்பது, தமிழ்நாடு மின் உற்பத்தி வளர்ச்சியில் உற்சாகமளிக்கும் நல்ல திருப்பமாகும். வெகு காலமாக எதிர்நோக்கிய இத் திட்டத்தின் பயனை மிக விரைவில் தமிழ்நாடு




அடையும்படி, இதனைத் துரிதமாக நிறைவேற்று மாறு நாம் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளோம். மின்சக்தித் திட்டங்களை ஆய்வு செய்து, அனுமதித்து, நிறைவேற்றி முடிப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படுவதாலும், தமிழ்நாட்டில் புனல், அனல் மின் உற்பத்திக்கு எதிர்காலத்தில் வாய்ப்புகள் குறைந்த அளவிலேயே உள்ளன என்பதாலும், நம் மாநிலத்தில் இரண்டாவது அணு மின் நிலயம் அமைப்பதற்கான ஆய்வினைத் தாமதமின்றி மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இத்துடன், ஏற்கெனவே தாமதமடைந்துள்ள கல்பாக்கம் அணு மின் நிலையத்தை விரைந்து நிறைவேற்றுவதற்குத் திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மின்பற்றுக் குறை குறித்து நமது இக் கோரிக்கைகளையும் கவலைகளையும் மத்திய அரசு கருத்தில்கொண்டு, தமிழகத்திலும், பொதுவாகத் தென் மாநிலங்களிலும், உழவுக்கும் தொழிலுக்கும் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மின் தேவைக்கேற்ப, மின் உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யும் என நம்புகிறோம்.


## பெருந்தொழில்களும் நடுத்தரத் தொழில்களும்

சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவை கிராமப் பகுதிகளில் பரவலாக ஏற்பட ஊக்கமளிப்பதே இந்த அரசின் திட்டவட்டமான கொள்கையாகும். அதே நேரத்தில், பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிற, நம் மாநிலத்தில் உள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்துகிற அல்லது மக்கள் பெருவாரியாகப் பயன்படுத்தும் பொருள்களைத் தயாரிக்கிற பெரிய தொழில்களை ஏற்படுத்துவதற்கும், ஏற்கெனவே செயல்பட்டு வருபவற்றைச் சரிவர நடத்துவதற்கும் நாம் எல்லா வகையிலும் ஊக்கமும் உதவியும் அளிப்போம். நம் மாநிலத்தில் பெருந்தொழில்களையும் ஏனைய தொழில்களையும் தொடங்கி வளர்ச்சியுறச் செய்வதில் ஈடுபட்டுள்ள தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT) தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு சர்க்கரைக் கழகம் (TASCO) ஆகியவற்றிற்கு ஆண்டுத் திட்டத்தில் 8.57 கோடிரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அரியலூரில், அரசுத் துறை சிமெண்ட் தொழிற்சாலையைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் அமைத்து வருகிறது. இந்த ஆலை 1978 செப்டம்பரில் செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கிறோம். பெரம்பலூர் சர்க்கரை ஆலை செயல்படத் தொடங்கிவிட்டது. அடுத்தபடியாகத் திருக்கோயிலூருக்கு அருகே கூட்டுறவுத் துறையில் ஒரு சர்க்கரை ஆலை அமைக்கப்படும். அடுத்த ஆண்டில், மற்றும் ஒரு சர்க்கரை ஆலை தொடங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கறுப்புக் கல் (Black Granite) தொழிலை விரிவுபடுத்தும் பொறுப்பை அரசுத் துறையில் ஏற்றுக் கொள்வதென்ற நமது கொள்கையை ஏற்கெனவே அறிவித்துள்ளோம். இப் பணியை மேற்கொள்ள நிறுவப்பட்டுள்ள மாநிலக் கனிவள மேம்பாட்டுக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவியாக, வரவு-செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு, நாளொன்றுக்கு 250 டன் செய்தித்தாள் காகிதம் (News Print) தயாரிப்பதற்கு, ஏறத்தாழ 100 கோடி ரூபாய் மூலதனத்தில் காகித ஆலை ஒன்றைத் தமிழ்நாட்டில் அமைப்பதற்கான செயற்குறிப்பு தீவிர பரிசீலனையில் உள்ளது.





நமது நாட்டில் பெருந்தொழில் துறையில், நூற்பு-நெசவு ஆலைத் தொழில் மிகப் பழமையானதாகும். அதே நேரத்தில், இது ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் துறையாகும். இந்தத் தொழிலை நவீனப்படுத்திச் சீரமைக்கும் பணியில் போதிய கவனம் செலுத்தப்படாமையால், நூற்பு-நெசவாலைகள் பல சரிவரச் செயல்படாமல் நலிந்து விட்டன. இவ்வாறு நலிந்த நூற்பு-நெசவாலைகளின் நிர்வாகத்தைத் தொழிலாளர்களுடைய ஒத்துழைப்புடன் அரசு எடுத்து நடத்த, தேசிய அளவில் கொள்கையொன்றை வகுத்து நிறைவேற்ற மத்திய அரசு முன்வர வேண்டும். நம்மைப் பொறுத்தவரை, செயல்படும் திறன் உள்ள நலிந்த ஆலைகள் மீண்டும் செயல்பட, தக்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இந்த முயற்சிகளின் காரணமாக, கோவையில் பிரகாஷ், லோட்டஸ் ஆலைகளும், இராமநாதபுரத்தில் சோமசுந்தரா ஆலையும் திறக்கப்பட்டு 1,500 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மூடிக் கிடந்த இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம், தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடனும் வழிவகைக் கடனுக்கான உத்தரவாதத்துடனும் அண்மையில், மீண்டும் செயல்பட ஆரம்பித்திருக்கிறது. இதன் விளைவாக 276 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிட்டியுள்ளதோடு, விரைவில் மேலும் 250 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும்.



## நகர்ப்புற வளர்ச்சி

உலக வங்கி உதவியுடன் செயல்பட்டுவரும் சென்னை நகர்ப்புறப் பலமுனை வளர்ச்சித் திட்டம் முறையாக நிறைவேறி வருகிறது. **இப்பணிக்காக,** வரவு-செலவுத் திட்டத்தில் *12.43* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் ஏழை எளியவர்களின் வாழ்க்கை நிலையை மேம்படுத்துவதற்காக, குடிசை மாற்றுத் திட்டத்திற்கு *4.35* கோடி ரூபாயும் குடிசை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 2 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறும் 6 கோடி ரூபாயுடன், நகர்ப்பகுதிகளில் குடிநீர் வழங்கவும் கழிவுநீர் அகற்றவும் வரவு-செலவுத் திட்டத்தில் *11.7* கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது; கோயம்புத்தூருக்குப் பயனளிக்கும் சிறுவாணி குடிநீர் திட்டத்திற்கான *4.88* கோடி ரூபாய் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும். *1978-79*-ஆம் ஆண்டில் *33* குடிநீர் வழங்கு-கழிவுநீர் அகற்று திட்டங்கள் முடிக்கப்படும்; இத்தகைய திட்டங்கள் *41* புதிதாக மேற்கொள்ளப்படும். மதுரையிலும் கோயம்புத்தூரிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும். பெரிய நகரங்களின் முக்கியமான தேவைகள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு, ஓரளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுகையில், சிறு நகரங்களின் பிரச்சினைகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன என்பது நமது அனுபவமாக இருந்து வருகின்றது. நம் மாநிலத்தில் உள்ள சிறு நகரங்களிலும் ஏனைய முக்கிய குடியிருப்புப் பகுதிகளிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக வேலைத் திட்டங்களை வகுத்து நிறைவேற்ற முற்படுவோம்.




## கிராமப்புற வளர்ச்சி

நெடுங்காலமாக, பொருளாதார நிபுணர்களும் அரசியல்வாதிகளும், தொழிலாளி-முதலாளி, ஏழை-பணக்காரன், பாமரன்-படித்தவன், பின்தங்கிய-முன்னேறிய பகுதிகள் இவை போன்ற வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த வேற்றுமைகள் நிலவுவது உண்மை; இவை அகற்றப்பட வேண்டும் என்பதை யாரும் மறுக்க முடியாது. எனினும், நமது நாட்டின் நிலைமையில் நகர்ப்புறங்களுக்கும் கிராமப்புறங்களுக்குமிடையே உள்ள ஏற்றத்தாழ்வுதான் மிகவும் முக்கியமானதாகும். இந்த அடிப்படைப் பிரச்சினையைத்தான் காந்தியடிகளும், நம் மாநிலத்தில் அமரர் அண்ணாவும் கோடிட்டுக் காட்டியுள்ளனர். நமது ஆண்டுத் திட்டங்களையே எடுத்துக் கொண்டால், நகரப் பகுதிகளுக்கு நபர்வாரி முறையில் செலவிடப்படும் தொகையில் பாதிக்கும் குறைவாகவே கிராமப் பகுதிகளுக்குச் செலவிடப்படுகிறது. கிராமங்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டுள்ளமையால், பள்ளிகள், மருத்துவ நிலையங்கள், குடிநீர், மின்சாரம், சாலைகள், வங்கி வசதிகள், அவசிய உணவுப் பொருள் அங்காடிகள் இவை போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகளைப் பெறுவதில் கிராம மக்கள் பெரிதும் பின் தங்கியுள்ளனர். சிறப்புப் பயிற்சி பெற்ற மருத்துவர்களும், பொறியியல் நிபுணர்களும், உயர் கல்வி பெற்ற ஆசிரியர்களும் நகரங்களையே நாடுகின்றனர்; கிராமங்களை அணுகத் தயங்குகின்றனர். நகர்ப்புறங்களில் அத்தியாவசியமான வசதிகளுக்கு நாம் ஏற்கவேண்டிய செலவுகளைக் குறைக்க வேண்டும் என்பதல்ல என் கருத்து. பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புகளும், மக்களின் வாழ்க்கைத்தரமும் கிராமப்புறங்களில் தக்க அளவுக்கு மேம்படுத்தப்பட்டிருந்தால், கிராம மக்கள் நகர்ப்புறங்களில் குடியேறத் தேவை இருந்திருக்காது; பெருமளவில் நகரங்களில், அரசு செலவு செய்ய வேண்டிய அவசியமும் உருவாகி இருக்காது என்பதைத்தான் உணர்த்த விரும்புகிறேன்.

**கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் உள்ள இந்த ஏற்றத் தாழ்வைப் போக்குவது இந்த அரசின் கொள்கையாகும். பாசன வசதிகளைப் பரவலாக்குவதன் மூலமாகவும், வேளாண்மை வளர்ச்சித் திட**டங்கள், கால்நடை வளர்ப்பு, பால் பெருக்கம், மீனள வளர்ச்சி ஆகியவற்றின் மூலமாகவும் கிராம மக்களின் வருவாய் உயர்த்தப்பட வேண்டும். வேளாண்மைப்பணி இல்லாத காலங்களில் கிராமங்களில் வேலை கிடைப்பது இல்லை. நடுத்தர-சிறு பாசன ஆதாரங்களையும், சாலைகளையும் ஏற்படுத்திப் பராமரித்தல், மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு போன்ற பணிகளைப் பரவலாகவும் பெருமளவிலும் எடுத்து நடத்தி, விவசாய வேலை இல்லாத காலங்களில், குறிப்பாக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும். இந்தப் பின்னணியில், ஏற்கெனவே அறிவித்துள்ளபடி நிலப்படைத் திட்டம் விரைவில் கொண்டு வரப்படும். சிறு தொழில், கிராமத் தொழில், குடிசைத் தொழில் வாயிலாக, கிராமங்களில் தொழில் புரட்சியை ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் நியாய விலைக் கடைகளை அமைப்பது, சிறு விவசாயிகள், மீனவர்கள், கைத்தறி நெசவாளர்கள் போன்றவர்களுக்குக் கடன் வசதியையும் விற்பனை வசதியையும் அளிப்பது, கிராமக் குடிநீர் திட்டம், கிராமப் பகுதிகளில் சாலைகள், கிராமப் பள்ளிகளில்தொழில் சார்ந்த கல்வி, முதியோர் எழுத்தறிவு, கிராமங்களுக்கு மருத்துவ-சுகாதார வசதிகள், கிராமப்புற வீட்டு வசதி ஆகிய நமது பல்வேறு திட்டப் பணிகள், கிராம மக்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள முக்கிய முயற்சிகளாகும்.

இவை பெருந்திட்டங்கள். கிராமங்கள் அனைத்தும் பயனடையப் பல ஆண்டுகளாகும். இதனைக் கருதிப் பார்க்கும்போது, கிராமங்களில் பெருமளவுக்குப் பணிகளை மேற்கொள்ள நிதி நிலைமை இடந்தரவில்லையே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் நினைக்கலாம். அரசைப் பொறுத்தவரை கிராமங்களின் வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்து ஆண்டுக்காண்டு கிராமப்புறங்களுக்காக ஒதுக்கப்படும் தொகைகளைப் பெருக்கி, இந்தப் புரட்சிப் பணியில் பின்தங்காது முன்னேற்றம் காணத்திடமாகச் செயல்படுவோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நூறு காதப் பயணமும், முதலில் ஒரு சில அடிகள் வைத்துத்தானே தொடங்கப் பெற வேண்டும்.



## கிராமத் தன்னிறைவுத் திட்டம்



அரசு மேற்கொள்கிற திட்டங்களுடன், கிராம மக்களே, ஓரளவு அரசு உதவியுடன், ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்குப் பல திட்டங்களை முன்னின்று நடத்த வேண்டும். கிராம-குடிசைத் தொழில்கள், கிராமக் குளங்களிலும் ஏரிகளிலும் மீன் வளர்ப்பு, பண்ணைக்காடு வளர்ப்பு, வாய்க்கால்களில் குடிமராமத்து, பட்டு உற்பத்தி, தர விதைகள், கறிகாய், பழ உற்பத்தி, கோழி, பன்றி, செம்மறி ஆடு வளர்ப்பு போன்றவை இவ்வகையான திட்டங்களுக்கு உதாரணங்களாகும். நாட்டின் செல்வத்தையும், மக்களின் சக்தியையும் பயன்படுத்தி, கிராமங்கள் தன்னிறைவு அடைவதற்கும், வெளி விற்பனை மூலம் வருவாயைப் பெருக்கவும் இவ்வாறான திட்டங்கள் உறுதுணையாக இருக்கும்.

வரும் ஆண்டில், பின்தங்கிய பகுதிகளில், தெரிந்தெடுக்கப்பட்ட கிராமத் தொகுதிகளில், கிராமத் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி, அனுபவத்தின் அடிப்படையில் இதைப் படிப்படியாக விரிவுபடுத்த முடிவெடுத்துள்ளோம். வறுமையில் வாடும் கிராம மக்கள், சொந்தக் காலிலே நிற்கும் வகையில், தன்னிறைவு எய்தி, கிராமங்கள், கிராமங்கள் அல்ல; அவை சிறு நகரங்கள் என்று சொல்லுகிற அளவுக்கு மறுமலர்ச்சி அடைய வேண்டுமென்பதே இத்திட்டத்தின் குறிக்கோள்.



## கிராமத் தொழில்கள்



கிராமப் புறங்களில் சிறு தொழில்களும் கிராமக் குடிசைத் தொழில்களும் வளர முக்கியத்துவமும் முன்னுரிமையும் அளிக்கும் வகையில் மத்திய அரசு அண்மையில் அறிவித்துள்ள தொழிற் கொள்கையை வரவேற்கிறோம். இது, ஏற்கெனவே நாம் வகுத்துள்ள தொழிற் கொள்கையின் அடிப்படையை ஒட்டியுள்ளது. கிராமப் புறங்களில் மிகப் பரவலாகச் சிறு தொழில்களும் கிராம-குடிசைத் தொழில்களும் ஏற்பட, அவசியமான நிறுவன அமைப்புகள், நிதி உதவி, தொழில் நுட்ப ஆலோசனைகள், விற்பனை வசதிகள் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் இக் கொள்கையை விரைவில் நடைமுறைக்குக் கொண்டுவரச் செயல்படுவோம். வரும் ஆண்டில் சிறு தொழில்களை ஊக்குவிப்பதற்காக ஏழு மாவட்டங்களில் மாவட்டத் தொழில் நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். மாவட்டத் தொழில் நிலையங்கள், சிறு தொழில் தொடங்க முனைபவர்களுக்கு, எந்தெந்தச் சிறு தொழில்களைத் தொடங்க வாய்ப்பு உண்டென்று கூறுவதோடு, தேவையான நிதி வசதிகளைப் பெற்றுத் தரும் பணியிலும் ஈடுபடும். இந்நிலையங்களின் மூலம் சிறு தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளைப் பற்றிய அறிவுரையும் வழங்கப்படும். சிறு தொழில் தொடங்குபவர்கள் அதைப் பற்றிய எல்லா வழிகளையும் விவரங்களையும் அறிவதற்கும் எல்லா உதவிகளையும் பெறுவதற்கும் ஏற்ற இடமாக மாவட்டத் தொழில் நிலையங்கள் விளங்கும். கிராமப்புறங்களிலும் குறிப்பாகப் பின்தங்கிய பகுதிகளிலும் சிறு தொழில்களை ஊக்குவிக்கச் சலுகைகள் அளிப்பது பற்றி அரசு விரைவில் முடிவெடுக்கும்.

சிறு தொழில் துறையில் உற்பத்தியாகும் பொருள்களின் தரத்தினைப் பெரிய தொழிற் கூடங்கள் தயாரிக்கிற பொருள்களுடன் போட்டியிடக் கூடிய வகையில் மேம்படுத்தும் பொருட்டு, தர நிர்ணய வசதிகளையும் பிற வசதிகளையும் ஏற்படுத்துவது அவசியம். இந்த நோக்குடன், திருச்சிராப்பள்ளியில் வட்டார அறிவியல்-தொழில் சோதனைக்கூடம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு நிதி ஒதுக்கியுள்ளோம். கோயம்புத்தூரிலுள்ள வட்டாரக்கூடத்தில் பம்புகள் சோதனைக்கு வசதிகள் செய்யப்படும். பட்டுப்புழு வளர்ப்பு, தமிழ்நாட்டில் ஏராளமான மக்களுக்கு வேலைவாய்ப்பும் வருமானமும் அளிக்கும் முக்கியமானதொரு தொழிலாகும். பட்டு இழை எடுப்பதற்காக, 20 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த உத்தேசித்துள்ளோம். கடந்த சில ஆண்டுகளில், தீப்பெட்டி உற்பத்தியிலும் விற்பனையிலும், சிறு தொழில்கள் பெரிய தொழிற்கூடங்களுக்கு நிகராக முன்னேற்றமடைந்துள்ளன. இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் பின்தங்கிய பகுதிகளில் தீப்பெட்டித் தொழிலாளர்களுக்காக 50 தொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். தேயிலைத் தோட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறு விவசாயிகளுக்குப் பயனளிக்கும் வகையில் நீலகிரி மாவட்டத்திலுள்ள 6 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளின் பங்கு மூலதனத்தைப் பெருக்க நிதி ஒதுக்கியுள்ளோம். கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக விசைச் செக்குகள் நிறுவி, எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படுகிறது. இத் திட்டத்தைப் பெருமளவில் விரிவுபடுத்தி, மேலும் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முற்படுவோம்.


அரசும் அரசு நிறுவனங்களும் பயன்படுத்தும் பல்வேறு பொருள்களை, சிறு தொழில்கள், கிராம குடிசைத் தொழில்களின் உற்பத்தியிலிருந்து பெருமளவிற்குப் பெற முடியும். இந்த அணுகு முறையைப் பின்பற்றி, சிறு தொழில்களுக்கும் கிராம-குடிசைத் தொழில்களுக்கும் முழு வாய்ப்பளித்து, இந்தத் தொழில்களில் ஈடுபடும் மக்களுக்கு விற்பனை வசதிகளை உறுதிப்படுத்தவும் மேம்படுத்தவும் திட்டவட்டமான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.




## கைத்தறி-கதர் வளர்ச்சி



கைத்தறி-கதர் வளர்ச்சிக்கு இந்த அரசு தலையாய முக்கியத்துவம் அளிக்கிறது. கைத்தறி வளர்ச்சிக்கும் மாநிலக் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் கீழுள்ள கதர்-கிராமத் தொழில்களுக்கும் ஆண்டுத் திட்டத்தில் 4 கோடி ரூபாய், அளவில் கணிசமாக நிதி ஒதுக்கியுள்ளோம். இது தவிர, மத்திய அரசுத் துறைத் திட்டங்களின் கீழும் மத்திய அரசு உதவி பெறும் திட்டங்களின் கீழும், கைத்தறி வளர்ச்சிக்கு 1.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு உள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் அடிப்படைச் சங்கங்களும் மேற்கொண்ட தீவிர முயற்சிகளின் விளைவாக, கடந்த ஆண்டு 37 கோடி ரூபாய் அளவுக்குக் கைத்தறித் துணி விற்பனைக்கெதிராக, இந்த ஆண்டு கைத்தறித் துணி விற்பனை 44 கோடி ரூபாய் அளவிற்கு உயரும் என்பது மகிழ்ச்சிக்குரியது. இதனை வரும் ஆண்டில் 48 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்த முற்படுவோம்.



## சுகாதாரம்



குறைவற்ற செல்வமான நோயற்ற வாழ்வுக்கு வேண்டிய சுகாதார, மருத்துவ வசதிகளைப் போதிய அளவிலும் விரிவான வகையிலும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென எதிர்பார்ப்பது ஒவ்வொரு குடிமகனின் பிறப்புரிமையாகும். நவீன மருத்துவ வசதிகளைப் பெறுவதில், மாநிலத்தில் மிகப் பின்தங்கிய கிராமப் பகுதிகளில் வசிக்கிற எந்தவொரு பரம ஏழையும், நகரவாசிகளுக்கும் வசதி பெற்றோருக்கும் இருக்கும் அதே வாய்ப்பினை அடைய வேண்டும். இதுதான் நமது இலட்சியம்.

வரும் ஆண்டுகளில், கிராமங்களில் மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்கு நாம் மிகுந்த முக்கியத்துவம் அளித்து இதற்கான திட்டங்களை விரைந்து செயல்படுத்த முனைந்துள்ளோம். ஆரம்பக் கட்டமாக, நடப்பு ஆண்டில் 24 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் இரண்டு ஏற்படுத்தியுள்ளோம். ஒவ்வொரு மருத்துவப் பிரிவும் வாரந்தோறும் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று மருத்துவ வசதி அளிக்கிறது; அவசியமான மருந்துகளை மக்களுக்கு வழங்குகிறது; தீவிரக் கவனிப்புத் தேவைப்படும் நோயாளிகளை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கோ, வட்ட மருத்துவ மனைக்கோ, மாவட்ட மருத்துவ மனைக்கோ உரிய காலத்தில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கிறது. இந்தத் திட்டம் நல்ல முறையில் நிறைவேறி வருவதால், வரும் ஆண்டில் மேலும் 100 ஊராட்சி ஒன்றியங்களுக்கு இதை விரிவுபடுத்தக் கருதியுள்ளோம். அடுத்த மூன்று ஆண்டுகளில் மாநிலம் முழுவதிலும், அதாவது, 383 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இத்திட்டத்தை விரிவுபடுத்துவது நமது நோக்கமாகும். இத்துடன் கூட, 1,000 குடும்பங்களுக்கு அல்லது 5,000 மக்கள் தொகையினருக்கு மருத்துவ சுகாதார வசதிகளை அளிக்கும் வகையில், சிறு சுகாதார நிலையங்களை (Mini-Health Centre) நடத்தத் தொண்டு நிறுவனங்களுக்கு நாம் உதவியளித்து வருகிறோம். இத்திட்டத்தின் கீழ், நடப்பாண்டில் 54 சிறு சுகாதார நிலையங்களை ஏற்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1978-79ஆம் ஆண்டில், மேலும் 50 சிறு சுகாதார நிலையங்களை ஏற்படுத்தக் கருதியுள்ளோம்.





மாவட்ட, வட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், வட்டத்திலுள்ள பிற மருத்துவ மனைகளிலும், அரசு மருந்தகங்களிலும், பல்வேறு சிறப்புத் துறைகளை ஏற்படுத்துவதற்காகப் பல புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும். பல்நோய் மருத்துவம், காது-மூக்கு-தொண்டை நோய் மருத்துவம், எலும்பு சிகிச்சை, கண் சிகிச்சை, இரத்த சேமிப்பு முதலிய பணிகளை இந்த இடங்களில் மேற்கொள்ள, கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்படும். ஆறு அரசு மருத்துவ நிலையங்களில், மகப்பேறு, அறுவைச் சிகிச்சைக்கூடங்கள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு மாவட்டங்களின் பின்தங்கிய பகுதிகளில் 7 அரசு மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப்படும். இப்பொழுது கிராமங்களிலுள்ள மருந்தகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் உள்ள குறைகளைப் போக்க, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடும் திட்டம் மேலும் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

கிராமப்புறங்களில் மருத்துவ வசதிகளை விரிவுபடுத்தும் பணியுடன் இணைத்து மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பதே நமது நோக்கம். வரும் ஆண்டில் 100 ஆரம்ப சுகாதார நிலையங்களில் மூன்றாவது மருத்துவ அதிகாரிகளை நியமிக்க முடிவெடுத்துள்ளோம். பல்வேறு புதிய திட்டங்களின் அடிப்படையிலும் இயல்பான புது நியமனங்களின் மூலமாகவும், வரும் ஆண்டில் ஏறக்குறைய 400 மருத்துவப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

## கல்வி

வரவு-செலவுத் திட்டத்தில் கல்வித்துறையே, 180.9 கோடி ரூபாய் ஒதுக்கீடு பெற்று, எல்லா வளர்ச்சிப் பணிகளிலும் முதலிடம் பெற்றுள்ளது. 10+2+3 கல்வி முறையை நிறைவேற்றுவதற்காக 1978-79ஆம் ஆண்டில் 4 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இயன்ற வரை, ஊராட்சி ஒன்றியப் பகுதி ஒவ்வொன்றிலும் மேல் உயர்நிலைப் பள்ளி ஒன்றேனும் இருக்கும் வகையில், 400 பள்ளிகளில் மேல் உயர்நிலைக் கட்டத்தைக் கொண்டுவர உத்தேசித்துள்ளோம். பள்ளிக் கல்வியின் பல நிலைகளிலும் கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்காக 1,000 இடைநிலை ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படுவர். 200 தமிழ் ஆசிரியர்களையும் 200 உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

பொதுவாக, நம் மாநிலம் முழுவதிலும் பள்ளிக் கட்டடங்கள், சீர்செய்து மேம்படுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றன. இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 1.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கணிசமான இந்த ஒதுக்கீட்டினால், பள்ளிக் கட்டடங்களின் நிலைமை நிச்சயமாக மேம்படும். புயலாலும், வெள்ளத்தாலும் சேதமடைந்த பள்ளி, கல்லூரிக் கட்டடங்களைச் செப்பனிட்டுச் சீரமைக்க நடப்பாண்டிலேயே 1.1 கோடி ரூபாய் செலவிடுகிறோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.





கிராமப்புறங்களில் மாணவர்கள் பள்ளிப் படிப்பை இடையிலேயே விட்டுவிடுவதையும் ஒரே வகுப்பில் தேக்கமடைவதையும் தடுத்து, இந்த அடிப்படைப் பிரச்சினைகளுக்கு நல்லதொரு தீர்வு கண்டு, கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டும். இந்த நோக்கத்துடன், முறைசாராக் கல்வித் திட்டம் (Non-Formal Education) தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் 1,500 இடங்களில் முறைசாராக் கல்வி கற்பிக்கப்படுகிறது. அடுத்த ஆண்டில் வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் இரண்டு புதிய இடங்கள் என, மொத்தத்தில் 748 இடங்களில் இத்தகைய கல்வி முறை விரிவு செய்யப்படும்.

முதியோர் எழுத்தறிவுத் திட்டம் நாடு தழுவிய இயக்கமாக வளர வேண்டுமென்பது அரசின் கொள்கை. இதனையொட்டி, இந்தத் துறையில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு உதவ, புதிய திட்டமொன்று செயற்படுத்தப்படும். கல்வியின் பயன், கிராம முன்னேற்றத்திற்குத் தூண்டுகோலாக அமைய, எழுத்தறிவு பெறுவோருக்கு, வேளாண்மை, கிராமக் குடிசைத் தொழில்கள், கூட்டுறவு இயக்கம், சுகாதாரம், சத்துணவு, குடும்ப நலத் திட்டம், கால்நடைப் பராமரிப்பு இவை போன்ற பொருள்களைப் பற்றி எளிய நடையில் புத்தகங்கள் தயாரித்து வழங்கப்படும்.

பள்ளிகளில் புது ஆய்வுக்கூட வசதிகள் அளிப்பதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். தொழில் நுட்பக் கல்விக்கான நிதி ஒதுக்கீடு 95 இலட்சம் ரூபாயாகும். அரசு அரும்பொருட்காட்சியகம், தொல்பொருள் துறை தொடர்பான பல புதிய திட்டங்களுக்காக 4 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னை மாநிலக் கல்லூரியைப் பட்ட மேற்படிப்புக்கான நிலையமாகத் தரம் உயர்த்துவது, உயர் கல்வித் துறையில் முக்கியமான புதுத் திட்டமாகும். இந்த அரசு, இளைஞர்கள் உடற்பயிற்சியிலும், விளையாட்டுகளிலும், ஈடுபடுவதை ஊக்குவிக்கும் திட்டங்களை விரிவுபடுத்தும். முதுமைக் காலத்தில் வறுமையில் வாடும் தலைசிறந்த விளையாட்டுக்காரர்களுக்கு நிதி உதவி அளிக்கும் புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்படும்.

## தமிழ்ப் பண்பாடு

கம்பர், வள்ளலார் போன்ற தமிழினச் சான்றோர்களுக்கு நினைவுச் சின்னமாய், சென்னையில் தமிழ்ப் பண்பாட்டு மைய நிலையம் ஒன்றை ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம் என்பதை மிக மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையத்தில், நூலக, படிப்பக வசதிகளும், பட அரங்கமும், காட்சிப் பொருள்களுக்கான இடங்களும் அமைக்கப்படும். தமிழுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மதுரை மாநகரத்தில் இசைக் கல்லூரி ஒன்றை வரும் ஆண்டில் நிறுவ முடிவெடுத்துள்ளோம். இது சென்னையிலுள்ள மத்திய இசைக் கல்லூரியின் இணைப்பாக இயங்கும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்திற்காக, உமறுப் புலவர் பெயரில் மதுரைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி ஏற்படுத்தத் தமிழக அரசு இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கும். முன்னாளில் தமிழ்நாட்டில், நாடகக் கலைக்குத் தனிப் பெருமை இருந்தது. இந்தக் கலையை ஊக்குவிக்க, இளம் மாணவர்களுக்கு நாடகக் கலையில் தனிப் பயிற்சி அளிக்கவும் அதனுடன் பொதுக் கல்வி கற்பிக்கவும் வழிவகைகளைச் செய்து, சிறந்த மாணவ நாடகக் குழுக்களை உருவாக்கி, அவைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கப் புதியதொரு திட்டம் கொண்டு வரப்படும். கிராமியக் கலைகளைப் பாதுகாக்கவும் வளர்க்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.



## கிராமக் குடிநீர் வழங்கல்

ஒரு கிலோமீட்டர் தொலைவிற்குள் குடிநீர் வசதியே இராத குடியிருப்புகளுக்கும், குடிப்பதற்கேற்ற நீர்வசதியில்லாத குடியிருப்புகளுக்கும் நல்ல குடிநீர் போதிய அளவில் கிடைக்கச் செய்ய, காலவரம்புக்கு உட்பட்ட திட்டமொன்றை நடப்பாண்டில் தொடங்கினோம். இதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 6.65 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருந்தோம். மத்திய அரசும் கூடுதலாக 1.40 கோடி ரூபாய் கொடுத்தது. இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தம் 9 இலட்சம் மக்கள் தொகை கொண்ட 2,500 குடியிருப்புகளில் நடப்பாண்டு முடிவிற்குள் நல்ல குடிநீர் வசதி ஏற்படுத்தப்படும். 1978-79ஆம் ஆண்டில் இந்தப் பணிக்காக, 7.9 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். ஊராட்சி ஒன்றியங்களின் உபரி நிதியிலிருந்தும், மத்திய அரசிடமிருந்தும், மேலும் 4 கோடி முதல் 5 கோடி ரூபாய் வரை கிடைக்குமென எதிர்பார்க்கிறோம். இந்த அடிப்படையில் 15 இலட்சம் மக்கள் தொகை கொண்ட, எஞ்சிய 3,126 குடியிருப்புகளிலும் வரும் ஆண்டில் நல்ல குடிநீர் வசதி ஏற்படுத்த முடியுமென நம்புகிறோம். இந்தப் பணி நிறைவேறியதும் குடிநீர் வசதி இல்லாத கிராமமே தமிழகத்தில் இல்லை என்ற பெருமையையும் மகிழ்ச்சியையும் நாம் அடைய முடியும்.

நம் மாநிலத்தில் 15,000 கை பம்புகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கான திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம் நிறைவேற்றி வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 15 நடமாடும் பிரிவுகளும் 230 குழாய்ப் பணியாளர்களும் பணியாற்றி வருகின்றனர். மாதந்தோறும் சராசரி 3,000 புகார்கள் கவனிக்கப்பட்டு, குறைகள் நீக்கப்படுகின்றன.



## கிராமச் சாலைகள்

கிராமங்களுக்குச் சாலை வசதிகள் ஏற்படுத்தத் தமிழ்நாட்டில் இரண்டு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. முதல்வகைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகள் எல்லாக் காலங்களிலும் பயன்படுத்தத் தக்கவையாகும். இரண்டாவது வகைத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படும் சாலைகள் செம்மண் சரளைச் சாலைகளாதலால், அதிகப் போக்குவரத்து, மழை, வெள்ளம் காரணமாக எளிதில் சேதமடைந்து விடுகின்றன அல்லது கரைந்து போய்விடுகின்றன. இந்த இரண்டு திட்டங்களுக்குப் பதிலாக, புதிய திட்டம் ஒன்று கொண்டுவருவதென முடிவு செய்துள்ளோம். இத் திட்டத்தின்படி, சிறு கிராமங்கள் பேருந்து வழித்தடங்களுடனும் பிற முக்கிய சாலைகளுடனும் நீண்ட காலம்

பயன்படும் வகையில் கல் பாவிய (Metalled) சாலைகளால் இணைக்கப்படும். இத்துடன்கூட, தேவையான இடங்களில் சிறு பாலங்கள் அமைக்கப்படும். படிப்படியாக, முக்கியத்துவம் வாய்ந்த கிராமங்களை இணைக்கும் சாலைகளில் தார் போடப்படும். கிராமச் சாலைகளை இந்த முறையில் அமைக்கவும் சீர் செய்யவும் வரவு-செலவுத் திட்டத்தில் 5.7 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். கிராமங்கள் அனைத்தையும் இணைப்பதற்குத் தரமான சாலைகள் உருவாக்கும் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடுகள் வரும் ஆண்டுகளில் செய்யப்படும்.

## கிராம வீட்டு வசதி

நடப்பாண்டில் 50 கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்படுமென, சென்ற நிதிநிலை அறிக்கையில் நான் அறிவித்தேன். அவ்வாறே, அச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன என்பதை இந்த அவைக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இச் சங்கங்களில் உறுப்பினர்களைச் சேர்ப்பதில் நலிந்த பிரிவினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. 1978ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் தேதியுடன் முடிவடையும் நடப்புக் கூட்டுறவு ஆண்டு முடிவுக்குள், கிராமப்புற வீட்டு வசதிக்காக, 10,000 புதுக் கடன்கள் அனுமதிக்கத் திட்டமிட்டுள்ளோம். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தனது கடன் அளிக்கும் திட்டத்தில் கிராம வீட்டு வசதிக்காக, நடப்பாண்டில் 2 கோடி ரூபாயை ஒதுக்கி வைக்கச் செய்தோம். 1978-79ஆம் ஆண்டில் இத்தொகை 3 கோடி ரூபாயாக உயர்த்தப்படும். கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டு வசதி அளிப்பதில் கூட்டுறவுச் சங்கம் முனைப்பாகச் செயல்படும்.

## தாழ்த்தப்பட்டோர், பின்தங்கிய வகுப்பினர், பழங்குடியினர் நலன்

தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பின்தங்கிய வகுப்பினர் ஆகியவரின் நலனுக்காக, வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துறையில், பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதற்காகத் தொகை ஒதுக்கியிருப்பது தவிர, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு 24 விடுதிகள் ஏற்படுத்த வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரிசன வீட்டு வசதித் திட்டத்திற்கு 2.2 கோடி ரூபாயும், அவர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டத்திற்கு 1 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளன. குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடிகளைச் சேர்ந்த மாணவர்களும், பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களும், விடுதியில் சேர்வதற்கும் படிப்புக் கட்டணச் சலுகைக்கும் தகுதி பெற, அவர்களுடைய பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு தற்சமயம் ரூபாய் 2,000 ஆக உள்ளது; இது 2,500 ரூபாயாக உயர்த்தப்படும்.

பழங்குடி மக்களின் நலனுக்கும் மேம்பாட்டிற்கும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் கணிசமான அளவு திட்டத்திற்கான ஒதுக்கீடு 1977-78-ல் 1.53 கோடி ரூபாயாக இருந்தது. 1978-79-ல் 2 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலைகளில் பழங்குடியினர் தங்கிப் பயிலும் பள்ளிகள் இரண்டு ஏற்படுத்தப்படும். கொத்தடிமை முறையை முற்றிலும் ஒழிப்பதற்கும், இந்தக் கொடுமையால் அல்லலுற்றோருக்கு மறுவாழ்வு அளிப்பதற்கும் முனைந்து செயல்படுவோம்.


தாழ்த்தப்பட்டோருக்கும், பழங்குடியினருக்கும் வீட்டு வசதியும் கல்விச் சலுகைகளும் அளித்துவிடுவதால் மட்டும், அவர்கள் நலனைக் கட்டிக்காத்ததாக ஆகிவிடாது. அவர்களுடைய பொருளாதார நிலை, குறிப்பாகக் கிராமங்களில் மேம்படுத்தப்பட்டால்தான், நிலையான முன்னேற்றம் ஏற்படுவதற்கு அடிப்படை அமையும். இந்த அணுகுமுறை கடந்த காலத்தில் பின்பற்றப்படவில்லை. அரிசன மக்களுக்கு வருமானத்திற்கு உத்தரவாதம் அளிக்கிற பொருளாதாரத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளைக் கணிசமாக உயர்த்துவது நமது கொள்கையாகும். உழவு மாடுகள், கறவை மாடுகள் வழங்குவது, பாசனக் கிணறுகள் தோண்டுவது, குடிசைத் தொழில்கள் தொடங்குவது, வியாபாரக் கடன்கள் அளிப்பது, கைத்திறப் பணியாளர்களுக்குக் கருவிகள் வழங்குவது முதலான பல்வேறு பொருளாதாரத் திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்காக, இத் தொகையை அடிப்படை மூலதனமாகக் கொண்டு, மேற்கொண்டும் தேவைப்படுகிற நிதி வசதி, வங்கிகளிடமிருந்து 1.5 கோடி ரூபாய் முதல் 2 கோடி ரூபாய் அளவுக்கு வரும் ஆண்டில் பெறப்படும்.

## மகளிர், சிறார் நலன்

மகளிர் மேம்பாட்டிற்கு, குறிப்பாக, ஆதரவு அற்ற விதவைகளுக்கும் பிற மகளிருக்கும் உதவி செய்வதற்கு, இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. கடந்த நிதி நிலை அறிக்கையில் ஆதரவற்ற விதவைகளுக்காகச் சில புதிய திட்டங்களைக் கொண்டு வந்தோம். இவை தொடர்ந்து செயற்படுத்தப்படும். தற்போது, 45 வயதிற்கு மேற்பட்டுள்ள, ஆதரவற்ற விதவைகளுக்கு மட்டுமே உதவித்தொகை கொடுக்கப்படுகிறது. இந்த வரம்பு 40 வயதாகக் குறைக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 5,000 பேருக்கு உதவித்தொகை வழங்கப்படும். சேலத்தில் பணி இல்லம் ஒன்று தொடங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூரிலும், கடலூரிலும் உள்ள பணி இல்லங்களில் பள்ளி இறுதித் தேர்வுக்கு இரண்டாண்டுப் படிப்பு ஏற்படுத்தப்படும். கன்னியாகுமரியிலும் மதுரையிலும் தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும். சமூக நலத் துறையின் கீழ், மகளிருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும், மெழுகுவத்தி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும் தொடங்கப்படும். மாவட்டங்களில் மகளிர்-சிறார் நல நடவடிக்கைகளை மேற்கொள்கிற தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்வதற்காக, 27 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கதர்-கிராமத் தொழில் வாரியம் நிறைவேற்றும் பல திட்டங்களில் ஆதரவற்ற மகளிருக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்படும்.


குழந்தைகளுக்கான சத்துணவு, சுகாதாரக் கவனிப்பு, பாலர் கல்வி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைக் காப்பகங்கள் நம் மாநிலத்தில் ஏறக்குறைய 3,000 இருக்கின்றன. அடுத்த ஆண்டில், மேலும் 200 குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த நிதி ஒதுக்கியுள்ளோம்.





## ஊனமுற்றோர் நலன்

உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங்களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் 83 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. 300 பள்ளிச் சிறார்களுக்குக் காது கேட்க உதவும் கருவிகள் வழங்குதல், உதவி பெறத் தகுதியுடைய 500 உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கங்கள் இதில் அடங்கும். பேசுவதிலும் கேட்பதிலும் ஊனமுற்றோருக்குச் சிகிச்சையும் பயிற்சியும் அளிக்க நிலையம் ஒன்று சென்னையில் வரும் ஆண்டில் நிறுவப்படும். கண்பார்வை இல்லாதவர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க நெசவுக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்படும். இத் திட்டத்தின் மூலம் 100 பேர்கள் பயன்பெறுவர்.




## தொழிலாளர் நலன்

குறிப்பாக பீடி சுற்றும் தொழிலாளர்களும் கைத்தறித் தொழிலாளர்களும் சுகாதாரமற்ற சூழலில் வாழ்ந்து வருவதுடன், சுகாதாரக் கேடான நிலைமைகளில் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிலைமை அவர்களுக்குக் காசநோய் எளிதில் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது. சென்னை, வட ஆர்க்காடு, மதுரை, சேலம் ஆகிய 4 மாவட்டங்களில் பீடி சுற்றும் தொழிலிலும் கைத்தறித் தொழிலிலும் ஈடுபட்டுள்ளவர்களில், இந்த நோய் பீடித்துள்ள தொழிலாளர்களைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிக்கும் திட்டமொன்றை நடமாடும் மருத்துவப் பிரிவுகளின் உதவியுடன் மேற்கொள்ளக் கருதியுள்ளோம். தொழிலாளர்கள் தங்களுக்குள்ள உரிமைகளை உணர்ந்து கொள்வதற்காக,




தொழிலாளர் நலச் சட்டங்கள், விதிகளைத் தொகுத்து, தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் தமிழில் வெளியிடும். தொழிலாளர் நலன் குறித்த மற்றுமொரு புதிய திட்டம், ஆலைத் தொழிலாளர்களுக்காகக் குறைந்த வாடகைக்கு வீட்டு வசதி அளிப்பதாகும்; வீட்டு வசதி வாரியம் இதைச் செயற்படுத்தும். இத்திட்டத்திற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளோம். செங்கற்பட்டு, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் மிகுந்துள்ள பகுதிகளில் இத் திட்டம் முதற்கண் செயற்படுத்தப்படும்.



## சுற்றுலா

எழில் மிகுந்த தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் மனதைக் கவரும் இடங்கள் பற்பல உள்ளன. சுற்றுலாத் துறையில், வெளிநாட்டுப் பயணிகள் மட்டுமல்லாது, நம் மக்களும் நாட்டின் வரலாற்றுச் சிறப்பினை அறியவும் தங்கிக் களிப்புறவும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில், மாமல்லபுரம், மண்டபம், விராலிமலை, ஆவுடையார் கோயில், ஏலகிரி, உதகமண்டலம் ஆகிய இடங்களில் குறைந்த செலவில் சுற்றுலா வசதிகள் ஏற்படுத்த நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. தென்னார்க்காடு மாவட்டத்தில் அறிஞர் அண்ணாவின் மனதைக் கவர்ந்த பிச்சாவரம் பகுதி, சுற்றுலா மகிழ்விடமாக உருவாக்கப்படும். சுற்றுலாத் துறைக்கு, திட்டத்தில் 36 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.



## ஏனைய துறைகள்

ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி அளிக்கும் திட்டத்தை நடப்பாண்டில் தொடங்கி வைத்தோம். இதற்காக, எல்லா மாவட்டங்களிலும் மாவட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பதை அவையினருக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நல்ல முறையில் செயல்படத் தொடங்கியுள்ள இத் திட்டத்திற்கு 5.31 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

கோயில் நிர்வாகத்தில் பரவலாகச் சீர்கேடுகள் நிகழ்ந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். கோயில்களில் விக்கிரகங்களும் நகைகளும் பல இடங்களில் களவாடப்பட்டிருப்பது அல்லது போலிகள் வைக்கப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது. இந்த முறைகேடுகள் முழுவதுமாகக் கண்டுபிடிக்கப்படுவதற்கும் மீண்டும் நிகழாவண்ணம் தடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. சமயக் கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்தும் பிற உடைமைகளிலிருந்தும் அவற்றிற்குக் கிடைக்கும் வருமானத்தைப் பாதுகாக்க வேண்டும்; சமய-அறக் கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பிணுமியாக அனுபவித்துக் கொண்டிருப்பவர்களிடமிருந்து நிலத்தை மீட்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவை ஏற்ற முறையில் செயல்படவும் அவற்றின் பணியாளர்கள் புறக்கணிக்கப்படாமல் இருக்கவும் ஏதுவாகும். கோயில்களில் விக்கிரகங்களைப் பாதுகாப்பதற்காகவும், ஏனைய பணிகளை மேற்கொள்வதற்காகவும் 17 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வக்ஃபு நிறுவனத்திற்கும் 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இந்து சமய-அறக்கட்டளைகள், வக்ஃபு நிறுவனம் ஆகியவற்றின் வருமானம் ஈட்டும் சொத்துக்களை மேம்படுத்துவதற்கென 6 இலட்சம் ரூபாய் கடனுகை ஒதுக்கப்பட்டுள்ளது.

வருவாய்த்துறை நிர்வாகத்தைச் சீரமைத்து மேம்படுத்துவதற்காக, நீலகிரி மாவட்டத்தில் கோத்தகிரியைத் தலைமையிடமாகக் கொண்ட புதிய வட்டம் ஒன்றை ஏற்படுத்துவதென முடிவு செய்துள்ளோம். நாகர்கோவிலையும் தக்கலையையும் தலைமையிடங்களாகக் கொண்டு, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரு வருவாய்க் கோட்டங்களை ஏற்படுத்த வகை செய்துள்ளோம். கருவூலங்களையும் கணக்கு முறைகளையும் படிப்படியாகச் சீரமைத்து நவீனப்படுத்தும் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்திருக்கிறோம். முதல் கட்டத்தில், மதுரை மாவட்டக் கருவூலம் இரண்டாகப் பிரிக்கப்படும்; சென்னை மாநகரில் மூன்றாவது சம்பள-கணக்கு அலுவலகம் தொடங்கப்படும். பத்திரப் பதிவுத் துறையை வலுப்படுத்துவதற்குப் பல ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. 1978-79ஆம் ஆண்டில் மேலும் ஒரு மாவட்டப் பத்திரப் பதிவு அலுவலகம் தொடங்கப்படும்.

காவலர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். 120 தலைமைக் காவலர் பதவிகள் அடுத்த உயர் நிலையான உதவி சப்-இன்ஸ்பெக்டர் பதவிகளாக உயர்த்தப்படும்; 100 இரண்டாம் நிலைக்காவலர் பதவிகள் முதல் நிலைக் காவலர் பதவிகளாக உயர்த்தப்படும். காவலர் வீட்டு வசதித் திட்டத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் செய்ய முயல்வோம் என்று கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் குறிப்பிட்டிருந்தேன். நடப்பாண்டில், இதற்காக 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க, 1978-79ஆம் ஆண்டில் 90 இலட்சம் ரூபாய் செலவு செய்வோம் என்பதை இந்த மன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய ராணுவத்திலும் ஏனைய பாதுகாப்புப் படைகளிலும் தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவிற்கு இளைஞர்கள் சேர்க்கப்பட வேண்டுமென நாம் பெரிதும் விரும்புகிறோம். இதன் பொருட்டுப் பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள, உடல் வலிவுள்ள இளைஞர்கள் இப் படைகளில் சேரத் தகுதியுள்ளவர்களாகும் பொருட்டு, அவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு புதிய திட்டம் மேற்கொள்ளப்படும். இதற்காக, ஒவ்வொரு பயிற்சி முகாமிலும் 100 இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில் வரும் ஆண்டில் 4 பயிற்சி முகாம்கள் முதற்கண் அமைக்கப்படும். பயிற்சி அளிப்பதற்கு ஓய்வு பெற்ற படையினர் பயன்படுத்திக் கொள்ளப்படுவர். அரிசன, பழங்குடி மாணவர்கள், அதிகாரிகள் நிலையில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக, சிறப்புப் பயிற்சி வசதிகள் அவர்களுக்கு அளிக்கப்படும்.

## அலுவலர் நலன்

மூன்றாவது ஊதியக் குழுவை 1977-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் நியமனம் செய்தோம். குழு கவனிக்க வேண்டிய அம்சங்களை விரிவான முறையில் வகுத்துள்ளோம். தனது அறிக்கையை விரைந்து அளிக்குமாறும் ஊதியக் குழுவை வேண்டியுள்ளோம். குழுவின் அறிக்கையின் மேல் எடுக்கப்படும் முடிவுகளினால் அலுவலர்களுக்குக் கிட்டும் பயனை 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்தே அவர்களுக்கு வழங்குவதென இப்போது முடிவு செய்துள்ளோம். ஊதியக் குழுவின் அறிக்கை அதன் நியமனத்திலிருந்து 8 மாதங்களுக்கும் குறைவான இந்தக் குறுகிய காலத்திலேயே செயல்படுத்த இருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி அன்று 200 ரூபாய்க்குக் குறைவாக மாதச் சம்பளம் பெற்ற அலுவலர் அனைவருக்கும் ஒரு முறை மொத்த நிவாரணமாக ( lump-sum non recoring relief ) 25 ரூபாயும், அத் தேதியன்று 200 ரூபாயும் அதற்கு மேற்பட்டும் மாதச் சம்பளம் பெற்ற அலுவலர் அனைவருக்கும் 15 ரூபாயும் அளிப்பதென முடிவு செய்துள்ளோம். வரும் ஏப்ரல் மாதம் முதல் தேதி அளிக்கப்படும் மார்ச் மாதச் சம்பளத்துடன் சேர்த்து இந்தத் தொகை வழங்கப்படும். ஏப்ரல் மாதத்திலிருந்து ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் கூடுதல் சம்பளம் கிடைக்கத் தொடங்கும். இந்தப் பயன் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் அனைவருக்கும் கிட்டும்.

அலுவலர்களது ஊதியங்களை உயர்த்துகின்ற அதே நேரத்தில், அவர்களது பணி நிலைமைகள் குறித்த விதிகளும் விதி முறைகளும் தேவையற்ற சிக்கல்கள் கொண்டுள்ளமையால், இவைகளை எளிதாக்கி ஒழுங்குபடுத்த வேண்டியதும் அவசியம். இதன் பொருட்டு, அரசு அலுவலர்களின் பல்வேறு பிரிவினருக்கும் பொருந்தும் பணிவிதிகளை எளிதாக்கவும், புதுமைப்படுத்தவும், ஒரு பணிக் குழு ( Services Commission ) நியமிப்பது என முடிவு செய்துள்ளோம்.

## நிதி நிலைமை

இனி, வரவினங்கள், செலவினங்கள் பற்றிக் கவனிக்கலாம். 1977-78ஆம் ஆண்டின் வருவாய்க் கணக்கில் 30.16 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாக 18.89 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. திருத்த மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 56.49 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை பெருமளவு அதிகரித்தமைக்கு முக்கிய காரணம் புயல்-வெள்ள நிவாரணச் செலவுகளாகும். வருவாய்க் கணக்கில் இச் செலவுகளுக்கான 36.62 கோடி ரூபாய் அடங்கும். இருப்பினும், மொத்தப் பற்றாக்குறையை, வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட ஓரளவே கூடுதலாக 19.71 கோடி ரூபாய்க்குள் கட்டுப்படுத்தியுள்ளோம்.

1978-79ஆம் ஆண்டின் வருவாய்க் கணக்கில் வரவுகள் 680.08 கோடி ரூபாயாகவும் செலவுகள் 726.76 கோடி ரூபாயாகவும், ஆகவே வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை 46.68 கோடி ரூபாயாகவும் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை இந்த அளவில் இருப்பதற்கு முக்கிய காரணம் ஊதிய உயர்வுகளுக்காக முதற்கண் மதிப்பீட்டின் அடிப்படையில் நிதி ஒதுக்கம் செய்திருப்பதேயாகும். இத்துடன் புயல்-வெள்ள நிவாரணப் பணிகளுக்கான எஞ்சிய செலவுத் தொகையான 10 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் அடங்கியுள்ளது. 1978-79ஆம் ஆண்டின் மூலதனச் செலவு 63.45 கோடி ரூபாயாக இருக்கும். எல்லாக் கணக்குகளையும் ஒருங்கு சேர்த்துப் பார்க்கும்போது 1978-79 ஆம் ஆண்டு இறுதியில் 34.05 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டுத் தொடக்கத்திலுள்ள பற்றாக்குறையான 19.71 கோடி ரூபாயும் இதில் அடங்கும்.

வரும் ஆண்டில், நமது நிதி நிலை இக்கட்டான நிலைமையில் இருப்பதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன. முதலாவதாக, மது விலக்கினால் ஏற்படுகிற இழப்பு ஆண்டுக்காண்டு அதிகமாகிக் கொண்டே போகிறது; 1978-79-ல் இது 140 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாவதாக, ஊதிய மாறுதல்களால் ஏற்படவிருக்கும் கணிசமான செலவை வரும் ஆண்டில் மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். மூன்றாவதாக, புயலாலும் மழையாலும் ஏற்பட்ட சேதங்களைச் செப்பனிடுவதற்குத் தேவையான எஞ்சிய நிதி ஒதுக்கீட்டை வரும் ஆண்டில் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். மது விலக்கினால் ஏற்பட்ட இழப்பாயினும், அலுவலர்களுக்குக் கூடுதல் ஊதியங்கள் அளிப்பதாயினும், இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் நிவாரணச் செலவாயினும், இதுபோன்ற அம்சங்களில் மாநிலங்களுக்கு, குறிப்பாகத் தமிழ்நாட்டுக்கு, ஆறாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளில் சரியான நியாயம் வழங்கப்படவில்லை என்பதே நமது கருத்து.



ஏழாவது நிதிக் குழு அண்மையில் சென்னைக்கு வந்தது. 1979 முதல் 1984 வரையிலான ஐந் தாண்டுக் காலத்தில் வரிப் பங்கீட்டினையும் சட்டப் படியாக மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய மானி யங்களேயும் உயர்த்த வேண்டுமென்று எடுத்துக்கூற இத் தருணத்தில் ஏற்பட்ட வாய்ப்பினைப் பயன் படுத்தியுள்ளோம். நாட்டின் நிதி ஆதாரங்கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் பொது வானவை எனச் சுட்டிக்காட்டியுள்ளோம். இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளுக்கும் கடமை களுக்கும் ஏற்ப, இந்தப் பொதுவான வருவாய் ஆதாரங்களிலிருந்து மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடுகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென நிதிக்குழுவிடம் முறையிட்டுள்ளோம். ஆண்டு தோறும் அதிகரிக்கும் வருவாய் இனங்கள் மாநிலங் களுக்குப் போதிய அளவில் அளிக்கப் பெற வேண் டும். இந்த அடிப்படையில்தான் கூட்டு நிறுவன வரி ( Corporation Tax ) வருவாயில் மாநிலங் களுக்கும் பங்கு அளிக்க வேண்டுமென வலியுறுத்தி யுள்ளோம். மதுவிலக்கால் ஏற்பட்டுள்ள இழப்பை முழுமையாக ஈடு செய்ய வேண்டுமென்றும் கோரி யுள்ளோம். அவ்வப்போது அளிக்கப்படும் அக விலைப்படி உயர்வால் மாநிலங்களுக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத கூடுதல் செலவையும் சரிக்கட்ட வேண்டுமென முறையிட்டுள்ளோம். இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் நிவாரணச் செலவுகளுக் கான உதவித் தொகையைத் திட்ட காலத்தில் கழித்துக் கொள்ளாது, கூடுதல் உதவித் தொகை யாக அளிக்க வேண்டுமெனவும் வேண்டியுள்ளோம். நமது பல்வேறு முறையீடுகளை நிதிக் குழு முழுமை யாகவும் அனுதாபத்துடனும் கவனிக்குமென நம்பு கிறோம். இதன் விளைவாக, நிதிக் குழுவின் ஆணை யின் மூலம் 1979-80-லிருந்தாவது நம் மாநிலத் திற்குப் போதிய அளவு வருவாய் ஆதாரங்கள் கிடைக்குமென நம்புகிறோம்.



## வரி அமைப்புகளில் மாறுதல்கள்

ஆண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு வழங் கும் கணிசமான உதவித் தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்ட பின்னரும், வரும் ஆண்டில் 34 கோடி ரூபாய் அளவிற்குப் பற்றுக்குறை இருக்கும். வறட்சி, வெள்ள நிவாரணப் பணிகளுக்காக மத் திய அரசிடமிருந்து கடந்த ஆண்டுகளில் நாம் பெற்றுள்ள திட்ட முன் உதவித் தொகைகள் வரும் ஆண்டுத் திட்ட அளவினுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடாது என்பது நமது நோக்கமாகும். இதற்கு மத்திய அரசின் முழு ஒத்துழைப்பைப் பெற்று, வரும் ஆண்டில் வளர்ச்சித் திட்டங்களுக் கான ஒதுக்கீடுகளைப் பெருமளவில் உயர்த்த முடிந் துள்ளது மன நிறைவு அளிப்பதாக உள்ளது.

அதே நேரத்தில், இந்த மாபெரும் பணியை நிறைவேற்றுவதில் ஏற்படும் சுமையில் நாமும் ஒரு பங்கை ஏற்பது தவிர்க்க முடியாததாகும். வரி அவசிய-அவசரமற்ற செலவுகளில் சிக்கனம், வரி களைச் சரிவர முறைப்படி வசூலித்தல், வருவாய் இனங்களின் வளர்ச்சியை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் நமது நிதி நிர்வாகம் தொடர்ந்து நடைபெற வேண்டும். இருப்பினும், நமது பற்றுக்குறையை ஈடு செய்வதற்கு மட்டு மல்லாது வரி ஆதாரங்களை வருங்காலத்தில் விரிவு படுத்தவும், ஓரளவு கூடுதல் வரி விதிப்பு தேவை யாகிறது. நாம் கொண்டுவர இருக்கும் வரி மாற் றங்களில் சாதாரண மக்களின் பளுவை அதிகரிக் காமல் இருக்க முயன்றுள்ளோம். இந்தப் பின்னணி யில் கீழ்வரும் மாறுதல்களை அவையினர் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய முதல் பரிவுரை மோட்டார் வாகன வரி தொடர்புடையதாகும். பேருந்துகளை நடத்துவதில் தற்போதிருக்கும் வரவு-செலவுகளை நோக்கும்போது பேருந்துகளின் மீது விதிக்கப் படும் காலாண்டு வரியை ஓரளவுக்கு அதிகரிக்க வாய்ப்பிருப்பது தெரிகிறது. 1978-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி தொடங்கும் காலாண்டு முதல் வெளியூர்ப் பேருந்துகளில் இருக்கை ஒன்றுக்குக் காலாண்டுக்கு விதிக்கப்படும் வரியை 15 ரூபாய் கூடுதலாக்கவும், நகர்ப்புறப் பேருந்துகளில் 25 ரூபாய் கூடுதலாக்கவும், ஒப்பந்தப் பேருந்துகளில் 80 ரூபாய் கூடுதலாக்கவும் உத்தேசித்துள்ளோம். சுற்றுலா ஒப்பந்தப் பேருந்துகளுக்கு 40 ரூபாய் கூடுதலாக்கப்படும்.

தற்போது, பேருந்து விபத்துக்களில் சிக்கி உயிரிழக்கும் அல்லது காயமடையும் பயணி களுக்கும் மற்றவர்களுக்கும் இழப்பீடு பெறுவ தற்கு மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு மன்றத்தை நாடவேண்டியுள்ளது. இம் முறையில் தாமதம் ஏற்படுவது மட்டுமல்லாமல், பாதிக்கப் பட்டோருக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்கு, மிகுந்த தொல்லையும் செலவும் ஏற்படுகின்றன. மோட்டார் வாகன வரி மூலம் தற்போது கிடைக் கும் மொத்த வருவாயில் ஒரு சத வீதத்தை, அதாவது ஏறக்குறைய 50 இலட்சம் ரூபாயை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ஒவ் வோர் ஆண்டும் மாற்றுவது என முடிவெடுத்துள் ளோம். இந்தத் தொகையிலிருந்து, அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் மூலமாக வோ தனியார் பேருந்துகளின் மூலமாகவோ ஏற் படும் விபத்துக்களில் உயிரிழந்தோர் குடும்பத் திற்கு உடனடி கருணை மானியமாக 1,000 ரூபாய் கொடுக்கப்படும். காயமடைந்தவர்களுக்குத் தக்க உதவித் தொகையும் வழங்கப்படும். மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு மன்ற ஆணையின் மேல் கிடைக்கும் தொகையை இந்தக் கருணை மானியம் பாதிக்காது.



தற்போதுள்ள விற்பனை வரி வீதங்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்குடன், விற் பனை வரி அமைப்பைப் பரிசீலனை செய்துள்ளோம். வரி, வீதங்களைச் சீரமைக்கும் நோக்குடன், தங்கம், வெள்ளியின் ( Bullion ) மீதான ஒருமுனை வரி 1 சத வீதத்திலிருந்து 2 சதவீதமாக்கப்படும்; சுத்தப்படுத்தப்பட்ட தோல் ( Dressed Hids and Skins ) மீதான ஒருமுனை வரி 1.5 சதவீதத்தி லிருந்து 2 சதவீதமாகவும், பருத்திக் கழிவு, பருத்தி நூல் கழிவு, செயற்கைப் பட்டு நூல், உறுதி நார் நூல் ( Staple Fibre yarn ) ஜரிகை, ஏலக் காய் ஆகியவற்றின் மீதான வரி 3 சத வீதத்தி லிருந்து 4 சதவீதமாகவும், கையால் செய்யப் படும் சோப்பு தவிர இதர சோப்புகள் மீதான வரி 5.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாகவும் மாற் றப்படும். மண்ணெண்ணெய் மீதான விற்பனை வரி 8.5 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப் படும். இயந்திரங்கள் மீதான வரி வீதம் 5 சத வீதத்திலிருந்து 6 சதவீதமாகவும், சிமெண்ட், தொழிற்சாலைகளுக்கான எரிவாயு, துருப்பிடிக் காத உருக்கு ( Stainless Steel ) வண்ணப் பூச்சுகள் (Paints) வண்ணக் கலவைகள் (Colours) ஒட்டுப்பலகை (Plywoods), கண்ணாடிச் சாமான்கள் ஆகியவை மீது விதிக்கப்படும் தற்போதைய 8 சத வீத வரி வீதம் 10 சதவீதமாகவும் உயர்த்தப்படும். பெட்ரோல், டீசல் ஆகியவற்றின் மீதான வரி லிட்டர் ஒன்றுக்கு 2 காசு அதிகரிக்கப்படும். இந்த மாறுதல்கள் பிப்ரவரி மாதம் 21-ஆம் தேதி முதல் அமலுக்கு வரும்.

வணிக வரிகளே அரசுக்கு வருவாய் நல்கும் மிக முக்கியமான ஆதாரமாகும். இவ் வரிகளைச் செலுத்தாமல் ஏய்ப்பதையும் தவிர்ப்பதையும், வரி வசூல் நடவடிக்கைகளில் லஞ்ச ஊழலையும் கெடுபிடி தொல்லைகளையும் அறவே நீக்க வேண்டுமென விரும்புகிறோம். இந்த நோக்கத்துடன், பல நடவடிக்கைகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டுள்ளன. தற்காலிக சினிமாக் கொட்டகைகளுக்கும் (Touring Cinemas) ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், முதல் நிலை, இரண்டாம் நிலை நகராட்சிகளிலும் உள்ள திரைப்பட அரங்குகளுக்கும் குறிப்பிட்ட வீதத்தில் கேளிக்கை வரியை விதித்தது, ஒரு இலட்ச ரூபாய்க்கு மேற்படாத மொத்த வியாபாரத் தொகையுடைய சிறு வணிகர்களைப் பொறுத்தவரை ஒட்டு மொத்தக் கணிப்பு முறையில் (Summary assessment) வரி விதிப்பது முதலியவை இவ் வகையில் நாம் மேற்கொண்டுள்ள முக்கியமான நடவடிக்கைகள் ஆகும். வரி கொடுப்போரின் சிரமங்களைக் குறைக்கவும், வரி வசூலைப் பெருக்கவும், லஞ்ச ஊழலை ஒழிக்கவும் விற்பனை வரிச் சட்டங்களிலும் விதிமுறைகளிலும் செய்ய வேண்டிய மாற்றங்களை எடுத்துக் கூற, முன்னர் அறிவித்த வண்ணம், குழு ஒன்றை நியமித்துள்ளோம். வணிக வரித் துறையில், தகவல் திரட்டும், ஆய்வு செய்யும், தவறுகளைக் கண்காணிக்கும் நடவடிக்கைகளை வலுப்படுத்தி, இந்த நடவடிக்கைகள் ஒருங்கிணைந்த முறையில் செயல்பட, தகுந்த நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். இந்தச் சீர்திருத்தம், லஞ்சத் தடுப்பு நடவடிக்கைகளை, நிர்வாகச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக மேற்கொள்ள நாம் எடுத்துவரும் முயற்சிகளில் முக்கியமானதொன்றாகும்.

வருமான வரி வீதங்களோடும், கேரளம், கர்நாடகம் போன்ற அண்டை மாநிலங்களில் உள்ள விவசாய வருமான வரி அமைப்புகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமது விவசாய வருமான வரி அமைப்பில் சில திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியமாகிறது. வருமானக் கணக்குகள் அடிப்படையில் விவசாய வருமான வரி செலுத்துவோருக்கு வரி விலக்கு வரம்பு 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தப்படும். அத்துடன், கீழ்மட்ட வருமானங்கள் மீதான வரியைக் குறைக்கும் வகையில், 10,000 ரூபாய்க்குமேல் 15,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 20 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாகவும் 15,000 ரூபாய்க்குமேல் 20,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 30 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும், 20,000 ரூபாய்க்குமேல் 25,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 35 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும், 25,000 ரூபாய்க்கு மேல் 30,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 45 சதவீதத்திலிருந்து 30 சதவீதமாகவும் விவசாய வருமான வரி வீதங்கள் குறைக்கப்படும். 30,000 ரூபாய்க்குமேல் 50,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்கு 45 சதவீதம் வரி விதிக்கப்படும். தற்போது 50,000 ரூபாயும் அதற்கு மேலும் உள்ள வருமானங்களுக்கு 55 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி வீதம் 50,000 ரூபாயிலிருந்து 70,000 ரூபாய் வரையிலான வருமானங்களுக்குத் தொடரும். கூடுதல் வருமானம் உடையோருக்கு, ஓரளவு வரியைக் கூட்டும் முறையில் 70,000 ரூபாயிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் வரை உள்ள வருமானங்களுக்கு 60 சதவீதம் என்ற அளவிலும், ஒரு இலட்சத்திற்கு மேல் உள்ள வருமானங்களுக்கு 65 சதவீதம் என்ற அளவிலும் வரி விதிக்கப்படும். நாம் கொண்டுவரும் மற்றுமொரு முக்கிய மாறுதலை மலைத் தோட்டப் பயிர்களுக்கான இணக்க (Compounding) வசதியை நீக்குவதும், பிற பயிர்களுக்கு இந்த வசதியை 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை நிறுத்திக் கொள்வதும் ஆகும். இணக்க முறையில் வரி செலுத்துவோருக்கு ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கருக்குரிய புதிய வீதங்கள் வருமாறு :—

*10 முதல் 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 30 ரூபாய்.*

*15-க்குமேல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 50 ரூபாய்.*

*20-க்குமேல் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 70 ரூபாய்.*

*25-க்குமேல் 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் பரப்பிற்கு 90 ரூபாய்.*

ஸ்டாண்டர்டு ஏக்கரைக் கணக்கிடும் முறை திருத்தி அமைக்கப்பட்டு எளிதாக்கப்படும். இந்த மாறுதல்கள் 1979ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று முடிவடையும் வரிவிதிப்பு ஆண்டு முதல் அமலுக்கு வரும்.

வரி மாறுதல்களால், 9.55 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும் என மதிப்பிடுகிறோம். ஆகவே, வரும் நிதி ஆண்டில் நிகரப் பற்றுக்குறை 24.5 கோடி ரூபாய் அளவில் இருக்கும். வெள்ள நிவாரணப் பணிகளுக்கான செலவுக்காக, கூடுதல் நிதி உதவி அளிக்குமாறு மத்திய அரசைக் கோரியுள்ளோம். நிகர பற்றுக்குறையை மத்திய அரசும் மாநில அரசும் இணைந்தெடுக்கும் நடவடிக்கைகள் மூலம் ஈடுசெய்ய வேண்டும்.

தலைவர் அவர்களே, மன நிறைவோடு இந்த நிதி நிலை அறிக்கையை அவையின் முன் வைக்கிறேன். அமரர் அண்ணாவின் ஆசைக் கனவுகளுக்குப் படிப்படியாக வடிவம் சமைத்திடும் முயற்சிகளில் இது ஒன்று எனக் கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன். எல்லாம் இதிலே அடங்கியிருக்கிறது எனக்கூறி என்னை ஏமாற்றிக் கொள்ள விரும்பவில்லை! சென்றடைய விரும்பும் இலட்சிய முகட்டின் தோற்றம் கண்ணெதிரே தெரிகிறது. வயற்காடுகளில், தொழிற்சாலைகளில் மலைப் பகுதிகளில், கடலோரப் பகுதிகளில், பின்தங்கிய இடங்களில் தங்களது வியர்வையைச் சிந்தி, பிறருக்காக காலாகாலம் உழைத்து, தங்களை உருக்குலைத்துக் கொண்டு, மற்றையோர்களை உருவாக்கி வாழ வைக்கும் அந்த நடமாடும் தெய்வங்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை, மன மகிழ்ச்சியை, நிறைவை, நம்பிக்கையை ஏற்படுத்திட அரசு மேற்கொள்ளும் பல முயற்சிகளின் ஒரு கூறுதான் இந்த நிதி நிலை அறிக்கை.

இந்த அறிக்கையைத் தொடர்ந்து எழவிருக்கும் விவாதங்களில் மாண்புமிகு உறுப்பினர்களின் ஆக்கபூர்வமான விமரிசனங்களை, விளக்கங்களை, ஆலோசனைகளைப் பெரிதும் எதிர்பார்க்கின்றேன். இயற்கை சீறியதன் விளைவாக நம்மையும் மீறிச் சந்திக்க வேண்டியிருந்த சோதனைகளை உறுப்பினர்கள் அறிவர். அதன் மூலம் எழுந்த சேதங்களைச் சந்திக்க ஏற்பட்ட, ஏற்பட்டுக் கொண்டு வரும் செலவினங்களை ஏற்றாக வேண்டும். அலுவலர்களின் நியாயமான கோரிக்கைகள் என்று அரசு கருதி ஏற்றுக் கொண்டுள்ள ஊதிய உயர்வு போன்ற இனங்களுக்கு நிதி ஒதுக்கியாக வேண்டும். மதுவிலக்கினால் ஏற்படும் நட்டத்தை, அதைத் தீவிரமாக அமல்படுத்துவதனால் ஏற்படும் செலவினங்களைச் சரிக்கட்டியாக வேண்டும். ஏழை, நடுத்தர வர்க்கத்தினரின் வலுவிழந்துவிட்ட தோள்களில் வரிப் பளுவை ஏற்றிடல் இயலாத

காரியம். எனினும், கடுமையான மேற்சொன்ன அறைகூவல்களை ஏற்று, திட்டவட்டமான இலட்சியங்களோடும், துணிவோடும் துணிச்சலோடும் மிடுக்களின் குறைகளைப் போக்கி, நிறைவுபெறும் இலக்கு நோக்கிச்செல்லும் வகையில் இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க முயன்றிருக்கிறேன்.

தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, வாங்கும் சக்தியினைப் பெருக்க, வறுமையை வெல்ல, வேலையில்லாக் கொடுமையைக் களைய சூளுரை கொண்டு பணி மேற்கொண்டிருக்கும் இந்த அரசிற்கு, முழு ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நல்லெண்ணம் படைத்த அனைத்து உறுப்பினர்களும் இதனை ஏற்றுக்கொள்வார்கள் என உறுதியாக நான் நம்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து, எனது பளுவினை எளிதாக்கிய நிதித் துறைச் செயலர் திரு ச. குகன் அவர்களுக்கும், அவருடன் பணியாற்றியவர்களுக்கும், ஏனைய அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, 1978-79ஆம் ஆண்டிற்கான இந்த நிதி நிலை அறிக்கையை அவையினர் ஏற்குமாறு வேண்டி அமருகிறேன்.

(1978-79-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் சட்ட மன்றப் பேரவை முன் வைத்து 1978-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20-ஆம் நாளன்று ஆற்றிய உரை.)

---

# அதிக இலாபம் பெற

"ஊட்டச் சத்து மிகுந்த உணவை உற்பத்தி செய்வதற்கும், அந்நியச் செலாவணியை அதிக அளவில் ஈட்டுவதற்கும், அதிக இலாபம் பெறுவதற்கும் காய்கனிகள், மலர் வகைப் பயிர்களைச் சாகுபடி செய்யுங்கள்'' என்று மாண்புமிகு தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் உழவர் பெருமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் நடைபெற்ற அனைத்து இந்தியச் சுற்றுலாப் பொருட்காட்சியில் 5—2—1978 அன்று மாலை நடைபெற்ற தோட்டக்கலைக் கண்காட்சியின் பரிசு அளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தோட்டக்கலைப் பயிர்கள் பேருதவியாக இருக்கின்றன.

''ஓர் ஏக்கரில் ஓர் ஆண்டில், 3 போகம் நெல் பயிரிட்டாலும் ஏறத்தாழ 10,000 கிலோ நெல் தான் விளைவிக்க முடியும். ஆனால் திராட்சை, வாழை போன்றவற்றைப் பயிரிட்டால் ஓர் ஏக்கரில், ஓர் ஆண்டில், 16,000 கிலோ முதல் 32,000 கிலோ வரை மகசூல் பெறமுடியும்.

''அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் தோட்டக்கலைப் பயிர்கள் முக்கிய அங்கம் வகிக்கின்றன. 1,000 ஏக்கரில் வாழை பயிரிட்டால், ஏறத்தாழ 1 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி பெறமுடியும். ஆனால் மற்றப் பயிர்களின் மூலம் இந்த அளவுக்கு அந்நியச் செலாவணியைப் பெற முடியாது.


''மலர்களைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்வதானாலும் நமது உழவர்கள் அதிக வருவாய் பெறமுடியும். மேற்கு ஜெர்மனியில் நமது நாட்டுச் சாமந்திப் பூக்கள் டஜன் ரூபாய் 72 வீதமும், 100 ரோஜாப் பூக்கள் ரூபாய் 150 வீதமும் விற்கின்றன. மல்லிகைப் பூவிலிருந்து தயாரிக்கப்படும் வாசனைத் தைலம் ஒரு பவுண்டு 15,000 ரூபாய் வீதம் விற்கிறது. எனவே, காய்கனிகள், மலர்கள் ஆகியவற்றைப் பயிரிட்டு அதிக இலாபம் பெறுமாறு உழவர் பெருமக்களை வேண்டுகின்றேன்'' என்று கூறினார்.



# நாடும் ஒன்றே நாமும் ஒன்றே

ஒருங்கே
பணிபுரிகின்றனர்





## மருத்துவ மனையில்...

டாக்டர் துரைசாமி தில்லியில் இவ்வளவு நாட்கள் தங்குவார் என்று அவருககே தெரியாது. அவர் 15 வருடங்கள் இங்கு வாழ்ந்த காலத்தில் பல நண்பர்களுண்டு அவருக்கு. அவர் செய்யும் தொழில் உறசாகமானது. எப்பொழுதும் துரு துருவென்றிருப்பார்.

அவருடன் பணி புரிபவர்களில் துடிப்புமிகு இளம் டாக்டர்களும், பெண்களும் உள்ளனர். அவர்கள் இல்லத்தில் வெவ்வேறு மொழியே பேசுகின்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அவர்கள் வந்துள்ளனர்.
ஆனால் மருத்துவ மனையில் அவர்கள் பேசும் மொழி ஒன்றுதான்—அன்பெனும் ஆனந்த மொழி அது.

அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாள் !

davp 77/49 Tam.

சோம்பித்திரிவோர் மனதில்தோன்றுகிறது வேற்றுமை அதைத் துடைத்திடுவோம் வாரீர்

# தமிழகத்தில் பள்ளிச் சீரமைப்பு

டாக்டர் எச். எஸ். எஸ். லாரன்ஸ்,
பள்ளிக் கல்வி இயக்குநர்.

தமிழ்நாட்டில் உள்ளூர் முயற்சிகளையும் ஊக்கத்தையும், ஒன்று திரட்டி, பள்ளிகளின் வசதிகளைப் பெருக்க வேண்டி, 1976-77-ஆம் ஆண்டு வரை 556 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. பொது மக்களிடமிருந்து ரூ. 14.15 கோடி அளவிற்கு உதவி கிடைத்தது. அறிவியல் மற்றும் நூலக முன்னேற்றத்தையும் சிறப்பாக வலியுறுத்தி, இத்திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. 1976—77 வரை, தாமாக முன் வந்து உதவும் முயற்சியின் விளைவாக, 40.46 இலட்சம் மாணவர்களுக்கு 2.66 கோடி மதிப்புள்ள இலவசப் பள்ளிச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. பொது மக்கள் அன்பளிப்பு, மதிய உணவுத் திட்டத்துடன் அமைந்த ஒரு முக்கிய உண்மையாகும்.

**தாமாக மேற்கொள்ளும் முயற்சிகள் :**

பள்ளிகளில், பௌதிக முன்னேற்றத்திற்கான, தாமாக மேற்கொள்ளும் முயற்சிகளில், தமிழகம் தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ்கிறது. இத்தகைய முன்னோடித் திட்டங்களுக்காகத் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள புகழுரைகள், ஏராளம், ஏராளம்! இத்துறையில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் ஒரு வழி காட்டியாகத் தமிழகம் உள்ளது எனலாம்.

தேசியக் கல்விக் குழு, தன்னுடைய அறிக்கையில் குறிப்பிடுகிறது :

''குறிப்பாக, பெரும்பான்மையான தொடக்க நிலைப் பள்ளிகளில், அடிப்படைத் தேவைகளான கற்பித்தல் கருவிகள்—ஒரு நல்ல கரும் பலகை, ஒரு சிறிய நூலகம், தேவையான தேசப் படங்கள், வரை படங்கள், எளிய அறிவியல் கருவிகள், தேவையான காட்சிப் பொருள்கள் ஆகியவை ஏறக்குறைய முழுமையாக இல்லை என்பதை ஒருவர் கட்டாயம் ஒத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அத்தகைய, அடிப்படைத் தேவையான பொருள்களையும், கற்பித்தல் கருவிகளையும் கற்பித்தலில் தர உயர்வு ஏற்பட, ஒவ்வொரு பள்ளிக்கும் அளித்தல் அவசியமாகும். இத்திட்டத்தை வளர்க்க, சென்னை மாநிலத்தில் உள்ளதைப் போல, உள்ளூர் சமுதாய உதவியை ஒன்று திரட்ட வேண்டும்,''

பள்ளிச் சீரமைப்புத் திட்டங்கள், முடிவற்றதாக இருக்க வேண்டும். அவை, தொடர்ந்து செயல்பட வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள எல்லாப் பள்ளிகளிலும், அவை, ஒழுங்கான அடையாளங்களாகத் திகழ்தல் வேண்டும். பள்ளிகளின் தேவைகள் அதிகரித்த வண்ணம் இருப்பதால், வசதிகள் தொடர்ந்து கிடைக்குமாறு செய்தல் வேண்டும். பள்ளிச் சீரமைப்புத் திட்டங்களைப் பொறுத்த அளவில், தொடர்ந்து ஐந்து முக்கிய செயல் திட்டங்களை ஆசிரியர்களும், மாணவர்களும் நினைவு கூர்தல் வேண்டும்.

பள்ளிக்கூடத்தைப் பழுது பார்த்தல் — வெள்ளை அடித்தல்.

கரும் பலகைகளைப் பழுது பார்த்தல்—மீண்டும் நிறம் ஊட்டுதல்.

சுகாதார வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

பாதுகாக்கப்பட்ட குடி நீர் வசதி ஏற்படுத்துதல்.


நூலகம் அமைத்தல்.

தாமாக முன் வந்து உதவும் சில புதிய திட்டங்கள், கடந்த 15 ஆண்டுக் காலமாக, நலிவுற்ற பகுதியினின்று வரும் பள்ளி மாணவர்களுக்கு உதவும் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பொது மக்களின் நன்கொடையால் ஏற்படுத்தப்பட்டவைதான் புத்தக வங்கிகள், பள்ளியிலுள்ள ஏழை மாணவர்களுக்கும் புதிய மற்றும் பழைய நூல்கள் கிடைக்குமாறு, செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் 37,295 பள்ளிகளில் புத்தக வங்கிகள் உள்ளன. இந் நூல்களால், 8,20,917 பள்ளிக் குழந்தைகளுக்குக் குறையாமல் பயன் பெறுவர்.


பள்ளிச் சீரமைப்புத் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்கத்துடன் நடைபெறுவன, பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள். சில தினங்களுக்கு முன்னால் தமிழகத்தின் தென் மாநிலங்களில் நடைபெற்ற இரண்டு பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளை இங்கே குறிப்பிடுதல் சாலப் பொருத்தமுடையதாக இருக்கும்.

நாகர்கோவிலில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கிடைத்த பொருள்களின் மதிப்பு ரூ. 3,73,969.39 ஆகும். இதனால் பயன் அடைந்த பள்ளிகளின் எண்ணிக்கை 71 ஆகும். மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் இம்





பள்ளிச் சீரமைப்பு மாநாடு, சென்னை



மாநில அளவில் அறிவியல் பொருட்காட்சி

மாநாட்டில் பங்குபெற்றனர். காரைக்குடியில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் கிடைத்த பொருள்களின் மதிப்பு ரூ. 18,39,374—00 ஆகும். இதில் பங்கு பெற்றவர்களின் எண்ணிக்கை 742 ஆகும். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், பள்ளிக் கல்வி இயக்குநரும் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.


**பள்ளிகளில் வானொலிப் பெட்டிகள் :**

தாமாக முன் வந்து, வானொலிப் பெட்டிகளைப் பள்ளிகளுக்கு அளிக்கும் முயற்சியானது தமிழகத்தில் கல்வித் துறையில் நாம் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க மற்றொரு வெற்றியாகும். அனைத்து இந்திய வானொலியில் கல்வி ஒலிபரப்புகள் ஒலிபரப்பப்படுகின்றன. இவ்வொலிபரப்புகளைக் கேட்க வேண்டுமானால், பள்ளிகளில், வானொலிப் பெட்டிகள் — டிரான்சிஸ்டர்கள் அவசியம் இருத்தல் வேண்டும். 1975ல் தமிழகத்திலுள்ள எல்லா வகைப் பள்ளிகளிலும், 2,456 வானொலிப் பெட்டிகள் மட்டுமே இருந்தன. (மக்கள் தாமாக முன் வந்து அளிக்கும் முயற்சியின் கீழ்) இன்று, 27,165 பள்ளிகளுக்கு வானொலிப் பெட்டிகளை — டிரான்சிஸ்டர்களை மக்கள் அளித்துள்ளார்கள். இப்படி அளிக்கப்பட்ட வானொலிப் பெட்டிகள், வகுப்பறையிலுள்ள சோர்வை நீக்கி, குழந்தைகளையும், ஆசிரியர்களையும் மகிழ்ச்சி அடையச் செய்துள்ளன. ஆசிரியர்களும், குழந்தைகளும் பயன் பெற, கல்வி ஒலிபரப்புகள் வெகுவாகப் பயன்படுகின்றன.

**துப்புரவு இயக்கம் :**

பள்ளிகளில் துப்புரவு இயக்கம் என்பது மற்றொரு பயனுள்ள திட்டமாகும். இது தமிழகத்தில், சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பள்ளி மாணவர் உதவியுடன் பள்ளிகள் துப்புரவு அடைந்தன. வெள்ளை அடிக்கப் பட்டன. நிறம் ஊட்டப் பெற்றன. இத் திட்டம், பள்ளிக் குழந்தைகளின் முழு ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்பட்டது. குழந்தைகளின் பயிற்சியில், தன்னுதவு முறை இடம் பெற்றுள்ளது. தாமே முன் வந்து செய்யும் திட்டத்தின் கீழ், பல பள்ளிகள் பயனடைந்துள்ளன. கட்டடங்களும், விளையாடுமிடங்களும், தோட்டங்களும் ஒளிர்விடும்படி செய்யப்பட்டுள்ளன.


பள்ளிகளின் முன்னேற்றத்திற்காக, சமூகத்தின் முன் வந்து உதவும், உதவியை, ஒன்று திரட்டுவதற்கான, நல்வழியாக விளங்குவது பள்ளிச் சீரமைப்பு மாநாடாகும். தங்கள் சொந்தச் சுற்றுப்புறத்திலுள்ள பள்ளிகளுக்கு



## அறிவொளிப் பயணத்திலே...

உள்ளூர்ப் பொதுமக்கள் தாமாக முன்வந்து அளிக்கும் பணம் அல்லது பொருள்களின் உதவியால் பள்ளிகளின் தேவைகளை நிறைவேற்றல் என்ற கருத்தின் அடிப்படையில் தொடங்கப்பட்டதுதான் பள்ளிச் சீரமைப்பு இயக்கம். நாட்டின் அன்றைய தலைமை அமைச்சராக இருந்த திரு ஜவஹர்லால் நேரு அவர்களால் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆ. தெக்கூர் என்ற இடத்தில் 15-4-1949-ல் தமிழ்நாட்டில் பள்ளிச் சீரமைப்பு மாநாடு தொடங்கி வைக்கப்பட்டது. அதுமட்டுமல்ல; 12-8-1960-ல் வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டை அன்றையக் குடியரசுத் தலைவர் திரு. இராஜேந்திர பிரசாத் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

ஏழை மாணவர்களுக்குப் பள்ளிச் சீருடை இலவசமாக வழங்கும் திட்டம் 1960-ல் துவங்கியது. இத்திட்டம் பள்ளிச் சீரமைப்பு இயக்கத்துடன் இணைந்தது.



கூரை வேய்ந்த பள்ளிகளை மாற்றி, நல்ல கட்டடம் கட்டுதல்

உதவ வேண்டும் என்ற அன்பையும் ஆவலையும், அவை உண்டாக்கும். பெற்றோர்களில் பலர், தாங்கள் பயின்ற பள்ளி அல்லது தங்களுடைய குழந்தைகள், பேரக் குழந்தைகள் பயில்கின்ற பள்ளி ஆகியவற்றை முன்னேறும் படிச் செய்ய ஆவல் உடையவர்களாக இருக்கின்றார்கள். படிக்காத வயது வந்தோரில் பலரும், வருங்கால குடிமக்களைப் படித்தவர்களாக, அறிவு நுட்பம் வாய்ந்தவர்களாக மாற்றும் பள்ளிக்கு, உதவ விரும்புகின்றனர். எல்லாத் துறைகளின் முன்னேற்றத்திற்கும் அடிப்படை கல்வி, என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஈகை உள்ளம் படைத்த மக்கள், தங்கள் ஈகைக்குப் பள்ளிகளை வழியாகக் கொண்டுள்ளார்கள். மக்களிடையே யுள்ள இந்தப் பண்புகளை, ஆசிரியர்கள், பள்ளிச் சீர்திருத்தத் திட்டங்களின் வாயிலாக, முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இத்தகைய பயனுள்ள திட்டங்களை, ஏற்படுத்துவதில், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களுக்கு முக்கியமான பங்கு உண்டு. பள்ளிச் சீரமைப்பு மேம்படும் வகையில், பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள், பயனுள்ள முறையில் செயல்பட வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்தால், மாணவர்களிடையே துன்பம் இருக்காது. அவ்வப்போது மாணவர்-ஆசிரியர் தேவைகள் நிறைவு செய்யப்படும். பள்ளிகளில், இத்தகைய சங்கங்கள், சோம்பி இருந்தால், மாணவரிடையே ஒழுக்கமின்மையும், அமைதி இன்மையும் காணப்படும். ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒன்று சேர்ந்தால், பள்ளிகளில் உள்ள விரும்பத் தகாத நிலைகளை மாற்றி, கல்வி வளர்ச்சியில் முன்னேற்றம் காண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

### பள்ளி-சமுதாய உறவு :

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள், பள்ளிக்கும், சமூகத்திற்கும் ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும், மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும், இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்துகின்றன. எல்லோரும் பயனடையும் வகையில், நட்புச் சூழ்நிலையை அவை உண்டாக்குகின்றன. சமூகத்தினின்று ஒதுங்கி இருந்தால், கல்வி நிறுவனங்கள் வெற்றியடையா. பள்ளி—சமூகம் ஆகியவற்றிடையேயுள்ள நல்லுறவினால், அதிகமான அளவில் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையும், கற்பித்தலிலும், கற்றலிலும் தர உயர்வும், சிறந்த கட்டுப்பாடும், குணப்பண்புகளும் ஏற்படும்.



## சிறுகதைகள் வரவேற்கப்படுகின்றன!

தமிழக அரசின் கொள்கைகளையும் வளர்ச்சித் திட்டங்களையும் மையக் கருவாகக் கொண்டு எழுதப்படும் சிறு கதைகள் வரவேற்கப்படுகின்றன. கதைகள் 'தமிழரசு' இதழில் 4 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும்.

தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு, தொழிலாளர் நலன் போன்றவை கதைக் கருவாக அமைவது சிறப்புடையது. வெளியிடப் பெறாத கதைகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை.

*ஆசிரியர்*
'தமிழரசு'

கதைகளை அனுப்பவேண்டிய முகவரி:

'ஆசிரியர்', 'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
சென்னை-600 002.

பள்ளிச் சீர்திருத்த மாநாடுகளால், சிறிய சிறிய விஷயங்களுக்கெல்லாம் அரசை, எதிர்பார்க்கும் எண்ணமானது நீக்கப்படுகின்றது. உள்ளூர் மக்கள், தங்கள் பள்ளிகளுக்கு தாமே முன் வந்து உதவி செய்வர். தேவையான கட்டடங்களையும் தளவாடங்களையும், மற்ற வசதிகளையும் அளிப்பர். தொடர்புடையவர்கள் உணர்வில், ஒரு தன்னம்பிக்கை ஏற்படும். பள்ளிக் குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடையே, அரசை முழுவதுமாகச் சார்ந்திராமல், தன்னம்பிக்கையுடன் நடக்கும் ஊக்க உணர்வு ஏற்படும். பள்ளிச் சீரமைப்பு மாநாடு என்பது, ஒத்துழைப்பு, ஒருவர்க்கொருவர் உதவுதல், பொது மக்கள் நம்பிக்கை, தன் பொறுப்பு, பள்ளிகளுக்கு சமூகத்தில் உதவி ஆகியவற்றை நடைமுறைப் பாடமாகக் கொண்டது. மற்றவர்களுக்கு உதவவும், மற்றவர்கள் உதவுமாறு செய்யவும், நன்கொடை அளிக்கவும், கூட்டுப்பணி அமைக்கவும், அன்புடன் நடக்கவும், ஒன்றுபட்ட சமூக மனநிலையுடன் இருக்கவும், அவை வாய்ப்புகளாக அமைகின்றன. பொது மக்கள் அளித்த நன்கொடைகளை பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளில் விளம்பரமாக வைத்தலும், பொது மக்களின் நன்கொடையைத் தலைவர்கள் பாராட்டுதலும் மற்றொரு முக்கிய குறிக்கோளாகும். பொது மக்களால், ஆற்றிய தொண்டுகள் நன்கு உணரப்படுகின்றன. நன்கொடை அளித்தவர்கள், தங்கள் பொருள்களைத் தங்கள் பெயர்களுடன் காண்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ஒருவித மனநிறைவு ஏற்படுகின்றது. கல்விக்காக, மக்கள் தரும் ஆதரவை, இத்திட்டம் செயல்படுத்திக் காட்டுகின்றது.

### கிராம மக்களுக்கு வசதியாக சிறிய பஸ் சர்வீஸ்

கிராம மக்கள் வசதியை முன்னிட்டு 24 பேர்கள் பயணம் செய்யக்கூடிய சிறிய பஸ் சர்வீஸ் தமிழ்நாட்டில் முதன் முதலாக மதுரை மாவட்டம் நிலக்கோட்டையில் 11-2-'78 அன்று துவக்கி வைக்கப்பட்டது. பஸ் வசதி இல்லாத கிராமங்களுக்கு இத்தகைய பஸ்களை விட தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

### அறிஞர் பெர்டிராண்ட் ரஸ்ஸல் அவர்கள் கூறுகிறார்—

''நம்மைத் துன்புறுத்தும் தீமைகள் பல, முழுமையும் தேவையற்றவை என்பதை ஒரு சில மனிதர்களே உணர்ந்திருக்கின்றனர். ஒன்றுபட்ட முயற்சியினால் அவற்றை ஒரு சில ஆண்டுகளில் நீக்கிவிட முடியும். நாகரிகமடைந்துள்ள ஒவ்வொரு நாட்டிலும் உள்ள பெரும்பான்மையோர் விரும்பினால் 20 ஆண்டுகளில், இழிந்த வறுமையையும், உலகத்திலுள்ள பாதி நலிவுகளையும், பத்தில் ஒன்பது பங்கு மக்களைப் பாதிக்கும் பொருளாதார அடிமைத்தனம் முழுவதையும், ஒழித்து விட முடியும். உலகை அழகாலும், மகிழ்ச்சியாலும், நிரப்ப முடியும்; உலகஅமைதியை ஏற்படுத்த இயலும். மக்கள் உணர்ச்சியற்றவர்களாகவும், அவர்களின் கற்பனை சோம்பல் நிறைந்ததாகவும் உள்ளதால், இதனை அடைய முடியவில்லை. எப்பொழுதும் இருந்தது, எப்பொழுதும் இருக்க வேண்டுமென்று கருதும் மனநிலையும் இதற்குக் காரணமாகவுள்ளது.''

சிந்தனைக்கு உரமாக அமைகின்ற அறிஞரின் கருத்துரை பள்ளிச் சீரமைப்பில் அக்கறை கொண்டுள்ள அனைவருக்கும் நல்லதொரு வழிகாட்டியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.





செங்கை மாவட்டம் புழல் ஊராட்சி ஒன்றிய கூடுதல் பள்ளிக் கட்டடம் ஒன்றினை, 14-2-'78 அன்று உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் திறந்து வைத்தார்கள்.

உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ள திரு விக்டர் கோட்டல் நிகோவ் அவர்கள் தலைமையில் சோவியத் நாட்டிலிருந்து வந்த நால்வர் குழு, சமூகநலத்துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களை 24-2-'78 அன்று சந்தித்தது.




# படமும் செய்தியும்



தேசிய மாணவர் படையின் டைரக்டர் ஜெனரல், மேஜர் ஜெனரல் எச். கே. பக்ஷி அவர்கள் தமிழக முதல்வர் அவர்களை 16-2-’78 அன்று சந்தித்தார்.


தமிழ்நாடு அரசின் சார்பில் புதிய முறையில் அறிமுகப்படுத்தியுள்ள உள்ளாட்சி மன்றங்களின் அலுவலர்கள், உதவி பெறும் பள்ளி அலுவலர்கள் ஆகியோருக்கான கூட்டு ஈட்டுறுதித் (Group Insurance) திட்டத்தின் கீழ் 1978-ஆம் ஆண்டுக்கான தவணைக் கட்டணமாக ரூ. 150 இலட்சத்திற்கான காசோலையை பிப்ரவரி 18-ஆம் நாள், நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத் தலைவர் திரு எஸ். ரங்கராஜன் அவர்களிடம் அளித்தார்.





மறைந்த முன்னுள் சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு சி. பி. சிற்றரசு அவர்களுக்கு 17-2-'78 அன்று மாலை தமிழக முதல்வர் அவர்கள் மலர் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினர்.

சென்னையில் நடைபெற்ற அகில இந்திய சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் நடைபெற்ற பஞ்சாப் நாளில் பஞ்சாப் மாநில சுற்றுலா அமைச்சர் திரு சர்தேவ் சுகதேவ் சிங் தின்சா அவர்கள் தமிழக செய்தி–சுற்றுலா அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களுக்கு நிகழ்ச்சி நினைவூட்டுப் பொருள் ஒன்றினை அளித்தார்.



## மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
## அற்றது போற்றி உணின்

**சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் டாக்டர் கிஸார் அகமது அவர்கள் தலைமையின்கீழ் இயங்கிவரும் நீரிழிவு நோய் ஆராய்ச்சிப் பிரிவு ஆற்றி வரும் அரிய பணிகளை—இப்பேட்டிக் கட்டுரை தெளிவாக விளக்குகிறது. அலுவலக நாட்களில் காலை நேரத்தில் இப்பிரிவில் தான் எத்துணைக் கூட்டம்! எல்லாரும் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களே. நீரிழிவு, கொடுமையான வியாதி தான் என்றாலும்—தக்க முறையில் மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டு—அன்றாட வாழ்வில் சில கட்டுப் பாடுகளைக் கடைப்பிடித்தால்—இந்நோயைக் கட்டுப்படுத்தி விடலாம் என்கிறார் டாக்டர் கிஸார் அகமது.**

# நீரிழிவு நோய்

தமிழ்நாட்டில் நீரிழிவு நோய்க்கான ஆராய்ச்சிச் சிறு குழு (Diabetic Research Cell) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மட்டுமே அமைந்துள்ளது.

இந்தியாவில் இதுபோன்று நீரிழிவு நோய் ஆராய்ச்சிச் சிறு குழுக்கள், டில்லி, பம்பாய், சண்டிகார், கல்கத்தா ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. ஆனால் எல்லா முக்கிய மருத்துவமனைகளிலும் நீரிழிவு நோய்க்கான சிகிச்சை அளிக்கும் பகுதிகள் உள்ளன.

1969-ஆம் ஆண்டு மார்ச்சு 6-ஆம் நாள் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நீரிழிவு நோய் ஆராய்ச்சிச் சிறு குழு அமைக்கப்பட்டது.

நீரிழிவு நோய்க்காக இங்குச் சிகிச்சை பெற்று வரும் மொத்த நோயாளிகளில் ஆண்கள் 12,091 பேர்; பெண்கள் 6,227 பேர். கடந்த 1977-ஆம் ஆண்டில் மட்டும் புதிதாகச் சேர்ந்த நோயாளிகளில் ஆண்கள் 626 பேர், பெண்கள் 410 பேர்.

இங்கு, நாள்தோறும் சராசரியாக 375 பேருக்கு மேல் நேரில் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். திங்கட்கிழமை, வியாழக்கிழமை ஆகிய நாட்களில் மட்டும் 600 பேருக்குமேல் அதிகமாக நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். ஆந்திர மாநிலம், ஒரிசா மாநிலம் போன்ற இடங்களில் இருந்துகூட இங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீரிழிவு ஆராய்ச்சிச் சிறு குழுவின் தலைவரும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவப் பேராசிரியருமான **டாக்டர் பி. கிஸார் அகமது** அவர்களிடம் நீரிழிவு நோய் சம்பந்தமான ஐயங்களைக் கேட்டோம். அவர் அளித்த விளக்கங்கள் வருமாறு:



## நீரிழிவு நோய் பற்றிச் சில அடிப்படையான தகவல்கள்:

ரயில் எஞ்சின் ஓடுவதற்கு நிலக்கரி தேவைப்படுவதுபோல், நமது உடல் வேலை செய்வதற்காகச் சக்தியைப் பெற உணவு தேவைப்படுகிறது. உணவுப் பொருட்களிலிருந்து நமக்கு வேண்டிய சக்தியைப் பெறச் சாப்பிடுகிறோம். நாம் சாப்பிட்ட உணவு சீரணிக்கப்படுவதற்காக வயிற்றினுள் சென்றவுடன், கார்போஹைடிரேட் என்ற பொருளாக மாறுகிறது. இதிலுள்ள சர்க்கரை குளுகோஸ் என்று அழைக்கப்படுகிறது. உடலின் எல்லாப்பாகங்களுக்கும் தேவைப்படும் சக்திக்கு குளுகோஸ் அவசியமாகிறது. உடம்பிலுள்ள செல்கள் அனைத்துக்கும் குளுகோஸ் தேவைப்பட்டாலும் அது நேரடியாக அவைகளைப் போய்ச் சேர்ந்து விடமுடியாது. அதற்கு உதவியாக இன்சுலின் என்ற பொருள் தேவைப்படுகிறது.

நமது உடலிலுள்ள பங்கிரியாஸ் (Pancreas) என்ற சுரப்பி வயிற்றின் அடிப்பாகத்தில் அமைந்துள்ளது. தேவைப்படும் நேரங்களில் இன்சுலின் இதிலிருந்து சுரக்கும். குளுகோஸ் உடலின் பல பாகங்களுக்குச் செல்லும் போது இன்சுலினும் செல்கிறது. இரத்தத்திலுள்ள குளுகோஸ், திசுக்களில் (Cells) சேர இன்சுலின் பயன்படுகிறது. தேவைக்கு அதிகமாக உள்ள குளுகோஸ் இன்சுலினின் உதவியினால் கிளைகோஜினாக மாற்றப்பட்டு ஈரலில் சேமித்து வைக்கப்படுகிறது. சக்தி உடலுக்குத் தேவையான பொழுது கிளைகோஜின் குளுகோஸாக மாற்றப்பட்டு உடலின் திசுக்களுக்கு அனுப்பப்படுகிறது. சில செல்கள் குளுகோஸை வேறு வடிவத்திலும் சேமித்து வைத்துக் கொள்கின்றன. இன்சுலின் உதவியுடன் கொழுப்பு செல்களில் கொழுப்பாகச் சேமித்து வைக்கப்படுகின்றது. அந்தக் கொழுப்பு உடலுக்குச் சக்தி தேவைப்படும் பொழுது பயன்படுகிறது.

ஆனால் நீரிழிவு நோயாளிகளின் பங்கிரியாஸில் இன்சுலின் இருப்பதில்லை. இளஞ் சிறார்களுக்கு நீரிழிவு நோய் ஏற்படும்பொழுது அவர்களுக்கு அறவே இருப்பது இல்லை. வயது வந்த நோயாளிகளுக்கு, தேவைப்படும் அளவுக்கு இன்சுலின் இருப்பதில்லை. இதன் விளைவு, உடலின் பல பாகங்களிலுள்ள பல்வேறு பிரிவுகளும் ஒழுங்காகச்செயல்பட முடியாமல் போய்விடுகிறது. இரத்தத்தில் சேரும் குளுகோஸும் 'செல்'களுக்குச் செல்ல முடிவதில்லை. இதனால் இரத்தத்திலுள்ள குளுகோஸ், அளவு கூடுதலாகிறது. உடலில் அதிக அளவிலுள்ள குளுகோஸ், சிறு நீரின் மூலம் வெளியேறுகிறது. நீரிழிவு நோய்க்கு உட்பட்டவர்கள் அதிகமான அளவு நீரையும் குடிப்பார்கள். அடிக்கடி சிறுநீரும் கழிப்பார்கள்.

இன்சுலின் இல்லாதவர்களுக்குத் தேவையான அளவு இன்சுலினை உடலில் ஏற்றுவதால் நோயைக் கட்டுப்படுத்த முடிகிறது. வயது வந்த பருமனான நீரிழிவு நோயாளிகளுக்குப் போதுமான இன்சுலின் அல்லது அதைவிட அதிகமான அளவு இருக்கிறது. இருந்தாலும் அதிகப் பசி எடுப்பதால் நிறையச் சாப்பிடுகிறார்கள். அதனால் இரத்தத்தில் நிறைய குளுகோஸ் கூடுதலாகிறது. உடலும் குண்டாகிறது. இதனால் இன்னொரு வகையான நீரிழிவு நோயாளிகள் உருவாகிறார்கள். இதன் விளைவு நீண்ட காலத்திற்குப் பிறகே தெரிகிறது. இரத்தத்துடன் தொடர்புடைய இருதயம், மூளை, சிறுநீரகம், கண்கள் ஏனைய உறுப்புகள் பாதிக்கப்படுகின்றன.

இதனால் மாரடைபபு, பார்வை இழந்து விடுதல் போன்ற நிலைமைகள் உருவாகின்றன. தொடக்க நிலையாக இருக்கும் பொழுதே நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தி விடலாம். ஆனால் முதிர்ந்த நிலையில் நீரிழிவு நோய் உடலுறுப்புகளுக்குப் பாதகத்தையே விளைவிக்கிறது.



இரத்தப் பரிசோதனை

தக்க தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் காலரா, மலேரியா போன்ற நோய்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றும் வளர்ச்சியடைந்த நாடுகளில் கூட வயதானவர்கள் நீரிழிவு நோய்க்கு ஆளாவது வாடிக்கையாக உள்ளது.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் நவீன காலத்து மனிதன் அதிக அளவு சாப்பிடுகிறான். உணர்ச்சி வயப்பட்ட நிலையில் படபடப்புடன் பணியாற்றுகிறான். ஓய்வு எடுத்துக்கொள்வதோ குறைவு. அதே சமயத்தில் அவனுடைய உடலுழைப்பு மிகவும் குறைவு. இதுவே நீரிழிவு நோயை அளிக்கிறது.

### நீரிழிவு நோய் வந்துள்ளது என்பதற்கான அறிகுறிகள் என்ன?

நீரிழிவு நோய் வந்தவர்களுக்கு அடிக்கடி நீர் பிரியும்.

இரவில் அதிகமாக நீர் போகும்.

அதிக தாகம், அதிகப் பசி எடுக்கும்.

நீரிழிவு நோய்க்கு அளிக்கப்படும் ஊசிமருந்தான இன்சுலினைக் கனடா நாட்டு அறிவியல் அறிஞர்களான டாக்டர் பாண்டிங்கும் டாக்டர் பெஸ்ட்டும் **(Dr. Banting and Dr. Best)** ஆகிய இருவரும் 1921-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்கள். இதற்காக இவர்களுக்கு நோபல் பரிசும் கிடைத்துள்ளது. இன்சுலின் கண்டுபிடிப்பதற்கு முன்னால் நீரிழிவு நோய்க்குக் காரணம், சிறுநீரகம், வயிறு அல்லது ஈரல் இவற்றில் ஏற்பட்ட கோளாறுதான் என்று கருதப்பட்டது. இன்சுலின் குறைவினால்தான் நீரிழிவு நோய் வருகிறது என்பதை முதன் முதலில் கண்டுபிடித்த டாக்டர் பாண்டிங்கும், டாக்டர் பெஸ்ட்டும் பணியாற்றிய சோதனைக் கூடம் கனடாவில் உள்ள டோரோன்டோ தொழில்நுட்ப அறிவியல் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்திய கலோரி மீட்டரும் அருங்காட்சியகத்தில உள்ளது.

## இந்தியாவில் நீரிழிவு நோயாளிகள்!

இந்தியாவிலுள்ள நகர்ப்புற மக்கள் தொகையில் மூன்று சதவீதத்தினர் நீரிழிவு நோயாளிகளாக உள்ளனர். கிராமப் பகுதி மக்களில் 0·5% மக்கள் நீரிழிவு நோயாளிகளாக உள்ளனர். கிராமப்புறப் பகுதி மக்களில் நீரிழிவு நோயாளிகள் குறைவாக இருக்கக் காரணம் நவீன முறையில் சுத்திகரிக்கப்படாத உணவு வகைகளை உட்கொள்வதாலும் கடுமையான உடல் உழைப்பாளிகளாக இருப்பதாலும் எதற்கும் அதிக அளவில் உணர்ச்சி வயப்பட்டுப் படபடப்புடன் பணியாற்றும் பழக்கம் குறைந்தவர்களாக இருப்பதாலும்தான்!

அயல்நாடுகளில் நீரிழிவு நோயாளிகளில் பாதிப்பேர் பெண்களாக உள்ளனர். ஆனல் நமது நாட்டில் நீரிழிவு நோயாளிகளில் மூன்றில் ஒரு பங்கினர்தான் பெண்கள்; அதாவது இரண்டு ஆண் நோயாளிகள் இருந்தால் ஒரு பெண் நோயாளி உள்ளார். இதற்குக் காரணம், பெண் நீரிழிவு நோயாளிகள் தாங்கள் நோயினல் துன்பப்படுவதை வெளிக் காட்டாமல் மறைத்துக் கொள்கினறனர். சமையல் வேலைகளினல் பெண்கள் ஆண்களைவிட உடலுழைப்பாளிகளாக உள்ளனர். மேலும், நம் நாட்டில் பெண்களைவிட ஆண்களே அதிகம் சாப்பிடுகின்றனர்.

பலகீனமாக இருக்கும்.

மயக்கம் ஏற்படும்.

பார்வையில் வித்தியாசம் ஏற்படும்.

கட்டி, சிரங்குகள் முதலிய தோல் வியாதிகள் தோன்றும்.

நமைச்சல், அரிப்பு முதலியன ஏற்படும்.

வாந்தி, வயிற்று வலி முதலியன ஏற்படும்.

கை, கால்கள் மரத்துப் போதல்.

இவை நீரிழிவு நோய்க்கு அடையாளங்களாகும்.

**நீரிழிவு நோய்க்குச் சிகிச்சைக்காக முதன் முதலில் வரும் நோயாளிகளுக்கு என்னென்ன பரிசோதனைகள் செய்யப்படுகின்றன?**

சிறுநீர்ப் பரிசோதனை, இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, ஈ.சி.ஜி. முதலியன எடுக்கப்படுகின்றன. இங்கு மூன்று நாட்களுக்குள் இவை அனைத்தும் செய்து முடிக்கப்படுகின்றன.

**என்னென்ன மருத்துவ உதவிகள் இங்கு அளிக்கப்படுகின்றன?**

ஒவ்வொரு புதிய நோயாளியையும் இங்கு தலைமை மருத்துவரே சோதனை செய்கிறார். முதலில் ஒவ்வொரு நோயாளியைப்பற்றிய எல்லா விவரங்களும் சேகரிக்கப்பட்டு, அவை விவரமாகப் பதிவு செய்யப்பட்டு அந்தந்த நோயாளியின் தேவைக்கு ஏற்ப மருந்து அளிக்கப்படுகிறது.

இன்சுலின், ஊசிபோடுதல், மாத்திரைவழங்குதல் முதலியவற்றுடன் நோயாளிகள் அடிக்கடி இம்மாதிரி பரிசோதனை செய்யப்படுகின்றனர்

நீரிழிவு நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும் ஏனைய நோயாளிகளுடன் சென்று மருந்துகளை வாங்கக் காத்திருக்க வேண்டும் என்பதால் நீரிழிவு நோய் சிகிச்சைப் பிரிவிலேயே திங்கள், வியாழன் ஆகிய நாட்களில் மருந்துகள் வழங்கப்படுகின்றன.


**நீரிழிவு நோய் ஒரு பரம்பரை நோயா? அதனல்தான் சிறுவர்களுக்கு அது வருகிறதா?**

அப்படிச் சொல்லிவிட முடியாது. தாயும் தந்தையும் நீரிழிவு நோயாளிகளாக இருந்தால் அவர்களில் ஐந்து சதவீதத்தினருக்கு நீரிழிவு நோய் வரலாம் என்று கூறப்படுகிறது. சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் வரக் காரணம், அவர்களுக்கு அறவே இன்சுலின் இல்லாததுதான். அதற்குக் காரணம் அவர்களுடைய சில சுரப்பிகள் வீக்கம் அடைந்து திசுக்கள் அழிக்கப்படுவதுதான். புரதச் சத்துக் குறைவினலும் இது ஏற்படுகிறது.

**சிறு வயதிலேயே நீரிழிவு நோய் வந்தவர்கள் நன்கு வேலை செய்ய முடியுமா?**

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்திக்கொண்ட எவரும் தாராளமாக வேலை செய்ய முடியும். இங்குச் சிகிச்சை பெற்றுக் கொண்ட பல சிறுவர்கள் வேலைகளில் இருக்கின்றனர்.

இன்சுலின் ஊசி போடுதல்



## நீரிழிவு நோயாளிகள் சரியான உணவு முறைகளைக் கடைப் பிடிப்பதில் வெற்றி காணச் சில அறிவுரைகள்:

* மிதமான உணவு கொள்வதில் வெற்றி காண மிக முக்கியமானது, மன உறுதியே.

* அனுமதிக்கப்பட்ட எல்லா உணவு வகைகளையும் ஒரு பெரிய தட்டு அல்லது இலையில் உணவு அருந்த ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒருங்கே வைத்துக் கொள்வது நல்லது. நாம் உட்கொள்ளும் உணவின் அளவு பற்றி நமக்கு மனத் திருப்தியை இது தரும். நாம் உணவு வேளையின்போது உள்ள பலவகை உணவுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக அருந்தும்போது உண்மையில் மொத்த அளவு எவ்வளவு உட்கொள்கிறோம் என்பதை நாம் அறிவதில்லை.

* எடை அதிகம் கொண்ட நீரிழிவு வியாதி கொண்டவர்கள் சுமார் 10லிருந்து 15 பவுண்டு வரை எடைக் குறைப்பு செய்வதால் கணிசமான அளவுக்கு நீரிழிவு நோயின் கடுமை குறையும். மேலும் அவர்களுடைய உடல் எடையை மிகச் சிறந்த நிலைக்குக் குறைத்துக் கொள்வது நல்லது.

* மதிய அல்லது இரவு உணவின்போது, காய்கறிகள், கீரை வகைகள் இதர குறைந்த கலோரி அளவு கொண்ட உணவு வகைகளை முதலில் உட்கொண்ட பிறகு தானிய வகைகளை உண்ணுவது மிகவும் நல்லது.

* இரு உணவு வேளைக்கு இடையில் பசியெடுத்தால் வெள்ளரிக் காய் போன்ற காய்கறிகள் அல்லது கொஞ்சம் பொரியையும் தண்ணீரையும் சாப்பிடலாம்.

* இனிப்புப் பண்டங்கள், பிஸ்கோத்துகள், சாக்லேட் முதலியவற்றை வீட்டில் அதிகம் வைக்க வேண்டாம்; உணவு வேளைக்கு இடையில் அவற்றை உண்ணும் அவா மேலிடும்!

* உலவுதல் போன்ற எளிய, வலுத்தருகின்ற உடற்பயிற்சி செய்வது மிகவும் அவசியமாகும்.

* அனுமதிக்கப்பட்ட காய்கறிகளை எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணலாம் : அவையாவன:

  சாம்பல் பூசணிக்காய், வாழைத் தண்டு, கத்தரிக்காய், வாழைப் பூ, காராமணி, பீன்சு, புடலங்காய், நூல்கோல், முட்டைக்கோசு, காலிஃப்ளவர், இளசான பீன்சு, வெண்டைக்காய், முருங்கைக்காய், பாகற்காய், கீரைகள்.

* கிழங்கு வகைகளை உட்கொள்ளக் கூடாது. உருளைக் கிழங்கு அறவே கூடாது. எந்த உருவிலும் சர்க்கரை கூடாது. இனிப்புக் கூடாது. ஐஸ் கிரீம் கூடாது. கேக் கூடாது. சர்க்கரைக்குப் பதிலாக ''சுக்ரைல்'' (ஆப்பட்) ''சிப் துளிகள்'', ஸ்வீடக்ஸ் துளிகள்'' அல்லது ''மாதுரின் துளிகள்'' உபயோகிக்கலாம்.



இன்சுலின் ஊசி போடுதல்

**பெண்களுக்கு வந்தால்?**

இங்குச் சிகிச்சை பெற்ற பல இளம் பெண்கள் திருமணமாகி குழந்தைகள் பெற்றுச் சுகமாக இருக்கிறார்கள். நீரிழிவு நோய் வந்தால் அஞ்சத் தேவையில்லை. ஆனால் நோயைக் கட்டுப்படுத்திக் கொண்டால் எல்லா வேலைகளையும் செய்யலாம்.

**சிறுவர்கள் இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டால் நாள் தோறும் போட்டுக் கொள்ள வேண்டுமா? மாத்திரை கொடுக்க முடியாதா?**

சிறுவர்களுக்கு முதலில் இன்சுலின் ஊசி போடுவதால் அவர்கள் எப்பொழுதும் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும். முப்பது வயதுக்குக் குறைவானவர்களுக்கு மாத்திரை கொடுக்க முடியாது.

**அரிசி உணவு அதிகமாகச் சாப்பிடுவதால் தான் நீரிழிவு நோய் வருகிறது என்று சொல்லலாமா?**

சொல்ல முடியாது. கோதுமை உணவு சாப்பிடுகிறவர்களுக்கும் நீரிழிவு நோய் வருகிறதே! மாவுப் பொருள் அதிகமாக உள்ள உணவுப் பொருட்களை உட்கொள்ளுவது விரும்பத்தக்க செயலல்ல!

**சென்னையில் அமைந்துள்ள நீரிழிவு நோய் ஆராய்ச்சிச் சிறு குழுவினால் விளைந்துள்ள நன்மைகள் என்ன?**

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அமைந்துள்ள நீரிழிவு நோய் ஆராய்ச்சிச் சிறுகுழு, இந் நோய் பற்றித் தெளிவான முடிவுகளைத் தெரிந்து கொள்ளப் பயன்படுகிறது. தமிழ் நாட்டில் நீரிழிவு நோய் பற்றி மருத்துவத் துறையில் ஆராய்ச்சிப் பட்டப் படிப்புப் படிப்பவர்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது. சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை மகளிர் கிருத்துவக் கல்லூரி மாணவ மாணவியர் இங்கு நடைபெறும் வகுப்புகளில் பங்கு பெறுகின்றனர்.

ராணி மேரிக் கல்லூரி, ஸ்டெல்லா மேரிக் கல்லூரி, எஸ்.ஐ.ஈ.டி. மகளிர் கல்லூரிகளில் மனையியல் படிக்கும் மாணவிகளுக்காகச் சத்துணவுகள் பற்றிய வகுப்புகள் மாதந்தோறும் இங்கு நடைபெறுகின்றன.

**நீரிழிவு நோய்க்கும் ஏனைய நோய்களுக்குமுள்ள வித்தியாசம் என்ன?**

காசநோய், புற்றுநோய், தொழு நோய் போன்ற வியாதிகளைக் குணமாக்கிவிட முடியும். நீரிழிவு நோய் அந்த நோய்களைப் போல ஆளைக் கொல்லுவதுமில்லை. உடலையும் விட்டுப் போவதுமில்லை. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்திக்

கொண்டவர்கள் எந்த வேலையையும் செய்யலாம். ஆனால் மற்ற நோய் வந்தவர்கள் அப்படிச் செய்ய முடியாது.

நீரிழிவு நோய் வந்து கட்டுப்படுத்திக் கொண்டவர்கள் பல்வேறு தொழிலையும் செய்து வருகிறார்கள்.

**நீரிழிவு நோயாளிகளுக்கு என்ன என்ன உதவி செய்ய வேண்டும்?**

என்னுடைய சொந்தக் கருத்து நீரிழிவு நோயாளிகள் அனைவருக்கும் அரசாங்கம் இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும். நீரிழிவு நோயாளிகள், தங்கள் நோயைக் கட்டுப்படுத்திக் கொண்டால் அவர்கள் அனைவரும் ஆயுள் முழுவதும் பயனுள்ள மனிதர்களாக நாட்டுக்கும் வீட்டுக்கும் உதவுபவர்களாகவே திகழ்வார்கள். எனவே, இந் நோய் வந்துள்ள அனைவருக்கும் இலவசச் சிகிச்சை அளிக்க வேண்டும்.

நீரிழிவு நோய்க்காகச் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களுக்கு—மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள சிறுவர்களுக்கு, அவர்கள் சிகிச்சை பெற்று வரும் மருத்துவமனையில் சுற்று வட்டாரத்திலேயே வேலைகள் கிடைத்தால் நலமாக இருக்கும். உதாரணமாக, தாம்பரத்தில் வேலை பார்த்துக் கொண்டு சென்னைக்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். அந்தச் சிறுவர்களுக்கு, பக்கத்திலேயே வேலை கிடைத்தால் பயனுடையதாக இருக்கும்.

**ஓராண்டில், அதாவது, 1977 ஆம் ஆண்டில் மட்டும் 1036 புதிய நீரிழிவு நோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு வந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். அந்தப் புதிய நோயாளிகள் தாங்களாகவே விவரம் தெரிந்து சிகிச்சை பெற்றுக் கொள்ள வருகிறார்களா?**

பல்வேறு நோய்களுக்காக வெவ்வேறு மருத்துவப் பகுதிகளுக்குச் செல்லும் நோயாளிகளை அந்தந்தப் பகுதி டாக்டர்கள், ஐயப்பட்டு நீரிழிவு நோயாளிகளாக இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் இங்கு அனுப்புகின்றனர். மத்திய அரசு சுகாதாரத் திட்டத்தைச் சேர்ந்த மருத்துவக் கூடங்கள் சென்னையில் வேப்பேரி, மயிலாப்பூர், நுங்கம்பாக்கம், பெரம்பூர் முதலிய பகுதிகளில் உள்ளன. அங்குள்ள டாக்டர்களும் நோயாளிகளை இங்கு அனுப்புகின்றனர். சிலர் விவரம் தெரிந்து சிகிச்சைக்காக வெளியூரிலிருந்தும் இங்கு வருகின்றனர்.

**நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்திக் கொள்ள என்னென்ன செய்ய வேண்டும்?**

*முதலில் உணவில் கட்டுப்பாடாக இருக்க வேண்டும்.

*நீரிழிவு நோய் வந்த ஒவ்வொரு ஆணும் நாள்தோறும் 4 மைல் நடக்க வேண்டும். பெண்கள் 3 மைல் நடக்க வேண்டும்.

*மருந்து சாப்பிட வேண்டும் என்றால் மருந்தும், இன்சுலின் ஊசி போட்டுக் கொள்ள வேண்டும் என்றால் இன்சுலினும் போட்டுக் கொள்ள வேண்டும்.

*மாதந்தோறும் உடலைப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு கட்டுப்பாட்டுடன் இருப்பவர்களுக்கும் உடல்நலத்துடன் இருக்கும் மற்றவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.



## நீரிழிவு நோய்க்கு அழைப்பு விடுப்பவர்கள்!

நகரத்திலே வாழும் வசதி படைத்தவர். நாற்பது வயதை நெருங்கிவிட்டவர். வசதியான வேலை உடையவர் அல்லது வெற்றிகரமான தொழிலதிபர். சொந்தத்தில் கார் உண்டு. வீட்டிலும் அலுவலகத்திலும் போன்கள் உண்டு. அலுவலக மாடி ஏறுவதற்கும் 'லிப்ட்'டைத்தான் பயன்படுத்துவார். வாரத்துக்கு நான்கு நாட்களுக்கு விருந்துக்கு அழைப்புக் கிடைக்கும். விருந்து கொடுப்பவர் அல்லது தன் மனைவி திருப்தி அடையும் வகையில் வயிறு நிறைய உண்பவர். ஒரு போதும் ஒரே சமயத்தில் அரை கிலோ மீட்டர் தொலைவுகூட நடக்காதவர். நிச்சயம் இவர் ஒரு நீரிழிவு நோயாளியாக இருப்பார்; இல்லாவிடில் எதிர்காலத்தில் நீரிழிவு நோயாளியாக மாறத் தயாராகிக் கொண்டிருப்பார்.

பெரும்பாலும் அந்தத் தகுதிகள் கொண்ட ஒருவருக்கு மனைவியாக வாய்த்தவர்-அவருக்குப் பிறக்கும் குழந்தையும் பத்து பவுண்டு அல்லது அதற்கு மேலே எடை உடையதாக உள்ளது. அவரும் அளவுக்கு மீறிய குண்டாக இருக்கிறார். விளைவு, எதிர்காலத்தில் நீரிழிவு நோயாளிகள் உருவாகிறார்கள்.



மிகச் சுருக்கமாகச் சொன்னால் அளவுக்கு மீறி உண்பது, உடலுழைப்புக் குறைவாக அமைவது எப்போதும் பரபரப்பான நிலையில் துடிப்புடன் இருப்பது முதலியன நீரிழிவு நோயை வலிந்து வரவழைத்துக் கொள்ளும் செயல்கள்!


**கற்க, நிற்க!**

நீரிழிவு நோயை மன உறுதியுடன்கட்டுப் படுத்திக் கொள்ளக் கற்றுக் கொண்டு அவ்வாறு நடந்து கொண்டால் எந்தவித அச்சமும் தேவையில்லை.

வேண்டும். நோயைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டுவிட்டால் எந்தவித அச்சமும் தேவையில்லை.

**அதே நேரத்தில் 'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை' என்பதை**

இந்த மருத்துவமனையில் 2 ஆண்டுகளாக இன்சுலின் போட்டுக்கொண்டு வருகிறான். வில்லிவாக்கத்திலிருந்து நாள் தோறும் வந்து இன்சுலின் போட்டுக் கொண்டு செல்லும் இந்தச் சிறுவன் அலுவலகப் பையனாக வேலையும் செய்கின்றான். இந்த மருத்துவ மனைக்கு வரமுடியாத நாளில் சொந்த முறையில் மருந்து வாங்கி ஊசி போட்டுக் கொள்ளும் இந்தச் சிறுவன், சைக்கிள் மிதிக்க முடியாமல் தடுமாறிய பொழுது மருத்துவச் சோதனைக்குச் சென்றான். அப்பொழுது தான் நீரிழிவு நோய்க்கு ஆளாகியிருப்பது தெரிந்தது. அது முதல், சிகிச்சை பெற்று வரும் இச் சிறுவன் வளரும் பருவத்தினன் என்றாலும் மருத்துவர் குறிப்பிட்டபடியே உணவு முறையில் கட்டுப்பாட்டுடன் இருக்கின்றான்.



**நோயாளிகள் சொல்வது என்ன?**

நில அளவை நில ஆவணத் துறை இயக்ககத்தில் துணை இயக்குநராக இருக்கும் திரு எஸ். மூகமது மூசா அவர்கள், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நீரிழிவு ஆராய்ச்சிச் சிறுகுழுவில் நீரிழிவு நோய்க்காகச் சிகிச்சை பெற்று வருபவர்களில் ஒருவர். அவர் இங்கு நீரிழிவு நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சை பற்றிக் கூறியதாவது :

இங்கு வரும் அனைவருக்கும் ஒரே மாதிரியாகவே சிகிச்சை அளிக்கப்படுகிறது. அலுவலகங்களுக்குச் செல்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு நோயாளியும் சிறப்பாகப் பரிசோதிக்கப்பட்டு இங்குச் சிகிச்சை பெறுகிறார்.

*1963-ஆம்* ஆண்டு முதல், நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்று வருகிறேன். நான் நாள்தோறும் மூன்று முதல் மூன்றரை மைல் வரை நடக்கிறேன்.

**நீரிழிவு நோயாளிகள் எவரும் தம்மை நீரிழிவு நோயாளி என்று சொல்லிக்கொள்ள வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. வெட்கப்பட வேண்டிய நோயுமில்லை இது.**

நீரிழிவு நோயாளி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. உணவில் கட்டுப்பாடுடன் இருந்து கொண்டால் போதும். நீரிழிவு நோய் வந்தவர்கள் இந்நோயைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள

**நன்கு உணர்ந்து உணவு முறையில் கண்டிப்புடன், கட்டுப்பாடாக நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு கட்டுப்படுத்திக் கொண்டு வாழா விட்டால் ஆபத்தைச் சந்திக்க நேரிடும்.**

நீரிழிவு நோயாளிகளுக்கு 350 விதமான நோய்கள் வர வாய்ப்புகள் சுலபமாக உள்ளன என்று கூறுகிறார்கள். எனவே நீரிழிவு நோயாளிகள் உணவுக் கட்டுப்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும்.





**16 வயது எஸ். ஜெகதீசன் :**

பதினாறு வயதான எஸ். ஜெகதீசன்,

கீழ்ப்பாக்கம் நீரிழிவு நோய் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வரும் சிறுவன்.

**12 வயதான லட்சுமி :**

பல்லாவரத்திலிருந்து நாள் தோறும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு வந்து ஊசி போட்டுக் கொண்டு செல்லும் பன்னிரண்டு வயதான லட்சுமி 1972-ஆம் ஆண்டு முதல் இங்குச் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்.

இச் சிறுமிக்கு நினைவிழந்த நிலை ஏற்பட்ட பொழுதுதான் நீரிழிவு நோய்க்கு அவள் ஆளாகியிருப்பது தெரிந்தது. அது முதல், சிகிச்சை பெற்று வரும் இந்தச் சிறுமியும் உணவு முறையில் கட்டுப்பாட்டுடன் இருந்து வருகிறார்.

**இளம் வயதிலிருந்து இன்சுலின் போட்டுக் கொள்பவர்கள் வாழ்க்கை முழுவதும் போட்டுக்கொள்ள வேண்டும். இதனால் இவர்களுடைய எதிர்கால வாழ்க்கையில் எந்தவிதப்பாதிப்புமில்லை. ஆனால், உணவு விஷயத்தில் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்.**

—மாமூலன்




# தேசிய வளர்ச்சிப் பத்திரங்களில்

## மக்கள் மேலும் மேலும் அதிகமாக முதலீடு செய்ய முன்வருகின்றனர்

ரூ. 100 5 ஆண்டுகளில் ரூ. 165 ஆக வளருகிறது

ஏன் தெரியுமா? இது அரசு பாதுகாப்புப் பெற்ற முதல்தரமான சேமிப்புப் பத்திரம். சிறு சிறு சேமிப்பு மூலம் சேர்ந்த பணத்தை மொத்தமாக முதலீடு செய்ய இது வசதி செய்கின்றது—போனஸ், கிராஜுயுட்டி, காலாவதியான ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசி திரும்பப் பெறும் தொகை, சம்பள பாக்கித் தொகை போன்றவைகளை முதலீடு செய்யலாம்.

சுலபமான நடைமுறை, நல்ல வருமானம்—வருடம் 13 சதவிகிதம் (சாதா வட்டி) இதர அனுகூலங்கள் இந்தத் திட்டத்துக்கு கவர்ச்சி யூட்டுகிறது. சேமிப்போருக்கு நல்ல வருமானமுண்டு. நீங்களும் இந்த வசதிகளைப் பெறலாம்

**யார் யார் வாங்கலாம்?**

யார் வேண்டுமானாலும்—ஆண், பெண், மாணவர்கள், தொழிலாளி, ஓய்வூதியம் பெறுவோர், விவசாயி, சுயமாகத் தொழில் செய்வோர். வயது வரம்பில்லை. தனியாகவும் கூட்டு கணக்கிலும் வாங்கலாம்.

**எவ்வளவுக்கு?**

உச்சவரம்பு இல்லை. மூன்று தொகைகளுக்கு—ரூ. 10, ரூ. 100, ரூ. 500க்கு கிடைக்கின்றன.

**என்ன செய்வது?**

பத்திரம் வழங்கும் அலுவலகத்துக்குப் போய், நிர்ணயிக்கப்பட்ட பாரத்தை பூர்த்தி செய்து பணத்தை செலுத்தவும். உங்கள் கையில் உடனே பத்திரம் கொடுக்கப்படுகிறது.

**வரிச் சலுகைகள்**

ரூ. 3000 வரை வட்டிக்கு (இதர அங்கீகாரம் பெற்ற சேமிப்பு களில் கிடைக்கும் வட்டியையும் சேர்த்து) வருமான வரி விலக்குண்டு. காலாவதியில் கிடைக்கும் மொத்த தொகை யில் வரி பிடித்தமிருக்காது. வருமான வரிக்கு வசதியாக இருக்கும் வகையில் வருடா வருடம் வட்டி கணக்கிடப்படுகிறது.

**எங்கு வாங்குவது?**

நாடெங்குமுள்ள தபாலாபீஸ்களிலும் அரசுடமையான வங்கி களிலும் வாங்கலாம். இவற்றின் கிளைகள் எல்லாப் பகுதிகளிலும் இருக்கின்றன.


**இதர வசதிகள்**

நாமினேஷன் செய்யலாம். ஒரு தபாலாபீஸ் பேங்க் கிளை யிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிக் கொள்ளலாம்.

**உங்கள் பணம் வேகமாக வளரட்டும் தேசிய வளர்ச்சிப் பத்திரங்களை வாங்குங்கள்**

**தேசிய சேமிப்பு நிறுவனம்**
மத்திய நிதி அமைச்சகம்.

davp 77/455





# வளர்ச்சியும் தேவையும்

**மாண்புமிகு**
**உள்ளாட்சித்துறை அமைச்சர்**
**திரு. கா. காளிமுத்து**

‘வளர்ச்சி’ என்பது ‘இன்னது தான்’ என்று ஒன்றைச் சுட்டிக் காட்டி வரையறுக்க முடியாது. அது முக்காலத்திற்கும் பொருந்துகின்ற கூற்று. நேற்று நாம் அடைந்த ‘வளர்ச்சி’ இன்றையத் தேவையின் முன்னே தளர்ச்சியுடன் நிற்கிறது. ஏனெனில் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க மனிதனின் தேவையும் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஆகவே, வளர்ச்சியும் தேவையும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு செல்லும் பந்தயக் குதிரைகளாகவே அமைந்துள்ளன. எனினும்...

தேவை என்னும் நிலத்தில் திட்டங்கள் என்னும் விதைகளை ஊன்றி, ‘வளர்ச்சி’ என்னும் பயிர்களை வாடாமல் வளர்த்து, எங்கும் என்றும் பசுமையைத் தோற்றுவிக்கும் பணி, ஆளுகின்ற அரசின் கடமை என்பதைத் தமிழக அரசு எப்போதும் மறக்காது என்பதைக் கூற விழைகின்றேன்.

ஒரு தனி மனிதனின்—அத்தனி மனிதன் சார்ந்த சமுதாயத்தின்—வளர்ச்சி பல கிளைகளையுடையது. பலதரப்பட்டது. அத்தகைய பலதரப்பட்ட வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு, இன்று, ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஒரு மனிதனின் உடல்நிலையை அவன் நாடியைப் பிடித்துப் பார்த்துக் கணிப்பதுபோல், ஒரு நாட்டின் வளர்ச்சியை அந்த நாட்டுக் கிராமங்கள் பெற்ற வளர்ச்சியைக் கொண்டுதான் கணிக்க முடியும். எனவேதான் அண்ணல் காந்தியடிகள் சிற்றூர்களைத்தான் இந்தியாவின் உயிர்நாடி என்று குறிப்பிட்டார். அண்ணலின் அந்தப் பொன்மொழியைக் கருத்தில் கொண்டுதான் ‘சமுதாய வளர்ச்சித் திட்டம்’ தொடங்கப்பட்டது. அதற்கிணங்க, சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு ஊராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டு, தமிழகத்தில் இன்று 12,627 ஊராட்சிகளும், 589 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும் இயங்கி வருகின்றன. இந்நிறுவனங்களின் வளர்ச்சியிலும், செயல் முறையிலும் ஆலோசனைகள் வழங்குவதற்காக கிராம அளவில் ஊராட்சி மன்றமும், வட்டார அளவில் ஊராட்சி ஒன்றியக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட வளர்ச்சி மன்றமும் செயலாற்றுகின்றன. மாநில அளவில் மாநில அரசும் சட்டமன்றமும்—நாட்டளவில் இந்திய அரசும் நாடாளுமன்றமும் செயலாற்றி வருவதைக் குறிப்பிட்டுக் கூறத் தேவையில்லை.

இந்த ஆண்டில் மட்டும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கெனத் தமிழ்நாடு அரசு ரூ. 132.55 கோடியை ஒதுக்கியுள்ளது. இன்றைய ‘வளரும் தமிழகத்’தைப் பொறுத்தவரை, முதன் முதலில் மக்கள் தம் அடிப்படைத் தேவைகளான குடிநீர், சாலைப் போக்குவரத்து, கல்வி போன்ற வசதிகளில் நிறைவு காண, இன்றைய அரசு அதிக அக்கறை கொண்டு, முனைப்புடன் செயலாற்றி வருகிறது. நல்ல குடிநீருக்குக் கூட, குறையுள்ள ஊர்கள் இருக்கத்தான் செய்கின்றன. குடிநீர் வசதி இல்லாத ஊர்களே இல்லை என்ற நிலையை முதலில் உருவாக்கிட இந்த அரசு செயலில் இறங்கி விட்டது. ஐந்து கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 4010 கிராமங்களுக்குக் குடிநீர் அளிக்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வளரும் தமிழகத்தின் நலனில் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் காட்டிய-காட்டுகின்ற காட்டப் போகின்ற அக்கறை குறிப்பிடத் தக்கது. வளர்ச்சிப் பணிகளை மட்டுமின்றி உற்பத்திப் பணிகளையும் நிறைவேற்றும் இந்நிறுவனங்கள் அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படுகின்ற புதிய திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பையும் ஏற்றுச் செயல்படுகின்றன.

இயற்கை அளிக்கும் மழை, நல்ல வளமிக்க மண்-இவைகள் இல்லாத பகுதிகளைக் கூட முன்னேறச் செய்யும் முயற்சி தற்பொழுது நிறைவேற்றப்படவிருக்கிறது. அதன் முன்னோடிதான் ‘கிராம முழு வளர்ச்சித் திட்டம்’. நெல்லை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய சின்ன கோவிலான்குளம், நடுவக் குறிச்சி, பட்டைக்கட்டி ஆகிய கிராமங்களில் இத்திட்டம் செயலாக்கப்பட்டு வருகின்றது. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணி, வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, சிறுதொழில் வளர்ச்சி ஆகிய பணிகளுக்காக-இதுவரை ரூ. 4.96 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தர இருக்கின்ற வெற்றி, இது போன்ற பிற பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக அமையும்.

அறிவியலின் ஆற்றலை கிராம மக்கள் புரிந்து கொள்வது மட்டுமின்றி, வரவேற்கவும் தொடங்கி இருப்பது வளரும் தமிழகத்தின் செழுமையான நிலை. சாண எரிவாயுத் திட்டத்தினை நிறைவேற்றும் பணி-கிராம மக்களின் ஒத்துழைப்பால் குறுகிய காலத்துள் நிறைவு பெற்றுவிட்டது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இனி வரும் ஆண்டில் மேலும் 2,100 சாண எரிவாயு

**வளரும் தமிழகம்**

முறையை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

'வளரும் தமிழகத்தில்' மக்களின் நல்வாழ்வு சிறப்பிடம் வகிக்கிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், தாய்சேய் நல விடுதிகள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் நன்முறையில்—மக்களின் நல்வாழ்வில் நாட்டம் கொண்டு பணியாற்றி வருகின்றன. குடும்ப நலத் திட்டத்தில் இந்த நிறுவனங்கள் ஆற்றிய பங்கு குறிப்பிடத்தக்கது.

கிராம மகளிரின் வாழ்வை மேம்படுத்தும் திட்டங்கள்—நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. இன்று ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் செயலாற்றி வருகின்றன. தமிழக ஊர்ப்புறங்களில் 12,354 மன்றங்கள் மகளிரின் நல்வாழ்விலே நாட்டங்கொண்டு கிராமப் பெண்களுக்கு, தையல் வேலைகள், எழுத்தறிவித்தல், கோழி வளர்த்தல் போன்றவற்றில் பயிற்சி அளிக்கின்றன.

நாட்டு நடப்புகளையும் அரசின் திட்டங்களையும் மற்றும் வேளாண்மை விளக்கங்களையும் கிராம மக்கள் பெறுவதற்காக அனைத்து ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டு விட்டது. இன்று தமிழகத்தின் ஊராட்சிகளில் ஏறத்தாழ 47,000 வானொலிப் பெட்டிகள் சமுதாயத்தின் தேவையைத் தீர்த்துக்கொண்டிருக்கின்றன. மேலும், வசதி உள்ளவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்த தொலைக்காட்சியின் பயன், வசதியற்ற கிராம மக்களுக்கும் கிடைக்கச் செய்வதில் இந்த அரசு தீவிர அக்கறை கொண்டுள்ளது. அதன் விளைவாக, இன்று தமிழகத்தின் பல்வேறு கிராமங்களில் 125 சமுதாய தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் 195 தொலைக்காட்சிப் பெட்டிகள் நிறுவப்பட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தமிழகத்தின் வளர்ச்சி அரசுத் திட்டங்களில் மட்டுமின்றி—மக்களின் ஒத்துழைப்பிலும் அடங்கும். தமிழ்நாட்டைச் சார்ந்த ஊர்நல அலுவலர் ஒருவர் **அனைத்திந்திய அளவில் தலை சிறந்தவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் செய்தியும், தமிழகத்தில்** கோவை மாவட்ட தொட்டிப்பாளையம் ஊராட்சி இந்தியாவிலேயே சிறந்த சிற்றூராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் செய்தியும், வளரும் தமிழகத்தில் சிறந்த அறிகுறிகள், அடையாளங்கள் — எடுத்துக் காட்டுகள்.

தமிழகத்தின் நிலையை இன்னும் மேம்படுத்த இந்த அரசு அறிவித்த முடிவுகளுள் ஒன்று தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் நேரடித் தேர்தல் முறை. இந்த நேரடித் தேர்தல் முறை மக்களாட்சியின் உண்மைப் பொருளை உணர்த்துவதாக அமையும். இதுகாறும் நடைபெற்ற தேர்தல் முறையில் ஊராட்சிகளின் வாக்காளர்கள் ஒன்றிய மற்றும் மாவட்டப் பதவிகளில் இருப்போரைக் கட்டுப்படுத்த இயலாமல் போயினர். மேலும் ஒன்றிய மாவட்ட மட்டங்களில் திறமையும் தொண்டார்வமும் மிக்க தலைவர்கள் அத்தகு மன்றங்களில் பொறுப்பேற்க முடியாதவர்களாக்கப்பட்டு இருந்தனர். நேரடித் தேர்தல் மூலம் இந்த இரு குறைகளும் களையப்பட்டு விட்டன. மேலும் ஒருவரே பல பதவிகளை வகிக்கும் முறையும் தடுக்கப்பட்டு விட்டதால், இனி வரும் காலங்களில் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் முன்னைக் காட்டிலும், சிறப்பு மிக்க, திறமைமிக்க குடியரசு நிறுவனங்களாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

கைச் செம்பில் கடல் நீரை முகந்து தருவதுபோல், வளரும் தமிழகத்தின் நிலை பற்றிய சிறிய விளக்கத்தை மட்டுமே இப்போது நான் தந்துள்ளேன். அதுவே தமிழகத்தின் ஒளிமிக்க எதிர்காலத்தை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ளப் போதுமானது என்று கருதுகிறேன்.

நன்றி. வணக்கம்.

[நன்றி: வானொலி]

## ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளில் மக்கள் குழுக்கள்......

வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்கும் ஏனைய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மக்கள் குழு அமைக்கப்பட வேண்டுமெனத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழுவில் தலைவர் உட்பட 12 உறுப்பினர்களுக்கு மேற்படாத அளவினர் இடம் பெறுவர். கோட்ட வளர்ச்சி அலுவலர் இக்குழுவின் தலைவராவார். கோட்டாட்சித் தலைவர் இக்குழு உறுப்பினர்களில் ஒருவராக இருப்பார். அப்பகுதியைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் இக்குழு உறுப்பினர்களாக நியமனம் செய்யப் படுவர். இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் அந்தந்த ஒன்றியத்தைச் சேர்ந்தவர்களாய், பொதுவாழ்வில் நற்பணி புரிந்தவர்களாயிருக்க வேண்டும். அவர்கள் மீது புகார்களேனும் குற்றச்சாட்டுகளேனும் முன்னம் ஏற்பட்டிருக்கவும் கூடாது; அல்லது இப்போது எழுப்பப் பட்டு விசாரணையில் இருக்கவும் கூடாது.

இதைப் போலவே, ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் குழு அமைக்கப்படும். இக்குழுவின் தலைவர் உட்பட, ஏழு உறுப்பினர்களுக்கு மேற்படாமல் இருப்பர். இக்குழுவின் தலைவர் அரசு அலுவல் சார்பற்ற ஒருவராக இருக்க வேண்டும். மேலும், அவர் நேர்மையானவராகவும், பொதுவாழ்வில் சிறந்த தொண்டு ஆற்றியுள்ள அந்த ஊராட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். தேவையானல், கிராம அதிகாரி, குழுவின் ஓர் உறுப்பினராக இருக்கலாம். இக்குழுவின் ஏனைய உறுப்பினர் அந்த ஊராட்சியைச் சேர்ந்தவர்களாயும் பொதுவாழ்வில் நற்பணி புரிந்தவர்களாயும் இருக்க வேண்டும். அவர்கள்மீது புகார்களேனும் குற்றச்சாட்டுகளேனும் முன்னர் ஏற்பட்டிருக்கவும் கூடாது; அல்லது இப்போது எழுப்பப்பட்டு விசாரணையில் இருக்கவும் கூடாது.

உள்ளூர் நிலைமைகளை அனுசரித்து, அவசியமானல் ஊராட்சித் தலைவரையும் அதன் உறுப்பினர்கள் சிலரையும் மக்கள் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கலாம். இக்குழுக்கள் மாதத்திற்கொருமுறை கூட்டம் நடத்தும்.

# சீரான வாழ்வுக்குச் சேமிப்பு



எறும்பு சேர்க்கிறது, எதிர் காலத்துக்காக!

ஆனால், நாம் சேமிக்கிறோமா, நலமுடன் வாழ?

இந்த வினாவை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வருமானத்துக்கு ஏற்ப வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் வறுமையை விரட்டலாம், சீரான வாழ்க்கைக்குச் சிக்கனமாய் இருந்தால் பெருமையைச் சேர்க்கலாம்.

எளிய வாழ்க்கையே ஏற்றந் தரும் என்பதை நாம் நன்கு உணர்ந்திட வேண்டும். அக்கம் பக்கத்தாரைப் பார்த்து ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டால், இருப்பதையும் இழந்து இழிநிலைக்குத்தான் வர நேரிடும்!

சேமிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்தோ என்னவோ திருவள்ளுவர்,

''வருமுன்னர்க் காவாதான்
வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்''

என்று அழகாகக் கூறுகிறார்.

'வருவதற்கு முன்பே அதை வராமல் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை, நெருப்பின் முன்னுள்ள வைக்கோற்போர் போல அழியும்' என்பதை அவர் நமக்கு உணர்த்துகிறார்.

ஆகவே, இதற்கெல்லாம் விடையாகக் கிடைப்பது சேமிப்புதான் என்பதை நாம் தெளிவாக உணரலாம்.

சேமிப்பு என்றால் என்ன? சேமிப்பதால் என்ன நன்மை? என்பன போன்றவற்றையெல்லாம் சற்றுத் தெரிந்து கொள்வோமா?

**சேமிப்பு என்றால் என்ன?**

''வைப்பு'' என்றால் முதலீடு. ''சேம வைப்பு'' சேமிப்பு ஆகும். அதாவது நமது நலத்திற்கு முதலீடு செய்து வைப்பது என்பதாகும். ஆங்கிலத்தில்கூட சேமிப்பை Savings என்று கூறுகிறார்கள். Save என்றால் காத்தல் அல்லது மீட்டல் என பொருள். நம்மை எதிர்காலத் தேவைகளிலிருந்து, எதிர்பாராத இன்னல்களிலிருந்து காப்பதே சேமிப்பாகும். இதனுடைய பெயரிலிருந்தே சேமிப்பின் முக்கியத்துவத்தை அறியலாம்.

கட்டை வண்டிக்காலம் மாறி ''கார்'' காலம் ஆவதைப்போல், அரிசிப் பானையில் சேர்த்த காலம் மாறி, அரசு வங்கிகளில் சேர்க்கும் காலம் உருவாகியிருக்கிறது. வசதி படைத்தவர்களுக்கே வங்கி வசதி என்ற காலம் மாறி, பாமரர்களும் இன்று வங்கிக்கு வருகிறார்கள். இந்தியாவில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும், கூட்டுறவு வங்கிகளும் மக்களது சேமிப்பைப் பெருக்க மகத்தான சேவை செய்து வருகின்றன. இதில் அஞ்சலக வங்கி தன்னேரில்லாத தனியிடத்தைப் பெற்றுள்ளது.

**கூரான வாள்!**

அஞ்சலக வங்கி, அரசாங்க வங்கி பெருநகர்களில் மட்டுமல்லாமல், குக்கிராமங்களிலும் இருக்கும் வங்கி, ஏழை எளிய மக்கள் எளிதாகத் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய வங்கி ஆகும். இதில் அனைவரது தேவைகளுக்கும் ஏற்ப அற்புதமான சேமிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஆலை அதிபர், அரசு ஊழியர், நகர மக்கள், கிராம மக்கள், வியாபாரி, விவசாயி ஆகியோரது தேவைகளுக்கு ஏற்ப திட்டங்கள் இருக்கின்றன. உங்கள் பணத்திற்குப் பாதுகாப்பும் பாங்கான வட்டியும் கிடைக்கிறது. அது மட்டுமல்லாமல் உங்கள் பணம் அரசின் மக்கள் நலத்திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது. நீங்கள் அஞ்சலகத்தின் மூலம் சேமிக்கும் பணத்தில் மூன்றில் இரண்டு பங்கு நமது மாநிலத்திற்கே கடனாக வழங்கப்படுகிறது. இருபக்கமும் கூருடைய வாள்போல உங்கள் அஞ்சலகச் சேமிப்பு பயன் தருகிறது. காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை எந்த ஊருக்கும் உங்கள் சேமிப்புக் கணக்கை மாற்றிக் கொள்ளலாம். இன்று அஞ்சலகம் இல்லாத ஊரே இந்தியாவில் இல்லை எனக் கூறலாம்.

**கால வைப்புக் கணக்கு:**

உங்கள் கையில் கணிசமான தொகை இருந்து அதைக் குறிப்பிட்ட காலத்திற்குச் சேர்த்து வைக்க விரும்பினால், அஞ்சலக வங்கியின் கால வைப்புக் கணக்கில் (Cumulative Time Deposit) முதலீடு செய்யலாம். 8 சதம் முதல் 10 சதம் வரை நீங்கள் முதலீடு செய்யும் கால அளவைப் பொறுத்து வட்டி கிடைக்கும். வட்டி ஆண்டுக்கு ஒருமுறை அளிக்கப்படும். வட்டியையும் முதலுடன் ஒட்டு மொத்தமாகப் பெற விரும்பினால் 7 ஆண்டு தேசிய சேமிப்புப் பத்திரம் 5ஆம் வெளியீட்டை வாங்கலாம். இதில் உதாரணமாக, ரூ. 100 முதலீடு செய்தால் 7 ஆண்டு இறுதியில் அது ரூ. 200 ஆகக் கிடைக்கும்.

இதில் எவ்வளவு வேண்டுமானுலும் முதலீடு செய்யலாம். இதற்கு வரையறை இல்லை.

**வரப்பிரசாதம் :**

ஓய்வுக்கால ஊதியம் போல உதவும் ஒரு திட்டமும் அஞ்சலகத்தில் உண்டு. இது "National Savings Annunity Certificates" என்பதாகும். இதில் உதாரணமாக ரூ. 32,000 செலுத்தினுல் 3 ஆண்டுகளுக்குப் பிறகு 84 மாதங்களுக்கு ரூ. 50 உங்களுக்குக் கிடைக்கும். அது மட்டுமல்லாமல் 84-வது மாத முடிவில் ஒரு கணிசமான தொகையான ரூ. 2,240 உங்களுக்குத் தரப்படும். விரைவில் வேலையிலிருந்து ஓய்வு பெறக் கூடியவர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப் பிரசாதமாகும்.

**சம்பளச் சேமிப்புத் திட்டம் :**

அலுவலில் இருப்பவர்கள் மாதாமாதம் ஒரு சிறு தொகையைச் சேர்த்து வைக்க உதவும் திட்டம், சம்பளச் சேமிப்புத் திட்டமாகும். இத்திட்டத்தில், நீங்கள் விரும்பிய தொகையைச் சம்பளத்திலேயே பிடிக்கச் சொல்லி விடலாம். அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் யாவற்றிலும் இது அமல் செய்யப்பட்டுள்ளது. இதில் 5 ஆண்டுத் தொடர் வைப்புத் தொகைத் திட்டம் 9.25 சதவிகிதம் வட்டி அளிக்கிறது. மாதந்தோறும் ரூ. 10 முதலீடு செய்தால் உங்களுக்கு 5 ஆண்டு இறுதியில் ரூ. 760 கிடைக்கும். ரூ. 5-ம் மற்றும் அதன் பெருக்குத் தொகைகளிலும் இத்திட்டத்தில் சேரலாம். கணக்கின் நடுவில் கட்டிய பணத்தில் பாதித் தொகையைக் கடனுகவும் பெறலாம். கடனுகப் பெற்ற தொகையைத் திருப்பிக் கட்ட வேண்டும் என்று அவசியமில்லை. ரூ. 20 வரை இக்கணக்கில் சேருபவர்களுக்கு ஆயுள் பாதுகாப்பும் சலுகையும் இதில் உண்டு. கணக்கில் பணம் கட்டி வரும்பொழுது இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு உயிருக்கு ஏதும் தீங்கு நேரின், 5 ஆண்டு முடிவில் என்னதொகை கிடைக்குமோ அந்தத்தொகையை உடனடியாக அவரது வாரிசுக்குத் தரப்படுகிறது. வருமான வரி கட்டுகிறவர்கள் 10 ஆண்டு "Cumulative Time Deposit" கணக்கில் சேர்ந்தால், கணக்கில் கட்டும் தொகைக்குக் கணிசமாக வருமான வரிச் சலுகையும் கிடைக்கும்.

**சேம வைப்பு நிதித்திட்டம் :**

15 ஆண்டு பொதுமக்கள் சேம வைப்பு நிதித்திட்டத்தில் சேம

## நிலவரி தள்ளுபடி மற்றும்

## அரசு கடன் குறித்த மனுக்கள்

## சமர்ப்பிக்கும் முறைகள் !

கடந்த ஆண்டு அக்டோபர்-நவம்பரில் ஏற்பட்ட புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிர்களின் விளைச்சல் 25 சதவீதத்திற்கும், அதற்குக் குறைவாகவும் மதிப்பிடப்பட்டிருந்தால், 1387-ம் பசலிக்குரிய நிலவரி, தண்ணீர் மேல் வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல் வரி, சிறப்பு நன்செய்த் தீர்வை, சிறப்பு தண்ணீர் மேல் வரி, பணப் பயிர்களுக்குண்டான வரி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி, தண்ணீர் மேல் வரி, உள்ளூர் மேல் வரி, கூடுதல் நன்செய்த் தீர்வை, கூடுதல் தண்ணீர் மேல் வரி ஆகியவற்றிற்கான பழைய பாக்கிகளை 1387-ம் பசலியில் வசூலிப்பதை 1388-ம் பசலிக்கு ஒத்தி வைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

எங்கெங்கு நிலவரி தள்ளுபடி செய்து அல்லது நிலவரி வசூல் ஒத்தி வைத்து ஆணையிடப்பட்டுள்ளதோ, அங்கெல்லாம் உள்ளூர் மேல் வரி சர்சார்ஜ் நடைமுதல் தொகையைத் தள்ளுபடி செய்யவும் பழைய பாக்கிகளை ஒத்திவைக்குமாறும் அந்தப் பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

எங்கு நிலவரியும், உள்ளூர் மேல் வரியும் தள்ளி வைத்து அரசு ஆணையிடப்பட்டுள்ளதோ, அப்பகுதியில் 1378-ம் பசலிக்கு வசூல் செய்யக் கூடிய பாக்கி, நடப்பு தக்காவி கடன்கள் வசூலை 1388-ம் பசலிக்கு ஒத்து வைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட குடிசை ஒன்றுக்கு ரூ. 200/- மானியமாக கொடுக்கப்பட்டதைத் தவிர, வீடுகள் கட்டிக் கொள்ள எவ்வித கடனும் வழங்க இதுவரை உத்தரவிடவில்லை. அரசாணைகளின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள அரசு கடன்களுக்குரிய மனுக்களுக்கான படிவங்களை அதற்குரிய அதிகாரிகளின் மூலமே பெற்றுக்கொள்ளவேண்டும். தனிப்பட்ட நபர்கள் எவரும் கடனுக்குரிய மனுக்களின் படிவங்களை அச்சடித்து விற்க அனுமதிக்கப்படவில்லை.

வைப்பு வசதிகள் இல்லாதவர்கள் சேர்ந்து பயன் பெறலாம். இதில் ரூ. 5ம் மற்றும் அதன் பெருக்குத் தொகைகளில் உங்கள் வசதிக்கேற்ப பணம் கட்டலாம். ஓர் ஆண்டிற்குக் குறைந்த பட்சம் ரூ. 100 அதிக பட்சம் ரூ. 20,000 வரை கட்டலாம். வட்டி 7.5 சதவீதம் கூட்டு வட்டி ஆண்டுக்கு 12 முதலீடுகள் மட்டுமே செய்யலாம்.

**சேமிக்க வாரீர் :**

மேற்கூறிய திட்டங்கள் எதிலும் சேர இயலாதவர்கள் குறைந்த பட்சம் வெறும் சேமிப்புக் கணக்காவது அஞ்சலகத்தில் தொடங்கலாம். 5 சதவீதம் வட்டி கிடைக்கும். ஒருவர் ரூ. 25,000 வரை பணம் எவ்வளவு வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும் போடலாம், எடுக்கலாம். ரூ.200 குறைந்தபட்ச தொகையாகச் சேமிப்புக் கணக்கில் வைத்திருப்பவர்களுக்கு ஆண்டுக்கு இரு முறை அதிர்ஷ்டக் குலுக்கலும் நடத்தப்படுகிறது.

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20.5 இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட 11,116 பரிசுகள் உண்டு.

| | | ரூபாய் |
|---|---|---|
| முதல் பரிசு (ஒரு இலட்சம்) ஒன்று | ... | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலகச் சேமிப்புக் கணக்கில் ரூ. 200-க்குக் குறையாமல் இருந்தால், உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200-க்குக் குறையாமல் வைத்திருந்தால், இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத்தொகைக்கு 5 சதவீதம் வட்டி, பரிசு பெற்றவர்களுக்கும் பெறுதவர்களுக்கும் அளிக்கப்படும்.

சேமிப்பதன் மூலம் நாம் சேமமுற வாழ்வோம்; அதுமட்டுமல்ல, நாட்டிற்கும் வீட்டிற்கும் நம்மால் இயன்ற வரை உதவுகிறோம் என்று பெருமிதத்தோடு சொல்லலாம் அல்லவா?




# மீனவர்கள் நலன் நிவாரண நிதி குழு அமைப்பு

மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளபோது இறந்து போகும் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களின் குடும்பங்களுக்கு இது வரை வழங்கப்படும் நிவாரண நிதி ரூ. 1,000 என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தித் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. முதல் அமைச்சரின் நிதிநிலை உரையில் இது அறிவிக்கப்பட்ட நாளான 25-7-1977 முதல் இந்த ஆணை அமல்படுத்தப்படும்.

மீன்பிடிக்கையில் இறந்து போகும் மீனவர்களின் (விதவை) மனைவியர், குழந்தைகள் ஆகியோரின் சுயசார்புள்ள புனர்வாழ்வுக்காக மேற்சொன்ன தொகையோடு ரூ. 5,000 கூடுதல் உதவித் தொகையையும், வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதற்காக வனம் மற்றும் மீன்துறைச் செயலாளர் நிதித்துறைச் செயலாளர், மீன்துறை இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்ட ''மீனவர்கள் நலன் மற்றும் நிவாரண நிதிக்குழு'' ஒன்றினைக் கீழ்க்கண்ட நோக்கங்களுக்காக அரசு அமைத்துள்ளது.

மீன்பிடிக்கும்போது இறந்துவிட்ட மீனவர்களையே முற்றிலும் சார்ந்து வாழும் அவர்தம் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல்.

மீன்பிடிக்கையில் இறந்துபோன மீனவர்களின் குழந்தைகளுக்கு நிதியுதவி அளித்தல். மீன் தொழில் பணிமேற்கொள்ளும் வகையில் மீன்வள அறிவியல்—தொழிலியல் கல்வி பயில அவர்களுக்கு முழுக் கல்விக் கட்டணமும் உதவிச் சம்பளமும் அளித்தல் (வேறெந்தத் திட்டங்களின் கீழ் பெறப்படும் இத்தகைய சலுகைகளுக்கு அப்பாலும் தேவைப்பட்டால் மட்டுமே இந்த நிதியிலிருந்து மாணவர்களுக்கு மேற்சொன்ன நிதியுதவி வழங்கப்படும்).

இயற்கைக் கொடுமைகளான வெள்ளம், புயல், கடல்வெள்ளம் தீ விபத்து ஆகியன நேருகையில் மீனவர்களுக்கு உணவு, உடை, மற்றும் பொருட்களை வழங்குதல்.

மீனவர்களின் நலனுக்காக ஒவ்வோர் ஆண்டும் ''மீனவர்கள் வாரம்'' கொண்டாடுதல்.


மீனவர் குடியிருப்புக்களில் மீனவர்களுக்கு மாலை நேர வகுப்புகள் நடத்துதல்.

அரசினரால் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் மற்றைய நலன், காப்புப் பணிகளுக்கான உதவி வழங்குதல். இவைகளுக்கான நிதித் தேவைகள் முதலமைச்சரின் நிவாரண நிதி, அரசினரின் ஆண்டுக்கொடை, தன்னிச்சையாகத் தருபவர்கள் ஆகிய வழிகளிலிருந்து வருவனவாகும்.



குடியால் குடும்பங்கள் பல
அழிந்தன
குடும்ப
நலம் கருதி
குடிக்காதீர்கள்

davp 77/264



# மலரே! வண்ண மலரே!



—பி. மாசிலாமணி,

தாவர இயல் துணைப் பேராசிரியர்,

மாநிலக் கல்லூரி.

**தோட்டக்கலைச் சங்கம் நடத்தும் வண்ண மலர்க் கண்காட்சி 10-2-'78 முதல் தொடங்கி, பத்து நாட்கள் சென்னையில் நடைபெற்றது. அக்கண்காட்சியில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ண வண்ண மலர்கள் பார்ப்போர் நெஞ்சங்களைப் பரவசமடையச் செய்தன. மலர்களில் தான் எத்தனை எத்தனை வண்ணங்கள்! இந்த எழில்மிகு வண்ணங்கள் எப்படித்தான் இந்த மலர்களுக்கு ஏற்படுகின்றன! வியப்பாக இருக்கிறதல்லவா? கட்டுரையைப் படியுங்கள்!**

இயற்கை எழில் என்றதும் நமக்குத் தோன்றுவதோ பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களே!

உழைத்துக் களைத்த உள்ளத்திற்கு உவகை யூட்டுவதும் ஒப்பற்ற கண்கவர் வண்ண மலர்களே!

அதற்காகவே மலர்க் காட்சியினை வைத்துக் கண்டு மகிழ்வதையும் நாம் பார்க்கின்றோம்.

கண்ணிற்குக் குளுமையையும் மகிழ்ச்சியையும் தரும் மலர்களுக்கு வண்ணங்கள்தான் எத்தனை, எத்தனை?

· ஆனால் எல்லா மலர்களுக்கும் ஒரே வண்ணம் இருப்பதில்லை. வெவ்வேறான வண்ணங்கள் இருக்கின்றன.

இவ்வண்ணங்கள் மலர்களில் எவ்வாறு தோன்றுகின்றன?

நாம் அணியும் உடைகளுக்குச் சாயம் போடப்படுவதைப் பார்க்கிறோம். அதுபோல மலர்களுக்கும் ஏதேனும் சாயம் ஊட்டப்படுகிறதா? இல்லை!

பொதுவாக மலர்களில் சிவப்பு, நீலம், மஞ்சள், பச்சை, ஊதா போன்ற வண்ணங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றன. இது போன்று தாவரப் பகுதிகளின் வண்ணங்களுக்குக் காரணமாக இருப்பவை கணிகங்களாகும். இவற்றை முறையே **பசுங்கணிகங்கள், வண்ணக் கணிகங்கள், வெளிர் கணிகங்கள்** என்பர்.

மேலும் மஞ்சள் நிறமிகள் (Xanthophylls) என்றும் ஆரஞ்சு (அல்லது) சிவப்பு நிறமிகள் (Carotins) என்றும் ஊதா நிறமிகள் (Anthocyanin) என்றும் பசுங்கணிகங்களை (Chlrophylls) என்றும் வெளிர்கணிகங்களை (Leneoplast) என்றும் கூறுவர். பெரும்பாலும் இந்நிறமிகள் அல்லி இதழ்களில் காணப்படுகின்றன.

இவற்றை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆய்ந்து நோக்கும் போது சில உண்மைகள் புலனாகும். வேதியட் பொருட்களான கார்பன்-ஆக்ஸிஜன்-நைட்ரஜன் - மக்னீசியம் முதலியவற்றின் மூலக்கூறுகள் பல்வேறு எண்ணிக்கையில் பல்வேறு முறைகளில் அமைந்து இந்நிறமிகளைத் தோற்றுவிக்கின்றன.

**குரோமோபிளாஸ்ட்** எனப்படும் வண்ணக்கணிகமும், **குளோரோபிளாஸ்ட்** எனப்படும் பசுங்கணிகமும் இவற்றில் இன்றியமையாதவைகளாகும். **குளோரோபில்** எனப்படும் பச்சையமும் **கரோட்டினாய்டுகள்** எனப்படும் ஆரஞ்சுவண்ண கரோட்டினும் மஞ்சள் வண்ண **சான்தோபில்லும் ஊதா** வண்ண **ஆன்தோசைனின்** எனும் நிறமிகளும் பல்வேறு விகிதங்களில் அமைந்து இவ்வுள்ளங்கவர் வண்ணங்களை மலர்களில் அள்ளித் தெளித்துள்ளன.

தாவரங்களின் இனப் பெருக்கத்திற்கு மகரந்தச் சேர்க்கை மிக இன்றியமையாததாகும். மகரந்தச் சேர்க்கை ஏற்பட உதவி செய்பவைகளில் முக்கியமானவை பூச்சிகள், வண்ணத்துப் பூச்சிகள், தும்பி, தேனீ போன்ற வண்டி

ணங்கள். இவை வண்ணத்தையும் மதுவையும் மகரந்தத்தையும் விரும்பிப் பூக்களை நாடுகின்றன.

முல்லை, மல்லிகை போன்ற வெள்ளை நிற மலர்கள் இரவிலே மலரும் பூக்கள். வெள்ளை நிறத்தாலும் மணத்தாலும் கவரப்பட்டு, பூச்சிகள் இரவிலும் இப்பூக்களை நாடுகின்றன.

மலர்கள் வண்ணத்தால் வேறுபட்டவை. மலர்களின் வெவ்வேறு உறுப்புகளும் பல்வேறு வண்ணம்உடையனவாகக் காணப்படுகின்றன. (பெரும்பாலும் அல்லி இதழ்கள்தான் கண்கவர் வண்ணமுடையனவாக இருக்கின்றன. சில மலர்களில் புல்லி இதழ்களும், மகரந்த கேசரங்களும் சூல்முடியும் கருத்தினைக் கவரும் வண்ணங்களைப் பெற்றிருக்கின்றன.

ஆக, மலரின் பகுதிகள் அனைத்தும் ஒரே வண்ண முடையனவாகவோ அல்லது ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு வண்ண முடையனவாகவோ இருக்கலாம்.

மனத்தை ஈர்க்கும் மனோரஞ்சிதமும், பளிச்சென்று காட்சி தரும் பச்சைக் கனகாம்பரமும் பசுமையானஇதழ்களைக்கொண்டதாக உள்ளன. மல்லிகை, முல்லை வெண் தாமரை-வெண்மை நிறத்திலும், சாமந்தி-மஞ்சள் நிறத்திலும் ( Nychanthus )-பவழ மல்லிகை, மஞ்சள் கலந்த வெள்ளை நிறத்திலும் ( Crocas ) குங்குமப் பூ நிறத்திலும், (Carthamus) செந்தூரம் என்னும் செங்காந்தள் செம்பருத்தி, சிவப்பு நிறத்திலும் ரோஜாவைப் பல வண்ணங்களிலும் பார்க்கின்றோம். இந்த வண்ண மலர்கள் நீண்ட நாட்கள் வாழும் தன்மையற்றவை. ஒரு சில மலர்கள் மலர்ந்த ஒருநாள் அல்லது இரு நாட்களுக்குள்ளேயே வாடிவிடுகின்றன. இவ்வாறு காலவரம்பிற்குட்பட்டு மலரும் இம் மலர்கள் மகரந்தச் சேர்க்கையினால் தம் சந்ததியைப் புதுப்பித்துக் கொள்கின்றன. இவற்றிற்கு இயற்கையில் அமைந்த வண்ணங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

மகப்பேறு அடையும் நிலையில் உள்ள தாய்மார்கள், தங்களுக்குப் பிறக்கும் குழந்தை செக்கச் செவேல் என இருக்க வேண்டும் என்ற ஆவல் காரணமாகப் பாலில் குங்குமப்பூவினைச் சேர்த்து அருந்துவதைப் பார்த்திருப்பீர்கள், அல்லது கேட்டிருப்பீர்கள். அப் பூவினைப் பாலில் போட்டவுடன் பாலின் வண்ணம் மாறுகிறது. அதே நிறம் தன் குழந்தைக்கும் கிடைக்கும் எனத் தாயுள்ளம் எண்ணி மகிழ்கிறது. பாலின் வண்ண மாற்றத்திற்குக் காரணமாக இருப்பது (Crocus) என்னும் குங்குமப்பூவின் சூல் முடியில் காணப்படும் நிறமாகும்.

மனிதர்களின் நிறவேறுபாட்டிற்குக் காரணமாக இருக்கும் நிறமியோ வேறு. இதனை ( Melanin Pigment ) மிலானின் நிறமி என்பர். இந்நிறமி அதிகமாக உள்ளவர் கறுமையாகவும், குறைவாக உள்ளவர் சிவப்பாகவும், இந்நிறமியே இல்லாத காரணத்தால் வெண்மையாகவும் அதாவது ( Albino )-வாகவும் இருப்பதைப் பார்க்கலாம். எனவே குங்குமப்பூவின் வண்ணத்திற்கும் பிறக்கும் குழந்தையின் நிறத்திற்கும் தொடர்பே இல்லை.

மணக்கும் மல்லிகையும் முல்லையும் சந்ததிதோறும் வெண்மையாகவே இருக்கின்றன. சிவந்த செம்பருத்தி எத்தனை ஆண்டுகள், எத்தனை முறை தோன்றினாலும் சிவப்பு வண்ணத்தையே பெற்றுள்ளன. இது ஏன்? இதற்கு எது காரணம்?

சிந்தனையைத் தூண்டும் இவ் வினாக்களுக்குச் சிறப்பான விடையளிப்பது மரபு இயலாகும். மரபியலின் விதிகட்கு உட்பட்ட பாரம்பரிய கோட்பாடுகள் இதற்குக் காரணமாக அமைகின்றன. ஒரு வண்ணம் ஒரு குறிப்பிட்ட மலரில் தோன்றுவதையும் இவைகள் கட்டுப்படுத்துகின்றன. அண்மைக்கால ஆய்வுகளின் பயனாக இரு வண்ண மலர்களை இணைத்து, மரபியலின் விதிகளுக்கு உட்பட்டு புதிய வண்ணம் பெற்ற மலர்களையும் தோற்றுவிக்கின்றனர். இவையெல்லாம் விஞ்ஞான உலகின் இணையிலா விந்தைகள்.

இவை இது தவிர மேலும் பல்வேறு வண்ண நிறமிகள் மலர்களில் வெளிப்பட்டு, சிறப்புடைய காரணமாக இருப்பவை சூரியனின் ஒளிர்க்கதிர்களுமாகும்.

பூத்துக் குலுங்கும் மலர்களின் வண்ணத்தினை தன் புத்திக் கூர்மையுடன் இழைத்துக் குழைத்து எழுதாத ஓவியனும் கவிஞனும் கிடையாது.

மகாகவி ரவிந்திரநாத் தாகூர் அவர்கள் கவிதை நயத்துடன் கூறுகிறார்.

மலர்களின் வண்ணத்தால் ஈர்க்கப்பட்ட வண்டுகள் மலரின் அணுகி தேன் உண்டு அவற்றின் நன்றியினை ரீங்காரம் இட்டு தெரிவித்துச் செல்கின்றன. ஆனால் வண்ணத்துப் பூச்சிகளோ தேனினை உண்ட பின்னர் மலர்கள் தான் தனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று எண்ணுவது போன்று இறுமாந்து மெல்லச் சிறகடித்துப் பறக்கின்றன.

—நன்றி "வானொலி"





உடல் வளர்ச்சிக்கும், வேலை செய்யத் தேவையான சக்திக்கும், உடல் உறுப்புக்கள் ஒழுங்காக வேலை செய்வதற்கும் உணவுச் சத்துக்களை நாம் உண்ணும் உணவின் மூலமே பெறுகிறோம். நமக்குத் தேவையான உணவுச் சத்துக்களைத் தக்க அளவில் கொடுக்கும் உணவையே சத்துணவு என்கிறோம். சத்துணவு தயார் செய்ய நமது அன்றாட உணவில் தானியங்கள், பருப்புகள், காய்கறிகள், பழங்கள், எண்ணெய், கொட்டைகள், முட்டை, மாமிசம், சர்க்கரை, வெல்லம் போன்ற உணவுப் பொருட்களைத் தக்க அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

தாவரங்களில் இலைகள், பூக்கள், தண்டுகள், காய்கள், கொட்டைகள், பழங்கள், வேர்கள் ஆகியவற்றைக் காய்கறிகளாக நாம் உண்ணுகிறோம். ஒரு நாளைக்கு ஒரு மனிதனுக்கு 250 கிராம் காய்கறிகள் தேவை. காய்கறிகள் நமக்குத் தாதுஉப்புக்களையும் வைட்டமின்களையும் சிறிதளவு சக்தியையும், புரதத்தையும் கொடுக்கின்றன. ஒரு சில காய்கறிகள் மட்டும் சில உணவுச் சத்துக்களை நமக்கு அதிகமாகக் கொடுக்கின்றன. உதாரணமாக மஞ்சள், ஆரஞ்சு நிறமுள்ள காய்கள்—கேரட், அரசாணி, வைட்டமின் 'ஏ'ஐயும், நெல்லிக்காய், முருங்கைக்காய்,முட்டைக்கோஸ், காலிஃப்ளவர் போன்றவைகள் வைட்டமின் 'சி'யையும், கிழங்கு வகைகள் அதாவது உருளைக் கிழங்கு, மரவள்ளி, சர்க்கரை வள்ளி போன்றவைகள் கலோரியையும், பட்டாணி, காட்டு அவரை (மொச்சை), பச்சையாக இருக்கும்போது (கொட்டை வகைக் காய்கறிகள்) புரதத்தையும், தாது உப்புக்களையும்,வைட்டமின்களையும் அதிகமாகக் கொடுப்பது கீரை வகைகள். எல்லாக் காய்கறிகளையும் நமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதால் எல்லா உணவுச் சத்துக்களும் போதுமான அளவு எளிதில் கிடைக்கிறது.

காய்கறிகளை நமது உணவில் சேர்த்துக் கொள்ளுவதால் ஏற்படும் நன்மைகள் :

நமக்குப் போதுமான உணவுச் சத்துக்களை—முக்கியமாகத் தாது உப்புக்களையும் வைட்டமின்களையும் காய்கறிகள் கொடுக்கின்றன. தாது உப்புக்களினாலும் வைட்டமின்களினாலும் ஏற்படும் குறை நோய்கள் (Deficiency Diseases) வராமல் தடுக்கின்றன.

சமைத்த உணவுக்கு நிறமும், மணமும், சுவையும் கொடுக்கின்றன.

இவற்றைக் கொண்டு பல வகையான உணவு வகைகளைத் தயார் செய்யலாம்.

சத்து மிகுந்த காய்கறிகளைச் சமையலுக்குத் தயார் செய்யும் போது சில குறிப்புகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நன்கு முதிர்ந்த, பசுமையான, நோயினால் பாதிக்கப்படாத கெட்டுப் போகாத காய்கறிகளை மட்டும் சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும்.

காய்கறிகளை வெட்டுவதற்கு முன்பு கழுவிவிட வேண்டும். வெட்டிய பின்பு கழுவுவதால் அதிலுள்ள எளிதில் கரையக் கூடிய வைட்டமின்களை இழக்க நேரிடும்.

காய்களை வெட்டும் போது துரு இல்லாத கத்தி அல்லது (Stainless Steel) கத்தியைப் பயன்படுத்தவும், துருப் பிடித்த கத்தியினால் வெட்டினால் காய்கறிகள் கறுத்து விடும். சில காய்கறிகளை வெட்டியவுடன் தண்ணீரில் போட வேண்டும். இல்லாவிட்டால் கறுத்துவிடும். (உ-ம்) உருளைக் கிழங்கு, கத்தரிக்காய்.

காய்களைச் சிறு துண்டுகளாக வெட்டாமல் பெரிய துண்டுகளாக வெட்டவும். இப்படிச் செய்வதால் வேகும்போது உணவுச் சத்துக்கள் அதிகம் வீணாவதைத் தடுக்கலாம்.

சமைக்கும்போது கவனிக்கவேண்டியவை :

காய்கறிகள் சமைப்பதற்குச் சற்று முன்பு தான் வெட்ட வேண்டும்.

போதுமான அளவு நீரில் வேக வைப்பது நலம். தண்ணீர் அதிகமாக இருந்தால் குழம்போ, ரசமோ வைப்பதற்குப் பயன்படுத்தவும். இதனால் உணவுச் சத்துக்கள் வீணாக்கப்படாமல் இருக்கும்.

காய்கறிகளைச் சமைக்கும் போது சோடா உப்பு, வினிகர் போன்றவற்றை உபயோகிக்கக் கூடாது. சிலர் சோடா உப்பைப் போடுவதால் சீக்கிரம் காய்கறிகளை வேக வைக்க முடியும் என்று உபயோகிக்கிறார்கள். இதனால் வைட்டமின் 'பி' பாதிக்கப்படுவ

மகளிர் அரங்கம்

# சத்துணவுச் சமையலுக்குக் காய்கறிகள்

கி. மணிமேகலை
உணவியல் துறை
வேளாண்மைப் பல்கலைக் கழகம்
கோவை



# இன்று ரூ. 50 - சிறியதுதான் ஆனால் நாளை ரூ. 1,000/- மிகப்பெரியதாகும்.

## டி.என்.எஸ்.சி. வங்கியின் புதிய மற்றும் உயரிய திட்டத்தின் கீழ்

# SP 20 R

மாதம் ரூ. 50/- வீதம் 360 மாதங்களுக்கு நீங்கள் முதலீடு செய்து, அதன் பிறகு, (அதாவது 361 வது மாதத் துவக்கத்திலிருந்து) மாதம் ரூ. 1,000/- வீதம் என்றும் பெறலாம். ஆம்! ரூ. 1,000/- ஆயிரம் ரூபாய்.

**2000** கடைசி தவணையை நீங்கள் செலுத்தும்போது ரூ. 2,000/- ரொக்கமாக அளிக்கப்படும்.

மாத ஒய்வூதியமான ரூபாய் ஆயிரத்திற்குப் பதிலாக ரூ. 1,17,000 எப்போது வேண்டுமானாலும் ரொக்கமாகப் பெறலாம். **1,17,000**

**1/2 or 1/5** விகிதப்படியான ஆதாயத்திற்கு விகிதப்படியாக செலுத்துக.

வரி காரணங்களுக்காக, ஆண்டுக்குச் சேரும் வட்டிக்கான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளலாம். **வரி**



உங்கள் ஆதரவிலுள்ளோர் பயனடையத்தக்க வகையில் கூட்டுக் கணக்கும் வைக்கலாம்.

360 மாதங்களுக்குப்பின் மேற்கூறிய அனைத்துப் பலன்களையும் பெற, மாதத் தவணையில் பணம் செலுத்துவதற்குப் பதிலாக, ரொக்கமாக இன்றே ரூ. 5630/- செலுத்தினாலும் போதுமானது. **5630**

**10¼%.9½%.10¾%.**

இந்தத் திட்டம் இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டளைகளுக்குட்பட்டதாகும்.

விபரத்திற்கும், கணக்கு திறப்பதற்கான படிவங்களுக்கும் அணுகுக.

TNSC BANK

## தமிழ் நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்.,

379, N.S.C. போஸ் ரோடு, சென்னை-600 001
போன் : 20367
அல்லது சென்னையில் உள்ள அதன் 26 கிளைகளிலொன்று.

ELEGANT

துடன் காய்கறிகளின் நிறமும் மணமும் சுவையும் வேறுபடுகிறது. (உ-ம்) பீட்ரூட் ரோஸ் வண்ணத்துடன் கூடிய சிவப்பு நிறமாக இருக்கிறது. சோடா உப்புப் போடுவதால் மரத்தின் நிறமாக ( Brown ) மாறிவிடுகிறது. இயற்கையாக உள்ள நிறங்களைப் பாதுகாப்பதில் சமைப்பவர் கவனம் செலுத்த வேண்டும்.

அமிலங்களை (டார்டாரிக் அமிலம், புளி) சிட்ரிக் அமிலம் (எலுமிச்சை) போன்றவற்றைக் காய்கறிகள் வேகும்போது சேர்க்கக் கூடாது. இவை காய்கறிகளின் நிறத்தை (உ-ம்). பச்சை நிறத்தை வெளிர் மஞ்சள் கலந்த பச்சையாக மாற்றிவிடும். வேகும் நேரத்தை அதிகமாகச் செய்யும். அமிலங்களைச் சேர்ப்பதால், சுவையைக் கொடுப்பதால் காய்கறிகளை அடுப்பில் இருந்து இறக்கும் முன்பு சேர்க்கவேண்டும். (உ-ம்) சாம்பாருக்குப் புளி சேர்ப்பது, வெண்டைக்காய்ப் பொரியலுக்கு எலுமிச்சைச் சாறு ஊற்றுவது.

காய்கறிகள், சமைக்கும்போது சிறிதளவு உணவுச் சத்துக்கள் வீணாக்கப்படுவதால் நமது அன்றாட உணவுடன் பச்சைக் காய்கறிகளை சாலாடாகச் (Salads) சேர்த்துக் கொள்ள வேண்டும்.

காய்கறிகளைக் கொண்டு பலவிதமான உணவுப் பண்டங்கள் தயார் செய்யலாம் — சூப், பச்சடி, பொரியல், சிப்ஸ், குழம்பு, அவியல், கட்லெட், ஊறுகாய்கள், சாலாட் இவைகள் தயார் செய்யும் குறிப்புகள் இங்கே கொடுக்கப்படுகின்றன. நீங்களும் தான் வீட்டில் தயார் செய்து பாருங்களேன்!

**காய்கறி சூப் :**

கேரட் — 1
பீன்ஸ் — 25 கிராம்.
பச்சைப் பட்டாணி — 50 கிராம்.
முட்டைக்கோஸ் — 25 கிராம்
காலி ஃப்ளவர் — 25 கிராம்.
தக்காளி — 2
கொத்தமல்லி, புதினா—மணத்திற்கு ஏற்றவாறு.

உப்பு, மிளகுப்பொடி—சுவைக்குத் தகுந்த அளவு.

மேலே சொன்ன காய்கறிகளைச் சுத்தமாகக் கழுவிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். ஒரு லிட்டர் தண்ணீரில் நன்றாக வேக வைக்கவும். வேகும் போது தண்ணீர் போதவில்லை என்றால், மேலும் 25 லிட்டர் தண்ணீர் சேர்க்க வேண்டும். பின்னர் காய்கள் வேகவைத்த தண்ணீரை வடித்துக் கொண்டு, தேவையான உப்பும், மிளகுத் தூள், சிறிது வெண்ணெய்யையும் சேர்த்துச் சூடாகச் சாப்பிடவும், இது நோயாளிகளுக்கும் சிறு குழந்தைகளுக்கும் மற்றவர்களுக்கும் சிறந்த சத்துள்ள பானமாகும். சுவையை அதிகரிக்கச் சிறிதளவு எலுமிச்சைச் சாறு சேர்த்துக்கொள்ளலாம். சூப் தயாரிக்க வேக வைத்த காயைப் பொரியலாகத் தயார் செய்து சாப்பிடலாம்.

## ஓதுவார் பயிற்சி பெற்ற மூவருக்கு ரூ 1000 மானியம்

**தமிழ்க் கலைகளை வளர்க்கும் வகையிலும், தமிழறிஞர்களை ஊக்குவிக்கும் முறையிலும் ஓதுவார் பயிற்சி பெற்ற மூவருக்கு ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் ரூபாய் வீதம் மானியம் வழங்கப்படும்.**

**தமிழ்நாட்டில் அறநிலையத் துறையின் சார்பில் மொத்தம் 7 தேவாரப் பயிற்சிப் பாடசாலைகள் நடத்தப்படுகின்றன. இந்தப் பாடசாலைகளில் 197 மாணவர்கள், ஓதுவார் பயிற்சி பெறுகிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாயை அறநிலையத்துறை ஓதுவார் பயிற்சிப் பள்ளிகளுக்காகச் செலவிடுகிறது. பயிற்சிக் காலம் ஐந்து ஆண்டுகளாகும். திருவெண்காடு, திருப்புகலூர், திருக்கடையூர், திருவாரூர், திருக்களர், பழனி, மயிலை ஆகிய 7 இடங்களிலும் ஓதுவார் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இந்தப் பயிற்சிப் பள்ளிகளில் ஐந்து ஆண்டுகள் முறையாகப் பயிற்சி பெற்று முதல் மூன்று சிறந்த மாணவர்களாகத் தேர்வு பெற்று, அவர்கள் வேலையில்லாமல் அவதிப்படுவார்களேயானால் அவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் மூன்று மாணவர்கள் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு இந்த மானியம் வழங்கப்படும்.**

**பச்சடி**

வெள்ளரிக்காய் அல்லது கேரட்—1.
பெரிய வெங்காயம்—1.
பச்சை மிளகாய் — 3-5.

தயிர் — 1 கப்.

கொத்தமல்லி, கறிவேப்பிலை, உப்பு, இஞ்சி—தேவையான அளவுக்கு.

வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சி, கறிவேப்பிலை, கொத்தமல்லி, வெள்ளரிக்காய், தக்காளி ஆகியவற்றைச் சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ள வேண்டும். தயிரை உடைத்துக் கொண்டு, தேவையான உப்புடன் மேலே சொன்னவற்றையும் உடன் சேர்த்து நன்றாகக் கலக்கவும். வேண்டுமானால் இந்தப் பச்சடியைத் தாளித்துக் கொள்ளலாம். இதை வெஜிடபிள் பிரியாணியுடனும் மட்டன் பிரியாணியுடனும் சேர்த்துச் சாப்பிடலாம்.

**அவியல்**

வாழைக்காய் —1.
முருங்கைக்காய் —1.
உருளைக் கிழங்கு —1.
சேனைக்கிழங்கு —1 துண்டு.
கத்தரிக்காய் —1.
பாகற்காய் —1.
புடலங்காய் —1 துண்டு.
பூசணிக்காய் —1 துண்டு.
தேங்காய் —1.

மிளகாய் வற்றல் — 10.
தயிர் — 2 கப்.
உப்பு, மஞ்சள் பொடி, எண்ணெய், கடுகு, கறிவேப்பிலை, — தேவையான அளவு.

மேலே சொன்ன காய்கறிகளைக் கழுவிய பின்பு, வேண்டிய அளவில் வெட்டிக் கொள்ளவும். போதிய அளவு தண்ணீரில் காய்கறிகளை வேக வைக்கவும். மிளகாய் வற்றலை அரைத்து அதனுடன் உப்பு, மஞ்சள் பொடி முதலியவற்றையும் வேகும் காய்கறிகளில் போட்டுக் கிளறிவிடவும். காய்கள் வெந்தவுடன் அரைத்து வைத்துள்ள தேங்காயையும் புளித்த தயிரையும் உடன் கலந்து, கொதிக்கும் தறுவாயில் (நுரையுடன் கூடிக் காணும் போது) அடுப்பிலிருந்து இறக்கிச் சிறிது தேங்காய் எண்ணெய்யும் கறிவேப்பிலையும் போட்டுக் கலக்கிவிடவும். அவியலைத்



குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
# விஜய்

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.


தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.



ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MFL-1517

தாளிக்க விரும்புபவர்கள் தாளித்துக் கொள்ளவும். சுவைத்தால் தானே அவியலின் அருமை தெரியும்!

## வெஜிடபிள் கட்லெட்

கேரட் — 1.
பச்சைப் பட்டாணி — 50 கிராம்.
உருளைக் கிழங்கு — 2.
முட்டைக்கோஸ் — 25கிராம்
காலிஃப்ளவர் — 50 கிராம்.
வெங்காயம் — 2 (பெரியது)
பச்சை மிளகாய் — 5-7.
தேங்காய் — 1.
கிராம்பு — 5.
கசகசா — 1 மேசைக்கரண்டி
பட்டை — 1 துண்டு.
சோம்பு — 1.5 தேக்கரண்டி.
பொரித்த கடலை—1 மேசைக் கரண்டி.
இஞ்சி — 1 துண்டு.
ரஸ்க் (ரொட்டிப் பொடி) — 100 கிராம்.
பச்சரிசி மாவு — 6 மேசைக் கரண்டி.
முட்டை — 1.
எண்ணெய், உப்பு, கடுகு, கறிவேப்பிலை, கொத்தமல்லி — தேவையான அளவு.

காய்கறிகளைக் கழுவிச், சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொண்டு போதிய அளவு தண்ணீர் ஊற்றித் தனித் தனியாக வேக வைத்துக் கொள்ள வேண்டும். உருளைக் கிழங்கை வேக வைத்துத் தோலை நீக்கிவிட்டு வேக வைத்த எல்லாக் காய்கறிகளுடன்சேர்த்து நன்ருகக் கலந்து கொள்ளவும். இதனுடன் தேவையான உப்பும், பொடியாக வெட்டி வைத்துள்ள கறிவேப்பிலை, கொத்தமல்லி இலை ஆகியவற்றையும் உடன்சேர்த்துக் கிளறிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகைப் போடவும். கடுகு வெடித்ததும் நறுக்கி வைத்துள்ள வெங்காயம், பச்சை மிளகாய் தேங்காயுடன் சேர்த்து அரைத்து வைத்துள்ள மசாலா ஆகியவற்றைப் போட்டு எண்ணெய்யில் வதக்கவும். மசாலா வாசனை வந்தவுடன் வேக வைத்துள்ள காய்கறிகளுடன் சேர்த்து நன்ருகப் பிசைந்து, இதை 2.5அங். நீளமும், 1.5அங். அகலமும் 0.5அங். தடிமானமும் (thickness) உள்ள நீண்ட சதுரமான வில்லைகள் போல் செய்து பரப்பி வைத்து உள்ள அரிசிமாவில் புரட்டி எடுத்துப் பின்னர் ரொட்டிப் பொடியின் மேல் புரட்டிய பின்பு தோசை சுடுவது போல் கட்லெட் செய்யவும். அரிசி மாவிற்குப் பதிலாக முட்டையின் வெண்கருவில் நனைத்து எடுத்து ரொட்டிப் பொடியில் புரட்டி மேலே சொன்னதுபோல கட்லெட் செய்யவும்.

## காய்கறி ஊறுகாய்

கேரட் — 1.
பச்சைப் பட்டாணி — 25 கிராம்.
நெல்லிக்காய் பெரியது — 100 கிராம்.
சிறிய நெல்லிக்காய் — 50 கிராம்.
களாக்காய் — 50 கிராம்.
மாங்காய் — 1.
முருங்கைக்காய் — 1.
எலுமிச்சை — 5.
வெள்ளைப் பூண்டு — 5.
உப்பு — 30-40 கிராம்.
கடுகு—1 தேக்கரண்டி.
வெந்தயம் — 2 தேக்கரண்டி
பெருங்காயம் — 5 கிராம்.
மிளகாய்ப் பொடி — 25 கிராம்.
வினிகர் — 50.மில்லி லிட்டர்.
எண்ணெய் (எள்) — 300 மில்லி லிட்டர்.

பெருங்காயம், வெந்தயம், கடுகு ஆகியவற்றை லேசாக வறுத்துக் கொண்டு பொடி செய்து கொள்ளவும். வெள்ளைப் பூண்டின் தோலை நீக்கிக் கொண்டு விடவும். காய்களை எல்லாம் விருப்பமான அளவில் வெட்டிக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் ஊற்றிக் கொண்டு அடுப்பில் வைத்துச் சூடாக்கவும். சிறிது கடுகைப் போட்டு வெடித்தவுடன் நறுக்கி வைத்துள்ள காய்கள், உப்பு, மிளகாய்த் தூள் ஆகியவற்றை எண்ணெய்யில் போடவும். காய்கள் வேகும் வரை கிளறிக் கொண்டே இருக்கவும். காய்கள் வெந்தவுடன் வினிகரையும் கலந்து சுத்தமான பாட்டிலில் போட்டு வைக்கவும். இரண்டு நாட்களில் ஊறுகாய் தயாராகிவிடும்.

பசுமை நிறைந்தகாய்கறிகளைக் கொண்டு மேலே சொன்னது போன்ற உணவு வகைகளைத் தயார் செய்து நாம் உண்ணும் உணவை சத்துள்ளதாகச் செய்வோம்.

## வாழைப் பழங்களை நீண்ட நாள் சேமிக்க ஒரு சிக்கன முறை

நம் நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 36 இலட்சம் டன் வாழைப் பழம் உற்பத்தியாகின்றது. ஆனல் இவற்றில் கால் பங்கிற்கு மேல் சரியான சேமிப்பு முறைகள் இல்லாததால் கெட்டுப் போகின்றன; பல வகை சேமிப்பு முறைகள் தெரிந்திருந்தாலும், எல்லோரும் உபயோகிக்கக் கூடிய சிக்கன முறை எதுவும் இல்லை. ஈரப்பசை குறைவாகவும் வெப்பநிலை அதிகமாகவும் இருந்தால் வாழைக்காய்கள் சீக்கிரம் பழுத்துவிடும். எனவே ஈரப்பசையை அதிகமாக்கி, வெப்பநிலையைக் குறைத்தால் காய்களை விரைவில் பழுக்கவிடாது பாதுகாக்கலாம்.

நன்கு முற்றிய வாழைக் காய்களை அப்படியே தாராகவோ, தனித்தனி சீப்பாகவோ ஆற்று மணலைத் தரையில் பரப்பி அதன்மேல் வைக்க வேண்டும். இக் காய்களின் மேல், ஆற்று மணலைக் கொட்டி, காய்கள் வெளியே தெரியாதபடி மூடவேண்டும். பின்னர் மணலின் மீது தண்ணீர் தெளிக்க வேண்டும். மணலை முழுவதும் காயவிடாது (½ அங்குல ஆழம் மணல் காய்ந்த பிறகு) தண்ணீர் தெளித்து வரவேண்டும். பூவன் வாழை சாதாரணமாக, பத்து நாட்களில் பழுத்துவிடும். ஆனல் இதுபோல் சேமித்து வைத்தால் பழுப்பதற்கு 20 நாட்கள் ஆகின்றது. அதுபோலவே 15 நாளில் பழுக்கும் ரொபஸ்டா வாழையை 30 நாட்கள் வரை சேமிக்கலாம். இப்படி மணலில் மூடி, பழுக்கும் காலத்தைத் தள்ளிப் போடுவதனுல், பழுத்த பின்னர் மணமோ, சுவையோ குறைவதில்லை.


தகவல்: உணவு நுண்ணியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயமுத்தூர்-3.


கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும்
காஞ்சிபுரம் பட்டுச் சேலை
தங்கத்துக்கு நிகரானது!
ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர்
மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ்.
பற்பல டிசைன்கள். அசல் சரிகை.
அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர்
வண்ண வகைகள்.
மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல்
பட்டுச் சேலைகள், உறையூர்,
கோயமுத்தூர், சேலம் கைத்தறி
நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள்,
சின்னாளப்பட்டி சேலைகள்.
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி
கோ-ஆப்டெக்ஸ்
ஆடை அணிபவர்
அதன் தனிச்சிறப்பை
அறிவர்.
பண்டைச் சிறப்பும் நவீன
நவினமும் இணைந்து திகழ்வது
வண்ணத்துப்பூச்சி

3

# அண்ணா எனும் இலக்கியவாதி

-பி.சி.கணேசன்



கடைசிவரையில் அண்ணா ஓர் இலக்கியவாதியாக வாழ்ந்தார் எனினும், காலத்தை வென்ற இலக்கியப் படைப்புக்கள் அவர் செய்தாரா என்பது குறித்து, கருத்து வேறுபாடுகள் இருக்கக் கூடும். அவர் அப்படி ஒன்றும் செய்துவி[illegible]வில்லை என்று உள்ளபடியே [illegible]ருதுகிறவர்களும் உண்டு. அண்ணா அழகு [illegible]ணர்ச்சி கொண்ட இலக்கியவாதியாக மட்டும் இருந்து இருப்பாரேயானால் கலை வடிவத்திற்கு மட்டுமே மிகுதியான கவனம் செலுத்தி,தன்னுடைய படைப்புக்களை உருவாக்கி இருப்பார். ஆனால் அவர் ஒரு சிந்தனாவாதியாக இருந்தார்; சமூக சீர்திருத்தக்காரராக இருந்தார்; அரசியல்வாதியாக விளங்கினார்; போராட்டக்காரராக திகழ்ந்தார்; பிரச்சாரகராக நாடெல்லாம் சுற்றி வந்தார். சமுதாய மாற்றம் அவருடைய குறிக்கோள் என்றாகி விட்ட பிறகு, படைப்புக்களை வெறும் கலை வடிவங்களாக மட்டும் அவரால் பார்க்க முடியாமற் போயிற்று.

அவருடைய முயற்சியில் கலையோ, இலக்கியமோ ஒரு முடிந்த இலட்சியமாக என்றைக்கும் இருந்தது இல்லை. அவர் காண விரும்பிய சமூக மாற்றத்திற்கு— செய்ய விரும்பிய அரசியல் சாதனைகளுக்கு — இலக்கியத்தையும், கலைத்துறையினையும் கருவிகளாக மட்டுமே அவர் கருதினார். அந்தக் கருவிகளை எப்படி கூர்மையாக்கிக் கொண்டு பயன்படுத்த வேண்டும் என்கிற விஷயத்தில் அவர் நிகரற்ற நிபுணராக விளங்கினார். ஆகவே தன்னுடைய நோக்கம் நிறைவேற வேண்டும் என்கிற போது அதன் விளைவாக ஏற்படும் கலைச் சேதாரங்களைத் தவிர்க்க முடியாத ஒன்றாக ஏற்றுக் கொண்டார். கலை வடிவங்களும் இலக்கியப் படைப்புக்களும் மனித வாழ்க்கையை மேம்படுத்தும் சாதனங்களாக அமைய வேண்டுமென்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவராக அண்ணா விளங்கினார்.

அவருடைய இந்தப் போக்கினால் தமிழ்க் கலை உலகமும் இலக்கியத் துறையும் எந்த விதமான பாதிப்புக்கும் உள்ளாகி விடவில்லை. மாறாக, கலையிலும் இலக்கியத்திலும் அண்ணாவின் முயற்சியால் புதிய பல பரிசோதனைகள் தோன்றலாயின. உதாரணத்திற்கு ஒன்று:

கம்பனிடம் அண்ணாவுக்கு நிரம்ப மரியாதை உண்டு. ஏன், பக்தியே உண்டு என்று கூடச் சொல்லலாம். ஆனால், அரசியல் காரணங்களுக்காகவும், வேறு பல சூழல்களின் உந்துதலாலும் கம்பனுக்கு எதிராகப் போர் தொடுக்க வேண்டிய ஒரு தேவை அண்ணாவுக்கு ஏற்பட்டது. அந்தப் போரை அவர் கொச்சையாக நடத்தவில்லை. கம்பனை தாக்கியபோதும்கூட அந்தத் தாக்குதலுக்கு அவர் தேர்ந்து எடுத்துக்கொண்ட பாணங்கள் இலக்கியத் தரத்தோடு அமைந்ததற்குக் காரணம், அண்ணாவும் கம்பனைப் போலவே வேறு ஒரு காலக்கட்டத்தில்—வேறு ஒரு நிலையில்—ஓர் இலக்கியவாதியாக இருந்தது தான்.

கம்பனின் பாத்திரப் படைப்புக்களை, அந்தப் படைப்புக்களின் முரண்பாடுகளை, 'நீதிதேவன் மயக்கம்' என்கிற நாடகத்தில் அண்ணா அருமையாகப் படம் பிடித்துக் காட்டி இருக்கிறார்.

'நீதி தேவன் மயக்கம்' பிரச்சாரத்திற்காக எழுதப்பட்ட நாடகம் என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால் அதை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால், பிரச்சாரம் என்பது தான் நோக்கமே தவிர, அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ள அண்ணா தேர்ந்தெடுத்துக்கொண்ட கலை வடிவம் சிறப்பானது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

உலகத்தின் எந்த மொழியிலும் இலக்கிய விமர்சனத்தை நாடக வடிவில் எவரும் செய்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. கம்ப இராமாயணம் என்கிற நூலுக்கு அண்ணா எழுதிய விமர்சனம் தான் 'நீதி தேவன் மயக்கம்' என்கிற நாடகம் ஆகும். நூல் ஆசிரியர் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்பட்டு, நாடகப் பாத்திரம் ஒன்றினால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் என்பது திறன் ஆய்வுக் கலையில் இதுவரையில் எவரும் முயற்சிக்காத புதிய பாணியாகும். இராவணன் என்கிற பாத்திரத்திற்கு நூல் ஆசிரியர் முறையான நீதி வழங்கவில்லை என்கிற கருத்தினை அண்ணா இந்த அமைப்பின் மூலம் திறன் ஆய்வு செய்து இருக்கிறார். நடுநிலையான ஒரு வாசகனை அண்ணா நீதி தேவனாகக் கற்பனை செய்து உட்கார வைத்து, பாதிக்கப்பட்ட பாத்திரங்களின் வாதங்களுக்கு பதில் சொல்ல முடியாமல், முடிவில் மயங்கி விழுந்து விடுவதாகக் காட்டி இருப்பது திறன் ஆய்வுக் கலையின் நுணுக்கத்திற்கு ஒரு சிகரமாக விளங்கிச் சிறப்புச் செய்கிறது.

'நீதி தேவன் மயக்கம்' நாடகத்தில் அண்ணா வெளியிட்ட கருத்துக்களோடு பலருக்கு முரண்பாடு இருக்கலாம். ஒரு நூலைப்



தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவரும் சிந்தனைச் சிற்பி என்று மக்களால் பாராட்டப் பெற்றவருமான திரு சி. பி. சிற்றரசு அவர்கள் 11-4-1906 அன்று காஞ்சிபுரத்தில் பிறந்தார். தகப்பனார் பெயர் சி. கே. பெத்தசாமி நாயுடு; தாயார் பெயர் இலட்சுமி அம்மாள்.

ஆரம்ப முதலே சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு பொதுவாழ்வுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திரு சி. பி. சிற்றரசு அவர்கள் சிறந்த எழுத்தாளர். நல்ல பேச்சாளர்.

நகைச்சுவை நிரம்பிய சொற்பொழிவுகளின் மூலம் நல்ல சீர்திருத்தக் கருத்துக்களை நாட்டுக்கு நல்கியவர். 'ஆபிரகாம் லிங்கன்', 'மார்டின் லூதர்', 'ரூசோ', 'நச்சுக்கோப்பை' இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவர், 1964 ஏப்ரலில் தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர் ஆனார். 1970 ஏப்ரல் 23-ஆம் நாள் முதல் 20-4-1976 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தலைவராகப் பணியாற்றினார். 1970 அக்டோபரில் ஆஸ்திரேலியாவில் நடந்த காமன்வெல்த் நாடாளுமன்ற 16-வது மாநாட்டில், தமிழ் நாட்டுப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த சில நாட்களாக உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த திரு சி. பி. சிற்றரசு அவர்கள் 16-2-1978 அன்று மறைவு எய்தினார்.

அன்னாரின் மறைவுக்கு, 'தமிழரசு' ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

பற்றி ஒரு விமர்சகர் சொல்லுகின்ற எல்லாக் கருத்துக்களையும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை. ஆனால் அண்ணாவைப் பொறுத்த வரையில் திறன் ஆய்வில் மகத்தான புரட்சியினை ஏற்படுத்தி உள்ளார் என்பது குறித்து மாறுபட்ட கருத்துக்கு இடம் இருக்க முடியாது. எல்லோரும் திறன் ஆய்வைக் கட்டுரையாக எழுதுவார்கள். ஆனால், அண்ணா திறன் ஆய்வையே ஒரு நாடக வடிவமாக ஆக்கித் தந்து இருக்கிறார். காரணம் என்ன?

வெறும் திறன் ஆய்வாளர் என்கிற வட்டத்துக்குள் அவருடைய பணி நின்று விடவில்லை. அவருடைய நோக்கம் அதை விடப் பரந்தது. ஏதோ ஒரு சிலர் தங்கக் கோபுரத்திற்குள் அமர்ந்து, ரசனைக்காகப் படித்து விட்டு, தூக்கி எறிந்து விடுகிற மாதிரியில் அண்ணா எழுதவில்லை. மக்கள் அனைவரும் படித்திருக்கா விட்டாலும், கேள்விஞானத்தின் மூலமாக மனத்தில் பதித்துக் கொண்டுள்ள ஒரு மாபெரும் இலக்கியம் குறித்து, தன்னுடைய மதிப்பீட்டினை மக்களிடையே எடுத்துச் சொல்ல அண்ணா விழைந்தார். அப்படி மக்களைச் சென்று அடைய வேண்டுமானால் அது நாடக வடிவத்தில்தான் இருக்க வேண்டும் என்று அண்ணா தீர்மானம் செய்து கொண்டார். அதன் விளைவாகப் பிறந்தது தான் 'நீதி தேவன் மயக்கம்' என்கிற நாடகம்.

கம்பரைப் படிக்காதவர்களும் அண்ணாவின் இந்த நாடகத்தின் மூலமாகக் கம்பனின் காவிய பாத்திரங்கள் குறித்துச் சர்ச்சை செய்திடும் சூழ்நிலையினை அண்ணாவினால் உருவாக்க முடிந்தது. ஓர் இலக்கிய விமர்சனம் நாடக வடிவமாகி அது பட்டி தொட்டிகளிலெல்லாம் நடைபெற்று பாமர மக்கள் பாராட்டுதல்களைப் பெற்றது என்று சொன்னால், திறன்ஆய்வுத் துறையில் இதற்கு ஒப்பானதொரு சாதனையை வேறு எந்த நாட்டிலாவது, எந்த மொழியிலாவது, எந்தக் காலத்திலாவது, யாராவது சாதித்து இருப்பார்களா என்பது சந்தேகமே!

கம்பனை வெறுத்து அண்ணா 'நீதி தேவன் மயக்கம்' என்கிற நாடகத்தை எழுதவில்லை. கம்பனை மதித்தே அந்த நாடகத்தை எழுதினார் என்பதுதான் உண்மை. இது குறித்து எனக்கும் அவருக்கும் சுவையானதொரு உரையாடலே நடைபெற்றது.

—தொடரும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

# தீண்டாமையை ஒழிப்போம்!

"இந்தியாவில் அரிசனங்களை ஒதுக்கித்
தனியே விடப்பட்டுள்ள பெருங்கொடுமையைப்
பார்த்தால், இதற்குச் சமமான கொடுமை
உலகத்தில் எங்குமே இருந்ததில்லை
என்று சொல்லத் தோன்றுகிறது."

— அண்ணல் காந்தியடிகள்.



**இக்கொடுமையை
ஒழிக்கப் பாடுபடுவதே
அண்ணல் காந்தியடிகளுக்கு
நாம் செய்யும்
நன்றிக் கடனாகும்!**

ஜெய்—

வெளியீடு :— இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு.

பதிவு எண். M. 8676

